



நேர்காணல்கள்



**சோ.ப**

மூலத்தின் செழுமையை
மொழிபெயர்ப்பில்
கொண்டு வர
முடியாதென்பதே உண்மை.



**அல் அஸூமத்**

கணினி வாசிப்பு
பெருகியிருக்கிறது.
எல்லோராலும் இது
முடிவதில்லை என்பது
ஒரு குறைபாடே.

# படிகள்

இருமாத இலக்கிய இதழ் - ஒக்டோபர் - நவம்பர் 2011 - இதழ்:29

**அன்பு ஜவஹர்ஷா**

அநுராதபுரம் தமிழ்
மொழிமூல கல்விப்
பின்னணியும்
ஐந்தாம் தர பரீட்சையில்
ஸக்கி அஹமதின்
சாதனையும்

**பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான**
**SDJFன் கிராமிய மட்ட கலந்துரையாடல்கள்**

60/-









குரலற்ற மக்களின் குரலாக
சமூக வலுவாக்க கருத்தியல்களுடன்
படிகளுடன் இணைகின்றது SDJF

Voice for a Cause

SDJF Forum

இலங்கை
அபவிருத்திக்கான ஊடக மன்றம்

SDJF
communication 4D
www.sdjf.org

Sri Lankan Development Journalist Forum

9 # Dudley Senanayeka Mawatha, Colombo - 09

Since 2003

நல்லன காணவும்
நல்லவற்றோடு
இணையவும்
முயல்பவர்களின் எண்ணிக்கை
சிறியதாக இருப்பினும்
அது,
முயற்சியின்மையிலும் பார்க்க
மேலானது


**கட்டுரைகள்**

அநுராதபுரம் தமிழ் மொழிமூல கல்விப் பின்னணியும் ஐந்தாம் தர பரீட்சையில் ஸக்கி அஹமட் இன் சாதனையும் - **அன்பு ஜவஹர்ஷா**

தமிழ் இலக்கியங்களுள் இஸ்லாமிய இலக்கியங்களின் சிறப்பு - **கலாபூஷணம் எஸ்.ஐ. நூகூர்கனி**

ஆடலும் இசையும் - **தம்பு சிவா**

**நேர்காணல்கள்**

கவிஞர் சோ.ப : **சந்திப்பு - எல். வஸீம் அக்ரம்**

கவிஞர் அல் அஸூமத் : **சந்திப்பு - முல்லா**

**மொழிபெயர்ப்பு**

இலங்கையின் பின்நவீனத்துவ முன்னோடி டெரிடா - **சப்ராஸ்**

**நிகழ்வு**

நண்பர் இலக்கிய குழு அங்குரார்ப்பணம் - **நேகம பஸான்**

**சிறுகதைகள்**

வரப்பு மேய்ந்த பயிர் (மொழிபெயர்ப்பு) - **எம்.எம். மன்சூர்**

தட்டி வீட்டில் ஒரு ஆசவாச ஒளிப்பிழம்பு - **ஆனந்தி**

**விமர்சனம்**

தீபச்செல்வனின் ஆட்களற்ற நகரத்தை தின்ற மிருகம் - **சித்தாந்தன்**

**கவிதைகள்**

ஃபஹீமா ஜஹான்
லுத்பியா லுக்மான்
தவசஜிதரன்
ஜன்சி கபூர்
வேல்நந்தன்
கன்னிமுத்து வெல்லபதியான்

**விவாதம்**

பெண்கள்: கிராமிய மட்டக் கலந்துரையாடல்கள் - **பஸ்லான் மொஹமட்**

கல்வி பெண்ணை வலுவூட்டுகின்றதா? - **றிஸ்னா றஸீன்**

பெண்களின் தொழில் ரீதியான சவால்கள் - **அஷ்ரஃப் எம். மாபீர்**

**ஆளுமை**

நோபால் பரிசு பெற்ற ஓரான் பாமுக் - **எல். வஸீம் அக்ரம்**


- ஆக்கங்கள் ஆக்கியோனுக்கே -


08வது ஆண்டில்

# படிகள்

இருமாத இலக்கிய இதழ்

ஒக்டோபர் - நவம்பர் 2011

ISSN 1800 - 4598
Volume: 08 No: 01

படிகள் : தனிச்சுற்று மட்டும்

- வெளியீடு -
**அநுராதபுரம்**
**நண்பர்கள் இலக்கிய குழு**

தனிப் பிரதி - 60.00
தபால் மூலம் - 70.00
வெளிநாடு - 2$

ஒரு வருட சந்தா - 400.00
இருண்டு வருடம் - 750.00
ஆயுள்ச் சந்தா - 5000.00

(வெளிநாடு இந்தியா 1000.00
லண்டன் 10 பவுண், வேறு நாடுகள் 15$)

வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவோர்
L.Waseem Akram Peoples Bank
228 2001 0 0018538 என்ற
இலக்கத்திற்கும்: காசோலை,
காசுக்கட்டளை அனுப்புவோர்,
பின்வரும் முகவரிக்கும்
அனுப்பவும்.



**சகல தொடர்புகளுக்கும்**

**PADIHAL PUBLICATION**
519/G/16, Jayanthi Mw,
Anuradhapura # 50000
**0783 244 255, 0713 48 50 60**
**071 84 234 59, 0771 877 876**
padihal@yahoo.com
www.padikal.blogspot.com

## உங்கள் பார்வைக்கு
## எங்கள் கருத்து ...

08வது ஆண்டில் படிகள் காலடி வைப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த 08 ஆண்டுகளில் அநுராதபுரப் பிரதேசத்திலிருந்து ஒரு தமிழ் இருமாத இலக்கிய இதழை தொடர்ச்சியாக கொண்டுவரக் கிட்டியமைக்கு எல்லாப் புகழும் இறைவனுக்கே !

படிகள் தொடர்வரவுக்கு அப்பால் படிகள் பதிப்பகம் ஊடாக இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. அதில் அநுராதபுர மாவட்ட தமிழ்க்கவிதைகள் தொகுதி ஒன்று முக்கியமான ஒன்றாகும். அதுதவிர மல்லிகை அநுராதபுரப் பிரதேச சிறப்பிதழ் எமது கூட்டிணைப்பின் இன்னொரு அடைவாகும்.

எதிர்வரும் காலங்களில் வடமத்திய மாகாண தமிழ் சாஹித்திய விழாவை நடத்தத் துணிய வேண்டியுள்ளது.

பரந்துபட்ட அளவில் வாழுகின்ற சிங்கள மக்களது கலை இலக்கியத்திற்கு கிடைக்கின்ற அங்கீகாரத்திற்கு இசைவாக வடமத்திய மாகாணத்தில் தமிழ் காலை இலக்கியத்திற்கான அங்கீகாரம் முக்கியமானதாகவுள்ளது.

இந்த அடிப்படையில் வடமத்தியமாகாண அதிலும் குறிப்பாக அநுராதபுர மாவட்ட தமிழ் கலை இலக்கியத்திற்கான அரச அங்கீகாரம் முக்கியமான ஒன்றாக இருப்பதனால் அதுபற்றிய பிரக்ஞையை அநுராதபுர மாவட்ட இளம் கலை இலக்கிய சமூக ஆர்வலர்களின் கவனத்திற்கு கொண்டுவர எண்ணுகின்றோம்.

அதற்கான முன்னேற்பாடுகளை படிகள் பதிப்பகம் தமது அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழுவின் அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பிக்க ஆவன செய்ய முனைகின்றது.

ஈழத்து இலக்கியத்திற்கு அநுராதபுரம் புதிய முகங்களைத் தரவல்லது என்ற அடிப்படையில் ஒரு நாள் இலக்கிய விழா ஒன்றை நடத்துவது பற்றி அவதானங்களைக் குவிக்க விளைகின்றோம்.

உங்களது பங்களிப்புகளை எதிர்பார்க்கின்றோம்.

– ஆசிரியர்


# படிகள்

இருமாத இலக்கிய இதழ்

இதழ் - 29

ஆலோசனை

கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா

பிரதம ஆசிரியர்

எல். வஸீம் அக்ரம்

உதவி ஆசிரியர்

எம்.சீ. நஜிமுதீன்

பதிப்பாசிரியர்கள்

நாச்சியாதீவு பர்வீன்

ஜன்சி கபூர்

இணைப்பாளர்

றிஸ்வி மகீரூப்

சஞ்சிகைக்குழு

சிவஸ்ரீ ஞானச்சந்திரன் குருக்கள்

அநுராதபுரம் றஹ்மதுல்லாஹ்

எம்.ஏ.எம். டில்சான்

அநுராதபுரம் ஜமீல்

ஏ.எச்.எம். ஸப்ராஸ்

நேகம பஸான்


## படிகளிலிருந்து ...

- கடந்த இதழில் வெளியான சகோதர எழுத்தாளர் உமா வரதராஜனின் மூன்றாவது சிலுவை என்ற நாவல் தொடர்பான கட்டுரை சகோதர எழுத்தாளரது உணர்வுகளை காயப்படுத்தியுள்ளதாலும், அவரை அபகீர்த்திக்கு உட்படுத்துவதாலும் சகோதர எழுத்தாளர் உமா வரதராஜன் அவர்களிடம் படிகள் ஆசிரிய பீடம் இத்தால் மன்னிப்பு வேண்டுகின்றது.

- கடந்த இதழில் வெளியான நேர்காணலில் (மு.பொ) வெளியிட்ட கருத்துக்களால் சகோதர எழுத்தாளர் சோலைக்கிளி அவர்களது உணர்வுகள் காயப்பட்டிருப்பதனால் அந்நேர்காணலில் இடம்பெற்ற அவ்வாறான கருத்துக்களுக்கு படிகள் ஆசிரிய பீடம் சகோதர எழுத்தாளரிடம் இத்தால் மன்னிப்பு வேண்டிக் கொள்கின்றது.

# அநுராதபுரம் தமிழ் மொழிமூல கல்விப் பின்னணியும் ஐந்தாம் தர பரீட்சையில் ஸக்கி அஹமட் இன் சாதனையும்

அன்பு ஜவஹர்ஷா

இம்முறை வெளியிடப்பட்ட ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 195 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூவரில் ஒரு ஆண் மாணவனாக அநுராதபுரம் மாவட்டத்தில் மட்டுமல்ல, அகில இலங்கை ரீதியில் முஸ்லிம் கல்வி வரலாற்றில் வியத்தகு சாதனை நிகழ்த்தியுள்ள அநுராதபுரம் மேற்கு தொகுதியைச் சேர்ந்த எம்.எஸ்.முஹமட் நலீம், கெகிராவைத் தொகுதியைச் சேர்ந்த எம்.எஸ். ஜெஸ்மின் காமிலா ஆகிய ஆசிரியத் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனான எம்.என். ஸக்கி அஹமட் இன் சாதனையை விளக்கும் இந்த கட்டுரையில் பின்தங்கிய மாவட்டமான அநுராதபுரம் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி, பொதுவாக புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான தகவல்களைத் தருவது இந்த சந்தர்ப்பத்தில் நல்லதொரு பதிவாக இருக்குமென எண்ணுகின்றேன்.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் பரப்பளவில் மிகப் பெரிய மாவட்டமான அநுராதபுரம் மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகை 2008ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி 8,86,945 ஆகும். இந்தத் தொகையில் 72,289 பேர்கள் முஸ்லிம்கள் ஆவர். இது 8.15 வீதமாகும். 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் போது இத்தொகை 62,797 பேர்களாக இருந்ததோடு 8.42 வீதமாக இருந்தது. இந்த வீதம் சற்றுக்குறைவடைந்தமைக்கு மத்திய கிழக்கு நாடுகளுக்கு இம்மாவட்டத்திலுள்ள 120 முஸ்லிம் கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம் பெண்கள், ஆண்கள் வேலைவாய்ப்பு பெற்று சென்றது ஒரு காரணமாக இருக்கலாம். வேறு சில காரணங்களும் இருக்கக்கூடும். இந்த முஸ்லிம் கிராமங்களில் 150க்கு மேற்பட்ட பள்ளிவாசல்களும் இருக்கின்றன. இந்த மாவட்டத்தின் தற்போதைய முஸ்லிம் வாக்காளர்களின் சரியான எண்ணிக்கையை அறிய முடியாமல் இருந்தாலும் இது அண்ணளவாக ஐம்பதாயிரத்துக்கு மேல் இருக்கும் என உறுதிப்பட கூற முடியும். இருந்த போதிலும் ஒவ்வொரு ஆண்டும் முஸ்லிம்கள் வாக்காளர்களாக பதியும் விடயத்தில் போதிய கவனம் எடுக்காமை சரியான எண்ணிக்கையாக இது இருக்காமைக்கு காரணமாகும்.

கல்வித்துறையை பொருத்த வரையில் இம்மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் தேசிய பாடசாலை உட்பட 62 முஸ்லிம் பாடசாலைகளும் 2 தமிழ் பாடசாலைகளுமாக 64 தமிழ் மொழி மூல பாடசாலைகள் உள்ளன. இப் பாடசாலைகளில் சுமார் 19,000 மாண வர்கள் தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவர் களுக்கு 1,075 ஆசிரியர்கள் கல்வி போதித்து வருகின்றார்கள். இது அகில இலங்கை மட்டத்தோடு ஒப்பிடும் போது 1:19 வீகிதமாக இருந்தாலும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், உயர் வகுப்புகளில் விஞ்ஞான, கணித, வர்த்தக பட்டதாரி ஆசிரியர்களின் குறை பாடு இம்மாணவர்களின் கல்வியை பாதிக்கும் பாரிய விடயமாகும். இந்த ஆசிரியப் பரம்பல் ஒரு சில பாடசாலை களில் மாணவர் தொகையோடு ஒப்பிடும் போது மேலதிகமாக இருப்ப தோடு பெரும்பாலான பாடசாலை களில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவு கின்றது. குறிப்பாக அநேகமான முஸ்லிம் பாடசாலைகளில் ஆங்கிலப் பாடத்தை பெரும்பான்மையின ஆசிரி யர்களே போதிப்பதால் மாணவர்கள் சரியான அடைவுகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளார்கள்.

மேற்சொல்லப்பட்ட பின்னணியோடு அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள கெகிராவை முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் எம்.என். ஸக்கி அஹமட் நிகழ்த்தியுள்ள சாதனையை ஒப்பு நோக்குவதே பொருத்தமானதாகும். இம்முறை வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் பரீட்சையின் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதை இங்கு குறித்துக் காட்ட வேண்டும். இலங்கையிலுள்ள 2,744 பரீட்சை நிலையங்களில் ஆகஸ்ட் 21ஆம் திகதி நடைபெற்ற இந்த பரீட் சைக்கு 3,13,450 மாணவ, மாணவிகள் தோற்றினார்கள். இலங்கை கல்வி வரலாற்றில் முதல் முறையாக மூன்று வாரத்தில் அல்லது 20 நாட்களில் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப் பட்டமை பெரும் சாதனையாகும். பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 31,000 மாணவர்கள்

புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கும் பிரபல பாடசாலைகளை பெறுவதற்குமாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இம் முறை சிங்கள மொழி மூல வெட்டுப் புள்ளி 143 லிருந்தது 156 வரை மாவட்ட ரீதியாக அதிகரித்து காணப் படுகின்றது. அதே நேரத்தில் தமிழ் மொழி மூல வெட்டுப் புள்ளியானது 145 லிருந்து 153 ஆக அதிகரித்துள்ளது. இதுவும் இங்கு விசேடமாக சுட்டிக் காட்டப்பட வேண்டிய விடயமாகும். சராசரியாக 75% வீதத்திற்கு மேல் புள்ளிகளை பெற்றவர்களே இங்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள். இது மொத்த எண்ணிக் கையின் 10% நெருங்கிக் கொண்டிருக் கின்றது. முதல் 10 இடங்களை பெற்றுள்ள 19 மாணவர்களில் 3 முஸ்லிம் மாணவர்களும், 3 தமிழ் மாணவர்களும் இருப்பது விசேடமாக குறிப்பிடப்பட வேண்டியதென்பதோடு இந்த 19 மாணவர்களும் கொழும்பு, கண்டி, காலி போன்ற வசதி கூடிய பிரதேசங்களை சேராத பின்தங்கிய மாவட்ட மாணவர்களாவர் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அநுராதபுர மாவட்டத்தை பொருத்த வரையில் பரீட்சைக்கு தோற்றிய 1,629 தமிழ் மொழி மூல மாணவர்களில் சுமார் 80 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். 10 மாண வர்கள் அநுராத புரம் ஸாஹிரா மகா வித்தியாலயத்திலிருந்தும், 8 மாணவர்கள் கலாவெவ முஸ்லிம் மகா வித்தியால யத்திலிருந்தும் 7 மாணவர் கள் மதவாச்சி முஸ்லிம் மகா வித்தியால யத்திலிருந்தும் தெரிவு செய்யப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அகில இலங்கை தெரிவு மட்டம் 10% மாக இருக்கும் போது அநுராதபுரம் மாவட்ட தமிழ் மொழி மூல தெரிவு மட்டம் 5% ஆக இருப்பதற்கு காரணம் ஆசிரிய வளங்களோடு இங்குள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் வேறு வளங்களும் குறைவாக இருப்பதாகும்.

கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இம் மாவட்ட கல்வித்துறை மட்டுமல்ல, இலங்கையின் கல்வித் துறை தொடர்பான தகவல்களை சேகரித்து பதிவுகளை செய்து வரும் ஓய்வு பெற்ற அதிபர் என்ற வகையில் பின்தங்கிய, வளங்கள் குறைந்த அநுராத புரம் மாவட்டத்திலிருந்து ஒரு தேசிய சாதனையை நிகழ்த்தி, முஸ்லிம்களின் கல்வி வரலாற்றின் ஒரு அரிய பதிவை செய்துள்ள இன்றைய எமது கதா நாயகன் எம்.என். ஸக்கி அஹமட் தொடர்பாக பின்வரும் விபரங்களை தருவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

பரீட்சை பெறுபேறு வெளி யிடப்பட்ட மறுதினமே ஜனாதிபதி அவர்களிடம் அலரி மாளிகையில் வைத்து கௌரவம் பெற்ற சந்தர்ப்பத்தில் மற்ற இரண்டு 195 புள்ளிகளைப் பெற்ற பெரும்பான்மை மாணவர்களோடு ஒப் பிடும் போது விசேடமாக காட்சியளித்த ஸக்கி அஹமட் பரீட்சை முடிவு வெளிவந்த அன்று தமிழ், சிங்கள ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக் களில் இருந்த தெளிவு அந்த மாண வனின் இரு மொழி ஆற்றலை வெளிப் படுத்தி இருந்தது. தான் தனிப்பட்ட வகுப்புக்கள் எதற்கும் செல்லவில்லை என்றும், பாடசாலை ஆசிரியரிடமும், பெற்றோர்களிடமும் மட்டுமே கல்வி கற்றதாகவும் கணிதமும், கிரிக்கட்டும் தனக்கு விருப்பமான இரண்டு விடயங் கள் என்றும் எந்தவித கூச்சமும் இன்றி தெளிவாக ஊடகங்களுக்கு தெரிவித் திருந்தார். அத்தோடு இவர் தனது எதிர்கால நோக்கம் பொறியியலாளர் ஆகவேண்டும் என்பதை சிறிய வயது முதலே சொல்லி வந்துள்ளார். தாயும், தந்தையரும் ஆசிரியர்களாக இருந்ததும், இவரது வளர்ப்புத் தாயாக இம்மாவட் டத்தின் கல்வியியலாளர்களின் ஒரு வரான, ஓய்வு பெற்ற அதிபர் ரஹூமா உம்மா நாஹூர்பிச்சை இவருக்கு ஊக்கு விப்பு அளித்ததும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய விடயங்களாகும்.

இவரது வகுப்பாசிரியர் எஸ்.எல்.எம். நிசாயா கருத்துத் தெரிவிக் கையில், இம்மாணவன் வகுப்பில் மிக அவதானத்துடனும், ஊக்கத்துடனும் கல்வி கற்றதாகவும், அன்றாட கல்விப் பணிகளை கிரமமாக செய்து வருவதும், பாடங்களை வீட்டில் மீட்டி வருவதும், வழமையான நடைமுறைகள் எனக் குறிப்பிட்டார். அத்தோடு இப்பாட சாலையிலிருந்து ஒரு மாணவி ஜனாதி பதியிடம் பரிசு பெற்றதை நினைவில் வைத்து அடிக்கடி எனக்கும் பரிசு கிடைக்குமா என்ற வினாவை எழுப்பி வந்ததையும் தான் நன்றாக படித்து முதல் நிலைப்புள்ளி பெற்றால் நிச்சயமாக ஜனாதிபதியின் கையால் பரிசை பெறலாம் என்று கூறி ஊக்குவித்த தையும் குறிப்பிட்டார். அந்த ஊக்கு விப்பு இன்று சாத்தியமானதை இந்த ஆசிரியை மிகவும் பெருமையோடு தெரிவிக்கின்றார்.

இம்மாவட்டத்தின் முஸ்லிம் கல்விப் பணிகளில் கணிசமான பங்களிப்பை செய்து வரும் *FAME* என்ற அநுராதபுர முஸ்லிம் கல்வி அமைப்பின் செயலாளரும், வடமத்திய மாகாண கல்வித் திணைக்கள தமிழ் பிரிவிற்கு பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளருமான ஈ. பீர்முஹமட் இந்த மாணவரை விசேடமாக கௌர விப்பதோடு, மற்றைய 80 மாணவர் களையும், புலமைப்பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற தமிழ் மொழி மூல மாணவர்களையும் கௌரவிப் பதற்காக FAME அமைப்பு ஏற்பாடு செய்து வருவதாக குறிப்பிட்டார்.

அநுராதபுர நகரில் பல கல்வி, சமய, கலை இலக்கிய, சமூக பணிகளுக்கு பெரு மனதுடன் உதவி வரும் சீ.டீ.சீ நிறுவன உரிமையாளர் அல்ஹாஜ் எச்.எஸ்.ஏ. முத்தலிப் இந்த விழாவை நடத்துவதற்கு பூரண அனு சரணை அளிக்க முன்வந்துள்ளமை இங்கு முன்னுதாரண மாக குறிப்பிட வேண்டிய விடயமாகும். ■

■ அநுராதபுரம் ஜான்சி கபூர்

# நிஜங்களின் வலி

காற்றின் சிதைப்புக்களால்....
காணாமல் போன கனாக்கள்
மனப் பாறைக்குள்
ஏக்கமாய் விக்கலெடுக்கும்!

விழி முடிச்சுக்களில்....
விழாமல் நழுவும் உறக்கத்துக்காய்,
நடு சாமம் இன்னும்....
காத்துக் கிடக்கும்!

உன் நினைவுகளின்
எதிரொலிப்பால்......என்
சுவாசிப்புக்குள்ளும் -உன் முகம்
சுவடு பதிக்கும் !



பாலைவன நீரூற்றாய்..
பாசம் தரும் - உன்
அருகாமைக்காய்
என் ஆத்மாவும் காத்துக் கிடக்கும்!

என் கிராம விழுதுகளில்.......
பதிவான
உன் பெயரை உச்சரிக்க
வார்த்தைகள் தவம் கிடக்கும்!

பெரு மூச்சின்.....
அகராதிக்குள் அப்பிக்கிடக்கும்
உன் ..........
பிரிவின் ரணப் பொழுதுகளின்
கணங்களால்
இருதயம் வியர்த்துக் கொட்டும்!

நிலாக் கசிவின் சிதறல்களில்
உன் சிரிப்பின் சிந்தல்
வேராகி - என்
ஞாபகப் பூமியைக் கௌவிப் பிடிக்கும்!

தொலைந்து போன
வசந்தத்தின் விசாரிப்புக்காய்
நாட் பூக்கள் நாடி தளர்ந்து
காத்திருக்கும்!

என் விசாரிப்புக்களால்
உன்னுயிர்......கூட
மருதாணிச் சாறை நனைத்து
நாணிக்கிடக்கும்!

இத்தனைக்கும் நீயோ ...........!
யதார்த்தங்களின் நச்சரிப்பால்
வேற்றவனாய் - என்னை
வேவு பார்க்க...
நாளோ நாடி அறுத்து..
சோகத்துள்
சமாதியாகின்றேன்....!

ஆறு மாதங்களுக்குப் பிறகு அன்று தான் நான் எனது ஊருக்குப் புறப்பட்டேன். எனது பெரிய மாமாவின் இளைய மகனின் மரணச் சடங்குகளில் பங்கு கொள்வதற்காக மாமாவின் மூன்று பிள்ளைகளில் மூன்றாவது மகனான அவன் படிப்பில் சூரன். கிராமப் பாடசாலையில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் தேரியவுடன் கொழும்பில் உள்ள பிரபல ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வந்தான். கல்வி கற்றல் முற்றுப் பெற முன் அவன் காலஞ் சென்றதை எனது மாமா ஒரு பேரிழப்பாகவே கருதினார்.

எனது மாமா தனது இளைய மகனை ஆசையுடன் கல்வி கற்க வைத்தது மாபெரும் மாணிக்கக் கல்லை தோண்டி எடுக்கும் முயற்சியைப் போன்றது. கிடைத்தால் மாபெரும் தனவந்தன் கிடைக்காவிட்டால் பிச்சைக்காரன். காரணம் மகன் கற்றுத் தேர்ந்தால் சிறந்ததொரு உத்தியோகத்தைப் பெற்று உயர்ந்த நிலையை அடைய முடியும். அல்லா விட்டால் மிகவும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவான். தனது முழு எதிர்பார்ப்பும் நிராசையாகி அகாலத்தில் தனது மகன் மரணமாகிப் போனதால்தான் அதனை ஒரு பெரும் இழப்பாகக் கருதினார்.

நான் ரயிலில் இருந்து இறங்கி ஒரு மாட்டு வண்டியைப் பிடித்து கிராமத்துக்குள் பிரவேசிக்கும் போது மாலை மூன்று மணியாகியிருந்தது. பெருந்தெருச் சந்தியில் இருந்து கிராம சபைப் பாதைக்குள் வண்டி நுழையும் போது எனது மனதுக்குள் இனந்தெரியாததொரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. முன்னர் மழைக் காலங்களில் சேரும் சகதியுமாகிக் போகும் இப்பாதைக்கு கிரவல் பதித்து நன்றாகச் செப்பனிடப்பட்டிருந்தது. சுற்றுத் தொலைவில் காணப்பட்ட சிறிய நீர்த் தேக்கத்தில் மெல்லென வழிந்தோடும் நீர் நிரம்பியிருந்தது. இதுனை முன்னர் புற்பூண்டுகளும், நீர்வளத் தாவரங்களும் மூடிக் கொண்டிருந்தன.

" கிராம சபைகளின் மூலம் இப்படியான பாதைகள் திருத்தப்படுகின்றதே"

மாட்டு வண்டிக் காரனைப் பேச்சுக்கு இழுக்கும் நோக்குடன் நான் அப்படிக் கூறினேன். ஆனால் அவன் ஒன்றும் பேசவில்லை கையில் இருந்த பிரம்பினால் மாட்டின் முதுகில் ஒரு இலேசான தட்டுத் தட்டி விட்டு தனது வலது காலை மாட்டின் இரு தொடைகளுக்கும் இடையில் ஓட்டினான். மாடு சிறிது தூரம் கூச்சம் தாங்காமல் வேகமாக ஓடிய பின் மீண்டும் பழைய நிலைக்கே வந்தது. பாதையோரத்தில் இருந்த நாயொன்று குட்டையோரத்தில் இருந்த பற்றைகளைப் பார்த்து குரைத்தது. அங்கு ஒரு கபரகொய்யா பற்றைகளை வாலால் வெட்வெட்டி அசைந்து கொண்டிருந்தது. நாய் குரைத்த வண்ணம் பின்வாங்கிக் கொண்டிருந்தது. திடீரென மாட்டு வண்டியின் சில்லு சேற்றில் புதையுண்டு கல்லொன்றில் மோதுண்டு நின்ற போதுதான் எனது கவனம் மீண்டும் திரும்பியது. கிரவல் கொண்டு செப்பனிட்ட பாதையில் வண்டியின் சில்லு புதையுண்டது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

"பெருந்தெருவில் இருந்து சிறிது தூரம் வரும் வரை பாதை நன்றாகத்தானே இருந்தது"? என வண்டிக் காரனிடம் கேட்டேன்."

"ஆமாம், இந்த இடத்தில் வேறு விதமாகச் செய்திருக்கிறார்கள்" என்று சொல் லிய வண்ணம் வண்டிக் காரன் புதைந்து போன வண்டிச்சில்லை உருட்டிக் கிளப்பினான்.

சிங்கள மொழிபெயர்ப்புச் சிறுகதை

# வரப்பு மேய்ந்த பயிர்


தமிழில்
கலாபூஷணம் எம்.எம். மன்ஸூர்
மாவனல்லை

சிங்களத்தில்
மாடின் விக்ரமசிங்க.

"யார் இந்தப் பாதையைச் செய்தது?"

வண்டியில் ஏறிக்கொண்ட வண்டிக் காரன் ஊமையைப் போல ஓட்டலானான்.

"பெரிய ஏமாற்று வித்தைதான் செய்திருக் கிறார்கள்" வண்டிக்காரனை மறுபடியும் பேச்சுக்கு இழுக்கும் நோக்குடன் கூறினேன்."

"அடியில் சேற்றைப் போட்டு மேலால் கிரவல் இட்டு மண்ணைப் போட்டு மூடி பாதையைச் செய்திருக் கிறார்கள்" என நான் சொன்னேன்" யாராயினும் கிராம சபைக்குச் செய்திருப்பது மாபெரும் களவு வேலைதான்"

"இந்தப் பாதைக்கு செலவு செய்த பணத்தில் நல்ல முறையில் கிரவல் பதித்துச் செய்திருந்தால் இப்படி மோசமாயிராது"

"பாதையின் இரு பக்கமும் தோண் டிய காணில் இருந்து எடுத்த சேறுதான் இது" அதுவரை ஊமையாய் இருந்த வண்டிக்காரன் கூறினான்.

"பாதையின் இரு புறமும் நீர் நிரம் பிய காணைக் கண்டேன் தான், வண்டியோட்டி சொல்லும் வரை ஊகிக்க முடியாமல் போனதே! என்னை நொந்து கொண்டேன்.

"யார் இத்தகைய மோசமான வேலையைச் செய்தது?" வண்டி ஓட்டி பதில் சொல்வதற்குப் பதிலாக இலேசாகச் சிரித்துக் கொண்டான்.

"உண்மையிலேயே கிராம சபைப் பணத்தை கையாள்வது யார்?"

"கிளார்கர் ஐயாவுக்கு யார் இந்தப் பாதை போடும் ஒப்பந்தத்தை செய்து கொண்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும் அப்படித்தானே?"

"ஆம்"

"கிளார்க்கர் ஐயா உங்கள் சித்தப்பா மகன் பொடிராலாஹாமி தான் அந்த ஒப்பந் தக்காரர்"

"பொடிராலஹாமி எனது சித்தப்பா மகன்களில் ஒருவன்தான்" கிராமவாசிகள் என்னைக் "கிளார்க்கர் ஐயா" என்று அன் போடு அழைப்பார்கள். கொழும்பில் ஒரு கம்பனியில் லிகிதராகக் கடமையாற்று வதால்தான் அந்தப் புனைப்பெயர் கொண்டு என்னை அப்படி அழைக்கிறார்கள்.

வாயைச் சும்மா வைத்துக் கொண்டு இருக்க முடியாமல் இப்படிக் கேட்டேன்

"பொடிராலஹாமியின் மகன் கிராம சபையில் ஒரு பிரதிநிதிதானே"

"ஆம்"

"அப்படியானால் அவனுக்கு ஒப் பந்தம் எதுவும் எடுக்க முடியாது."

"அல்லிஸ் என்ற பெயருக்குத்தான் ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்"

"அல்லிஸ் என்பவன் ஊரில் பெரிய சண்டியன்" நாற்றம் எடுக்கும் குப்பையைக் கிளற மனம் இல்லாததால் ஒன்றும் பேசாமல் இருந்து விட்டேன். வண்டி மாமாவின் வீட்டு முற்றத்தில் போய் நின்றது நான் இறங்கிக் கொண்டேன்.

மாமன் மகனின் இறுதிக் கிரிகைகள் மிகவும் ஆடம்பரமான முறையில் செய்யப் பட்டது. தேக்க மரப் பலகையால் செய்யப்பட்ட சவப்பெட்டி பள்ளக்கில் வைத்துக் கொண்டு செல்லப் பட்டது. தவில் வாசிப்பவர்களும், மேள தாளக்காரரும் மாத்திர மல்லாமல் பாண்டு வாத்தியக்காரரும் மரண ஊர் வலத்தில் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அறுபது எழுபதாயிரம் (அக்காலத்தில்) ரூபா செலவில் அலங்காரப் பந்தலும் போடப்பட்டு இருந்தது.

தனது பிள்ளையின் சடலத்துடன் கூடிய பிரேதப் பெட்டியை குளியில் வைக்கும் போது மாமாவும், மாமியும் எழுப்பிய அழு குரலால் என்றுமில்லாதவாறு எனது இதயம் கூடேரிப் போனதை என்னால் என்றும் மறக்க முடியாது. என்றும் மரணக்கிரியைகளின் போது கண்ணீர் வடிக்காத எனது வழிகள் கண்ணீர் அஞ்சலி செய்தன.

திரும்பி வீடு சென்ற போது மாமா வின் பேச்சு வார்த்தைகளிலிருந்து அவரது சோகம் ஓரளருக்குக் குறைந்து விட்டதை அறிய முடிந்தது. என்றாலும் மாமியின் சோகம் இலகுவில் குறைவதாகத் தெரிய வில்லை. ஆனால் மாமாவுக்கு காலஞ் சென்ற மகனைப் பற்றியோ, தனது குடும்ப எதிர்காலத்தைப் பற்றியோ கவலை யில்லை. எல்லாம் அந்த மரணச்சடங்குகள் பற்றிய செய்தி ஒன்றை பத்திரிகையில் வெளியிடுவது பற்றியே அவர் சிந்தித்தார்.

"பாண்டு வாத்தியக் கோஷ்டியைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்" மாமா மரணச் சடங்குகளைப் பற்றிய செய்தியை எழுத முயற்சித்துக் கொண்டிருந்த கிராமத்தின் இளம் பண்டிதர் ஒருவருக்குச் சொல்லுவது எனது காதுகளில் இலேசாக விழுந்தது.

இரவு உணவை உண்டதன் பின்னால் மாமா மீண்டும் பெருமூச்செரிய லானார். சோகத்தில் ஆழ்ந்தார்.

மகனை இழந்ததை நினைத்து பெரு மூச்செறிந்தார். மரணச் சடங்கிற்குச் செலவு செய்த பெறு மதியை நினைத்து சோர்ந்து போனார்.

"நான் கடனாளியாகி விட்டேன். இருக்கும் இடமும் அற்றுப் போகும் போல் தெரிகிறது. மகனைப் படிப்பிப்பதற்காக கடன் பட்டேன். வீட்டையும், காணி யையும் ஈடு வைத் துப் பெற்ற பணத்தால்தான் மரணச் சடங்கு களைச் செய்தேன்" என பிதற்றலானார்.

"கஷ்டப்பட்டு ஏன் அவ்வாறு செலவு செய் தீர்கள்?" "செலவழிக்காமல் என்ன செய்வது" பாண்டு வாத்தியக் காரனுக்கு நூறு ரூபாய், பள்ளக்குக் காரனுக்கு நாற்பது ரூபாய், மயான அலங்காரங் களுக்காக நூறு ரூபாய், தவில் வாத்தியக் காரருக்கு இருபது ரூபாய் இப்படிப் பல செலவுகள்." (அந்தக் காலச் செலவுப் பெறுமதி)

"இவற்றுக்குச் செலவு செய்யாமல் மரணச் சடங்கை சாதாரணமாகச் செய்திருக் கலாமே?" நான் கேட்டேன்.

"சாதாரணமாகவா?" நாங்கள் மாத்திரம் சாதாரணமாகச் செய்யவா? சிறிமல், அவனது மகன் இறந்த போது பாண்டு வாத்தியம் கொண்டு வந்தான், மயானத்தின் நான்கு மூலைகளிலும் மச்சு வீடு நான்கு கட்டுவித்தான். மூன்று நிகாயாக்களையும் சேர்ந்த ஐம்பது பிக்குமார்களை அவன் வரவழைத்தான்.

"சிறிமல் என்று சொன்னது தற்போது பதவியில் இருக்கும் கிராம சபைத் தலைவரைத்தானே?"

"ஆம் கிராமசபைத் தலைவர் தான்" சபைத் தலைவரானாலும் தொந்தியஸ்ஸின் மகன்தானே! தொந்தியஸ்ஸின் மகனுக்கு பாண்டு வாத்தியம் கொண்டு வர முடியுமானால், வெள்ளை விரிப்பு விரிக்க முடியு மானால் ஏன் எம்மால் முடியாது என மாமா சொன்ன தையும் மீறிய கர்வத்தில் அவர் சொன்னார்.

வரப்பே பயிரை மேய்கிறது என்ற பழமொழி எனது உள்ளத்தில் எழுந்தாலும் வாயால் வெளிவர வில்லை.

■

---

படிகள் சஞ்சிகையை
வாசித்துக்கொண்டிருக்கும்
இலக்கிய ஆர்வலர்கள்
நண்பர்கள் அனைவருக்கும்
இனிய தீபாவளி
புனித ஹஜ்ஜுப் பெருநாள்
நல் வாழ்த்துக்கள்

---

நீங்கள் அநுராதபுரத்திலிருந்து
தொடராக வெளிவரும்
படிகள் சஞ்சிகையை
வாசித்து வருகின்றீர்கள்
இவ்விதழின் தொடர் வரவுக்கும்
வளர்ச்சிக்கும் வாசக நெஞ்சங்களின்
சந்தாக்கள் இன்றியமையாத ஒன்றாக
இருக்கின்றன.
சிரமம் பாராது
உங்கள் சந்தாக்களை பதிவு செய்து
இதழின்
வளர்ச்சியில் பங்காளர் ஆகுங்கள்.

## மெட்காவின் துடிப்பு மலர் வெளியீடு

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக வைத்தியபீட
முஸ்லிம் மாணவர்கள் ஒன்றியம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக வைத்தியபீட மாணவர்களின் (மெட்கா) "துடிப்பு" முதலாவது இதழ் அறிமுக விழா கடந்த மாதம் அநுராதபுரம் சீ.டி.சீ. வரவேற்பு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மேற்படி மாணவர்களின் கடந்த 5 ஆண்டுகால சமய, சமூக, கல்வி மற்றும் கலை இலக்கிய ரீதியலான செயற்பாடுகளும் அவர்களது எதிர்கால செயற்பாடுகளும் இந்நிகழ்வில் பகிர்ந்துகொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"துடிப்பு" மலர் பற்றி அறிமுகவுரையை கலாபூசணம் அன்பு ஜவஹர்ஷா நிகழ்த்தினார். அவரது உரையில் உயர் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள், இலங்கை முஸ்லிம்களின் கல்விச் செல்நெறியும் விருத்தியும், சமூக மாற்றங்களின் பின்புலத்தில் பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களது வெளியீடும் உள்ளிட்ட பல்வேறு தரவுகளின் புதையலாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அநுராதபுரம் சமூகசேவையாளர்களில் ஒருவரான அல்ஹாஜ் முத்தலிப் அவர்கள் முதற்பிரதியை பெற்று நிகழ்வை சிறப்பூட்டினார். இந்நிகழ்வில் புத்திஜீவகள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியாலாளர்கள், மாணவர்கள், வைத்தியர்கள் என பலர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

செவ்வி

# ஈழத்தில் இலக்கிய விமர்சனம் - மொழிபெயர்ப்பு விமர்சனம் உட்பட ஆரோக்கியமானதாய் இல்லை. நாங்கள் ஒரு சிறு வட்டம். தமிழ் நாட்டோடு ஒப்பிடுகையில் ஒரு சிறிய குழுவினர். மனசில்படுவதை விமர்சகர்கள் எழுதத் தயங்குகிறார்கள் ...



கவிஞர் சோ.ப

**ஒரு படைப்பாளியின் உருவாக்கப் பின்னணியில் அவனது ஆளுமை வளர்கின்றது என்ற அடிப்படையில் உங்களது ஆரம்பகால எழுத்து முயற்சிகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.**

ஒரு படைப்பாளியின் பின்னணி என்று சொல்லும் போது குடும்பப் பின்னணி ஒரு கூறு. அடுத்தது அவன் வாழ்ந்த சமூகச் சூழல், இரண்டுமே அவனுடைய ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும். மருதமும் நெய்தலும் மயங்கும் நிலம் நான் பிறந்த மண். இருபுறமும் நெல்வயல்கள், வயல்கள் நடுவிலே மணற்குன்றுகள் மண் அரணுக்குள் சோலையாக விளங்கும் சுடுகாடு அப்பால் நாவாந்துறைக் கடல், தோணிகள். தொடுவானில் இரட்டைப்பனை, இரவிரவாக ஏற்றப்பட்ட பட்டத்திலிருந்து கூவும் "விண்". அந்த அநுபவங்கள் என் காலில் கட்டிய சலங்கைதான் என் கவிதையில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. எனது குடும்பம் சராசரி மத்திய தரக் குடும்பம். நான், என்தாய் மாமனால் வளர்க்கப்பட்டவன். அவர் சுருட்டு வணிகம் செய்தவர். 10- 15 தொழிலாளர்களை வைத்து சுருட்டுத் தயாரித்து தென்னிலங்கைக்கு அனுப்புவது அவர் தொழில். மாமாவின் சுருட்டுக் கொட்டிலில் நான் மகாபாரத, ராமாயணக் கதைகளை செவிவழிக் கற்றவன். அந்தப் பண்பாடு வாய்ப்பு - இன்றில்லை.

1946 - 1949 காலப்பகுதியில் கிருபானந்த வாரியார் யாழ்ப்பாணம் எங்கும் கதாப்பிரசங்கம் நிகழ்த்தி வந்தார். தமிழிலக்கியத்தில் எனக்கு தாகம் ஏற்பட்டது அந்த இளம் பருவத்தில் வாரியார் பேச்சைக் கேட்டுத்தான்.

யாழ் இந்துக் கல்லூரி வாழ்க்கை பத்து வருடங்கள். அங்கு தான் வித்துவான் கார்த்திகேயன் என்னைத் தமிழ்க் கவிதைக்கு ஆற்றுப்படுத்தினார். என் ஆங்கில ஆசிரியர் வடபகுதிக்குப் பொதுவுடைமைக் கோட்பாட்டை அறிமுகம் செய்த மு.கார்த்திகேசன். அவருடைய முற்போக்குக் கொள்கை இன்றும் என்னை நெறிப்படுத்துகிறது.

**உங்களது ஆரம்ப காலங்களில் மரபுக் கவிதைகளின் வீச்சம் நிறைந்திருந்தது. அப்படி அது இருந்தமைக்கு காரணமாக இருந்த இலக்கியச் சூழல் பற்றிக் குறிப்பிடுங்கள்? உண்மையில் மரபுக் கவிதைகள் சாதரண வாசகனை அடைந்ததாக நம்ப முடியுமா?**

ஆரம்ப கால எழுத்து முயற்சியே கவிதை தான் 15 வயதுக்குள்ளேயே நிறைய செவ்வியல் இலக்கியங்களைக் கேட்ட அநுபவம் - பரிசயம் - அந்தத் தடத்திலேயே என்னை இட்டுச் சென்றது. மரபுக் கவிதையின் ஓசை என் காதை நிரப்பியிருந்தது. "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?" இந்த வடிவம் சாதாரண வாசகனைச் சென்றடைந்ததா என்று கேட்கிறீர்கள். காலங் காலமாக, பக்தி இலக்கியம் இந்த மரபு சார் வடிவத்தைத் தானே பயன்படுத்தி வந்தது! எழுத்தறிவற்றவர்கள் கூட கேள்வியினால் மட்டும் - இலக்கியங்களை ஞாபகத்தில் வைத்திருக்க செய்யுள் வடிவம் உதவியது.

உரையாடல்: எல். வஸீம் அக்ரம்

இந்நாளில் கவிதையை எழுத்தில் - பிரதியில் - படித்துப் பழகிவிட்டீர்கள். கவிதை காதால் கேட்கப் படுவதும் கூட, என்பதை மறந்து விடக்கூடாது, எழுபது எண்பது தொண்ணூறுகளில் மரபுக் கவிதைதான் கவியரங்குகளில் கொடிகட்டிப் பறந்தது.

*செய்யுள் வடிவங்கள் தெரிந்தவர்கள் தான் கவிஞர்களாக முடியும் என்று சொல்கிறீர்களா?*

இல்லை. சங்கீதம் படிக்காத சிலர் கேள்வி ஞானத்தால் அற்புதமாகப் பாடக் காண்கிறோம். அதுபோல், மரபு வடிவங்களில் பரிச்சயம் உடையவர் களால் நல்ல கவிதை புனைய முடியும்.

*குறிப்பிட்ட சிலவடிவங்களைச் சிபாரிசு செய்ய முடியுமா?*

சில வடிவங்கள் சில பொருள்களைப் பாட ஏற்றவை. வெண்பாவை அறங்களைச் சொல்ல உகந்த வடிவமாக முந்தையோர் கண்டு பயன்படுத்தியுள்ளனர். "வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?" (பாரதி தாசன்) என்ற மிடுக்கான சந்தம் போர்க் குணத்துக்குப் பொருந்தமானது.

*இக்காலத்தில் எவை எவை புழக்கத்தில் உள்ளன?*

பாரதி அதிகம் பயன்படுத்தியது சிந்து, பாரதிதாசனுக்கு எண்சீர் விருத்தம் வாலாயமானது. புதுவையும் நானும் கலியோசையை அதிகம் பயன்படுத்தி வந்தோம்.

*பழைய பாவடிங்களை இக்காலத்தில் பயன் படுத்துவோர் தொகை அருகிவருகிறதே?*

அதற்காக? அவ்வடிவங்களை வழக்கொழிந்து போனதாகக் கருதி ஒதுக்க வேண்டுமா?. மு.பொ பெரிய படிப்பாளி! நான் மதிக்கும் படைப்பாளி. அவருக்கு செய்யுள் நடை allergic! என்ன செய்யலாம்!

*உங்களது நினைவுச் சுவடுகள், சுவட்டெச்சம் என்பன புதிய முயற்சிகள் இதன் தனித்தவம் பற்றிய நீங்கள் கண்ட அநுபவம் என்ன? அவை பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

"நினைவுச் சுவடுகள்" மற்றும் "சுவட்டெச்சம்" ஆகியவை புதிய முயற்சிகள் தாம், உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை அவை ஒரு சமூக வரலாறு. உருவத்தைப் பொறுத்தவரை புதுக்கவிதைக்குப் புதிய சாத்தியப்பாடுகளை இவை சுட்டுகின்றன என சிவசேகரமும் சேரனும் குறிப் பிட்டுள்ளனர்.

மரபுக்கவிதையின் ஓசைக்குப் பழக்கப்பட்ட என்னால் முற்றுமுழுதாக அதிலிருந்து விடுபட முடியாது என்று சிவசேகரம் சொல்வதையும் ஏற்றுக் கொள்கிறேன். ஆரோக்கியமான விமர்சனம் அது. ஆனால் ஒரு சில நண்பர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டதற்காக என்மீது குறை கண்டுள்ளனர். நான் என் நிலையிலிருந்து "தாழ்ந்திருக்கக்" கூடாது என்பது அவர்கள் கருத்து. எழுதுவது தான் என் கடமை. ஏற்பதும் நிராகரிப்பதும் வாசகனுடைய விருப்பம். அதில் நான் தலையிடக் கூடாது.

*ஈழத்தில் நிகழ்ந்துள்ள மொழிபெயர்ப்புக் கவிதைகள் பற்றி உங்களது மதிப்பீடு என்ன? உங்களது ஆபிரிக்க கவிதைகள் தொகுதி பற்றிக் குறிப்பிடுங்கள்.*

கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகளில் விபுலாநந்தர், கிங்ஸ்பெரி, இரத்தினம். முருகையன், சிவசேகரம், நுஃமான் முதலிய பலர் ஈடுபட்டனர். கெக்கிராவ சகோதரிகளின் பணியும் குறிப்பிடத்தக்கது. இவையாவும் ஆங்கிலத்திலிருந்தும் ஆங்கில வாயிலாகவும் தமிழுக்கு வந்தவை. சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மூலங்களிலிருந்து மொழிபெயர்ப்பதில் நவாலியூர் நடராசன் முதலியோர் ஈடுபட்டனர். சிங்களத்திலிருந்து தமிழுக்குப் புனைகதை வந்த அளவுக்குக் கவிதை வரவில்லை என நினைக்கிறேன். ஆயினும் M.H.M ஷம்ஸ், திக்வெல்ல கமால், இப்னூ அஸ்மத், மடுளுகிரியே விஜேரத்ந முதலியோரே சிங்களத்திலிருந்து தமிழாக்கம் செய்பவர்களில் குறிப்பிடத்தக்கோர்.

"ஆபிரிக்கக் கவிதை" (மொழிபெயர்ப்பு) என் இலக்கிய முயற்சியில் முக்கியமானது. ஏன் ஆபிரிக்கக் கவிதையைத் தேர்ந்தெடுத்தேன் என்பதற்கான காரணத்தை முருகையன் அணிந்துரையில் விளக்கியிருந்தார். நான் ஆங்கில இலக்கியம் கற்பிப்பவனாய் இருக்கிறபோதும் பிரித்தானிய கவிதையில் உள்ள ஈடுபாடு குறைந்தது. மூன்றாம் மண்டல கவிதையில் ஈடுபாடு அதிகரிக்கிறது. ஆபிரிக்க அநுபவமும் ஆசிய அநுபவமும் சமாந்தரமானவை. இரு கண்டங்களின் பண்பாடுகளிலும் பொது அம்சங்கள் பல உண்டு. சோல்லப் போனால் நாங்களும் Negroid இனத்தவர் தாம்.

*மொழிபெயர்ப்புக்களில் மொழிபெயர்ப்பாளரின் சுயம் அதீதமடைந்துவிடுவது மொழிபெயர்ப்பை மலினப் படுத்துவதாக சிலர் கருதுகின்றனர். இது உங்களின் அனுபவப்படி உண்மையா?*

மூலத்தின் செழுமையை மொழிபெயர்ப்பில் கொண்டு வரமுடியாதென்பதே உண்மை. "ஒரு கவிதையின் சிறந்த பகுதி மொழிபெயர்ப்பில் இழக்கப்படுகிறது" என்று Robert Frost சொல்லியிருக்கிறார். அதற்காக, நாம் மொழிபெயர்ப்பில் ஈடுபடாமல் இருக்க முடியுமா? மொழி பெயர்ப்பு ஓர் ஆறுதல் பரிசு என்று கொள்ள வேண்டும். ஈஸ்கிலஸின் நாடகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த Philip Vellacot சொன்னான். "வாசகன் என் மொழி பெயர்ப்பைத் தூர எறிந்து விட்டு கிரேக்க மொழியைக் கற்கப் புறப்படுவானானால் நான் வெற்றியடைந்ததாகக் கருதுவேன்!" சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பது கலாபூர்வமாக அமையாது. மூல ஆசிரியனுடைய உணர்வை உள்வாங்கிக் கொண்டு. மொழிபெயர்ப்பாளன் அதைத் தனதாக்கி ஓர் மீளுருவாக்கம் செய்ய வேண்டும். Translation ஐ விட Transcription கலையழகுடையது.



**இளைய தலைமுறையினர் நமது நீண்ட கவிதைத் தடம் பற்றி அறியாது இருக்கிறார்கள். பலர் தமதும் தம் சகபாடிகளின் கவிதைகளுக்கும் அப்பால் வாசித்தறியார்கள்.**

தென்னிலங்கைக் கவிதைகள் என்ற உங்களது மொழிபெயர்ப்பு நூல் பற்றிய வாசக, விமர்சக அவதானங்கள் எப்படியிருந்தன.

"தென்னிலங்கைக் கவிதை" வடக்கு தெற்கு எழுத்தாளர்கள் முன்னெடுத்த சமாதான முயற்சிக்கு வலுச் சேர்க்க வெளியிடப்பட்டது. தமிழர்கள் சிலர் இம்முயற்சி கண்டு முகம் சுழித்ததுண்டு. சிங்கள எழுத்தாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தமிழ் வாசகர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினேன். பேராசிரியர் சிவத்தம்பி பெறுமதி மிக்கதோர் அணிந்துரை தந்தார். "லக்பிம" இத்தொகுதி பற்றி எழுதியதாகக் கேள்வி. நான் பார்க்க வில்லை.

சிங்களக் கவிதைகளின் கவித்துவ வீச்சம் தமிழ்க் கவிதைகளின் கவித்தவ வீச்சத்துடன் ஒப்பிடுகையில் எந்த மொழிக் கவிதை முன்நிற்பதாய் உணர் கின்றீர்கள்?

ஒப்பீட்டளவில் சிங்களக் கவிதை சுயம்புவாய் அலங்கார, ஆர்ப்பாட்டம் இன்றி எம்மைக் கவர்கிறது. உதாரணமாக,

கவிதையும் விமர்சகனும்
காலையில் முகிழ்த்த குருத்துப் போல
மென்மையானவள் அவள்

கிராமப் புறத்திலிருந்து
வந்த மணமகள் போல
நாணுகிறாள், அவள்

என்றாலும் உன் ஸ்பரிசத்துக்காக
உள்ளூர ஏங்குகிறாள் அவள்

ஆனாலும்
அஞ்சுகிறாள் அவள்
உன் பிடியில்
நசுங்கிவிடுவோமோ, என்று!

இந்த எளிமை எனக்குப் பிடிக்கும். இதே வேளை மஹாகம சேகரவின் "பிரபுத்தன்" ஓர் உச்சப் படைப்பு. புத்தருடைய துறவை புதியதொரு கோணத்தில் நோக்குகிறது அது. அதைத் தொகுதியின் முகப்பில் வைத்து சிறப்புச் செய்தேன். ஆனால் தமிழ்க் கவிதை வேறு சில பரிமாணங்களில் தூக்கலாக நிற்கும்.

ஈழத்து மொழிபெயர்ப்புகள் மற்றும் கவிதை களுக்கான விமரிசனங்களின் மிக அரிதான சூழல் நிலவுவதனை மாற்றத்தக்க புதிய அணுகு முறைகள் பற்றி ஏதும் முன்னெடுக்கப்பட்டுள்ளதா?

ஈழத்தில் இலக்கிய விமர்சனம் - மொழி பெயர்ப்பு விமர்சனம் உட்பட ஆரோக்கிய மானதாய் இல்லை. நாங்கள் ஒரு சிறு வட்டம், தமிழ் நாட்டோடு ஒப்பிடுகையில் ஒரு சிறிய குழுவினர், மனசில்படுவதை விமர்சகர்கள் எழுதத் தயங்குகிறார்கள், எங்கே எழுத்தாளனை நோகச்செய்து விடுவோமோ என்று! நாளை அந்த மனிதர் முகத்தில் விழிக்க வேண்டுமே என்று! பரந்த இலக்கிய வட்டமாயின் இந்தச் சங்கடம் இல்லை. திருச்சியை அல்லது நாகர்கோயிலைச் சேர்ந்த எழுத்தாளனைப் பற்றி சென்னை விமர்சகன் துணிந்து எழுதலாம்.

மொழிபெயர்ப்பு என்று வரும் போது, அதை மதிப்பிடுபவனுக்கு இருமொழிகளும் தெரிந்திருக்க வேண்டும். ஆனால் இரு மொழி - பன்மொழிப் புலமை வாய்ந்தவர் எண்ணிக்கை கவலைப்படும் அளவுக்குக் குறைந்து விட்டது. இளம் எழுத்தாளர்கள் தாய் மொழியைவிட, மேலும் ஒரிரு மொழிகளைக் கற்றிருக்க வேண்டும். தமிழ்நாடு மற்றும் கேரள எல்லைகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தமிழ், மலையாளம், இரண்டு மொழிகளிலும் வல்லவர்களாய் இருக்கிறார்கள். நீல பத்மநாபன், சுந்தர ராமசாமி, ஜெயமோகன் முதலியோருடைய பலமே அது தான். ஈழத்தில் மடுளுகிரியே விஜேரத்தினாக்கள் பலர் வரவேண்டும்.

தமிழிக் கவிதை மரபு பல படிமுறைகளைக் கடந்து செல்கின்றது. அப்பிடியிருக்க புதிய தலைமுறைப் படைப்பாளிகளின் நவீன செல்நெறிக் கவிதைகள் பற்றி உங்களது கருத்து என்ன?

உண்மை, உள்ளடக்கத்திலும் உருவாக்கத்திலும் தமிழ்க் கவிதை பல படிகளைக் கடந்து வந்திருக்கிறது. பண்டிதர்களுடைய உலாக்களிலும் பிரபந்தங்களிலும் சிக்கிச் சிறைப்பட்டுக் கிடந்த தமிழ்க் கவிதையை மீட்டு மக்களின் பால் கொண்டு சென்றவன் பாரதி. நம்நாட்டு மஹாகவி வேறுபல சாத்தியப் பாடுகளைக் காட்டினார். புதுக்கவி வாணர்களும் நம் எல்லைகளை அகலிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள் இவ்விளைய தலைமுறையினர் நமது நீண்ட கவிதைத் தடம் பற்றி அறியாதிருக்கிறார்கள். பலர் தமதும் தம் சகபாடிகளின் கவிதைகளுக்கும் அப்பால் வாசித்தறியார்கள். கம்பனைப் படிக்கச் சொல்லவில்லை. பாரதியை, நீலாவணனை, சண்முகம் சிவலிங்கத்தைப் படிக்க வேண்டாமா? பலருடைய எழுத்து எனக்கு விளங்குவதில்லை. (வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன்.) ■



# உயிர் அறுபடும் வலி

## தீபச்செல்வனின் "ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்"

சித்தாந்தன்

தீபச்செல்வனின் கவிதைகள் வாசக மனதின் உள்ளடுக்குகளுக்குள் மாபெரும் மனிதத் துயராய்க் கவிகின்றன.

துரத்திக்கொண்டிருக்கும் யுத்தத்தின் கோர முகத்தையும் அதனால் ஏற்பட்ட வேதனைகளையும் இயல்பான மொழியில் தீபச்செல்வன் எழுதுகின்றார். சிதிலங்களிலிருந்து மீளவும் கட்டியெழுப்ப முடியாத உள்மனக் குமுறலாய் அவரின் கவிதைகளிருக்கின்றன. தீபச்செல்வனின் கவிதைகளின் இரண்டாவது தொகுப்பான "ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்" உயிர்மை வெளியீடாக வந்துள்ளது. ஏற்கனவே காலச்சுவடு வெளியீடாகப் "பாதுங்குகுழியில் பிறந்த குழந்தை" என்னும் தொகுப்பு வெளிவந்திருக்கின்றது.

பொதுவாக ஈழக் கவிதைகளின் திருப்புமுனைக்காலமாக எண்பதுகளைச் சொல்லலாம். அரசியல் ரீதியான மாறுதல்களும் பேரினவாதச் சிந்தனைகளும் தமிழ்த் தேசிய உணர்வூட்டமும் இக்காலத்திலேயே தீவிரம் பெற்றன. 83 இல் ஏற்பட்ட இனக்கலவரம் ஏற்படுத்திய மோசமான பாதிப்புக்கள் தமிழர்களின் மனங்களில் இன்னும் விலக்கமுடியாத வடுக்களாகவே இருக்கின்றன. இந்தக் காலகட்டத்தின் கவிதைகள் சமகாலத்தின் வன்முறை வடுக்களின் நேரடியான பிரதிபலிப்புக்களாகவிருந்தன. காட்சி விபரிப்புக்களாகவும் விபரணத் தன்மை கொண்டவையாகவும் பெரும்பாலான கவிதைகள் எழுதப்பட்டன. இயல்பு குலையாத யதார்த்தச் சித்திரிப்பு அநேக கவிதைகளிலும் காணப்பட்டன. எண்பதுகளில் நிகழ்ந்த வன்முறைகளின் சாட்சியங்களாகவும் ஆவண இலக்கியங்களாகவும் இக்கால கட்டக் கவிதைகள் முக்கியம் பெறுகின்றன.

தொண்ணூறுகளின் பின் எழுதப்பட்ட கவிதைகளிலேயே பூடகமான மொழி ஈழக்கவிதைகளில் முக்கியம் பெறுகின்றது. யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புக்களால் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளையும் அரசியற் படுகொலைகளையும் மனிதவுரிமை மீறல்களையும் வெளிப்படுத்த பூடகமான மொழி கவிஞனுக்கு தேவையானது. ஏனெனில் யுத்தத்திலீடுபடுபவர்களின் ஜனநாயக மறுப்புக் கொள்கை உயிர் அச்சுறுத்தலாக எப்போதுமிருந்துகொண்டேயிருந்தது. இதனால் கவிதைகள் ஒருவித இருண்மைத்தன்மையை நோக்கிச் சென்றன. உணர்வுபூர்வமான மொழிக்கு அப்பால் அறிவின் கூறுகளையும் கவிதை தனக்கானதாகக் கொள்ளத் தொடங்கியது. இத்தொடர்ச்சி இன்று வரையிலும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

தீபச்செல்வனின் கவிதைகள் எண்பதுகளின் சாயல்களுடனும் அதேவேளை தொண்ணூறுகளின் கவிதைப் போக்கையும் உள்வாங்கி யிருக்கின்றன. காட்சி விபரிப்புக்களாகவும் கதை கூறலாகவும் சம்பவச் சித்திரிப்புக் களாகவும் விபரண மொழிதலாகவும் தீபச்செல்வனின் கவிதைகளிருக்கின்றன. யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலத்தின் அநேக நிகழ்வுகளை அவரின் கவிதைகள் பதிவு செய்திருக் கின்றன. ஒரு கவிஞனுக்கான தார்மீகக் கடமையும் ஒரு வரலாற்றுப் பதிவாளனுக்கான பொறுப்பையும் அவர் தன்னுடையதாகக் கொள்ளுகின்றார். இதனாலத்தான் சொற்களின் நீட்சி மிகைத்ததாய் கவிதைகளிருக்கின்றன. புற நிகழ்வுகளின் தாக்கங்களால் விளையும் மனச் சஞ்சலங்களின் தார்மீக உணர்வுநிலை அவரை எழுதத் தூண்டுகின்றது. கவிதையின் வடிவம், நேர்த்தி சார்ந்து காட்டும் அக்கறையிலும் பார்க்க உணர்வின் வலிமை யிலேயே அதிகமும் பிரக்ஞை கொள்ளுகின்றார்.

தீபச்செல்வன், தன்னை யுத்தத்தின் குழந் தையாகக் காணுகின்றார். யுத்தகாலத்தில் பிறந்த குழந்தை எதிர்கொள்ளும் துயரங்களும் நிச்சய மின்மைகளும் இழப்புக்களும் அவரையும் வதைக் கின்றன. பதுங்குகுழியின் வெம்மையில் கருகும் அவரது மனம், விடுதலையை அவாவி நிற்கின்றது.

"ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்" என்னும் தீபச்செல்வனின் இரண்டாவது தொகுதிக் கவிதைகள், யுத்தத்தின் முகங்களையும் அது தருகின்ற நீக்க முடியாத துயரங்களையும் பேசுகின்றன. முழுமையும் யுத்தத்தால் சிதறடிக்கப்பட்ட மனநிலை யின்பால் இயங்கும் இக் கவிதைகளின் மையத்தில் நிராதரவாக்கப்பட் கவிமனம் தொங்கிக் கொண்டிருக் கின்றது. மீளமீள கவியும் யுத்தத்தின் மீது வெறுப்பும் அதேநேரம் அதைவிட்டு விலகமுடியாமலிருப்பதன் வலியும் வெளிப்படுகின்றன. யுத்தம், ஒரு பூதாகாரப் பண்டமாக எல்லோர் கைகளிலும் திணிக்கப்பட்டிருப்பதை தீபச்செல்வன் எழுதுகின்றார். அவகாசங்கள் எதுவும் இல்லாமல் போர் தொடர்ந்து கொண்டிருந்த காலத்தின் கவிதைகளாக இத் தொகுப்பின் கவிதைகளுள்ளன.

"மூன்றாவது போர் முடிந்த பொழுது
எழுப்பப்பட்ட மாளிகைகளில்
மீண்டும் தகர்ப்பதற்கான
நாலாவது போர் ஒளிந்திருந்தது"

என "அழிப்பதற்கு பிரகடனம் செய்யப்பட்ட நகரத் தின் கதிரைகள்" என்னும் கவிதையில் எழுதுகின்றார். போர் என்பதை வெறும் புறக்காட்சி அனுபவமாகக் கொள்ளாது அகத்திலும் அது படிய வைத்திருக்கும் காட்சிகள் எவ்வளவு கொடுமையானவை என்பது பரிந்து கொள்ளத் தக்கதே. போர்க்காலம் என்பது எந்த நம்பிக்கைகளையும் தந்துவிடாத சூழலில் யுத்தத்தின் பொய்யான நியாயப் படுத்தல்களும் உலர்ந்து போய் விடுகின்றன.

இரவுகளும் பகல்களும் யுத்தத்தின் வெம்மை யில் கருகி மணக்கின்ற போது கவிஞனின் குரலில் அவநம்பிக்கைகளும் துயரமும் இயல்பாகவே படிந்து போய் விடுகின்றன. இரவுகளை கொண்டாடும் மனநிலை அறுந்துபோய் அச்சத்தை கொண்டுவரும் வாயில்களாக இரவுகள் மாறிவிடுகின்றன. "பெருங் கிடங்குகளில் புதைபடுகிற கால்கள்" என்னும் கவிதையில்

"செய்திகள் சனங்களைத் தின்னுகிற இரவில்
ஒலிபடாத குரல் பாம்புப் பெட்டியில் அடைபடுகிறது"

என எழுதுகின்றார். சாவுச்செய்திகளால் அந்த இரவுகள் நிறைந்திருக்கின்றன. பிள்ளைகளை போருக்குக் கொடுத்த தாய்மாரின் மனங்களில் வெறும் பிரார்த் தனைகள் நிரம்பிவழிகின்றன. பிள்ளைகளைக் குரல்கள் எட்டாத போதும் அவர்களின் துயர அழுகை தொடர்ந்து கொண்டே யிருக்கின்றது. இன்னொரு கவிதையில்

"எல்லாவற்றையும் இழந்து
ஓடிவருகிற இரவு
மிருகத்தின் வாயில் சிக்குண்டுவிடுகிறது."

என்கின்றார். இங்கு ஆறுதல் தரும் இரவே பறிபோய்விடுகின்ற துயரத்தை எழுதுகின்றார். தினமும் யுத்தத்தின் அதிர்வுகளால் சிதறடிக்கப்படும் மனத்தினை எதனால்த்தான் ஆறுதல்ப்படுத்த முடியும்? "இரவு மரம்" என்னும் கவிதையும் விமானங்களால் சிதறடிக்கப் படுகின்ற இரவு பற்றிய கவிதையாகும்.

அச்சுறுத்தல்களால் நிரம்பிய நாட்களை தன் கவிதைகளில் தீபச்செல்வன் எழுதுகின்றார். காரணங்கள் தெரியாமலே மனிதர்கள் கொல்லப்படுவது சாதாரண மாகிவிட்ட நாட்களில் மரணம் ஒரு பிசாசாகி ஊரெங்கும் நகரமெங்கும் அலைந்து திரிவதையும் அதனால் ஏற்படும் அச்சவுணர்வினையும் "வற்றாத காலையில் வருகிற அச்சுறுத்தல்" என்ற கவிதையில்,

"தூக்கம் குழம்பிய காலையில்
துப்பாக்கியால்
எழுதப்பட்ட சுவரொட்டி
அறையின் கதவினை
தட்டிக்கொண்டிருந்தது" எனவும்

"பேய்கள் ஓட்டுகிற
மோட்டார் சைக்கிள் என்னைப்
பின்தொடருகிற
மாலைக்கும் இரவுக்கும்
இடையில்
நான் மறுநாட் காலையை இழந்தேன்"

எனவும் எழுதுகின்றார். சாவுகளாலும் எச்சரிக்கை களாலும் அச்சுறுத்தப்படுகின்ற பொழுதுகளில் எல்லாமே மரணத்தை நினைவுறுத்துகின்றன. மரணம் பற்றிய பீதி எல்லாவற்றறையும் இழந்தவி... சய்கின்றது. எங்கும் மரணமே பேருருக்கொண்டுவிடுகிறது.

தீபச்செல்வனின் கவிதைகள் ஒரு மையத்தை சுற்றி எழுதப்படுகின்ற வெவ்வேறான கவிதைகள்தான். எல்லாக் கவிதைகளின் மையமும் இழப்பினையே பெரும் பொருளாகக் கொண்டிருக்கின்றன. நிலங்கள் ஆக்கிர மிக்கப்படும்போதும் நண்பர்களை உறவினர்களை உடமைமைகளைப் பறிகொடுக்கும் போதும் அவரின் மனம் இழப்பின் எல்லையில் நின்று கதறுகின்றது.

இத்தொகுப்பின் பெரும்பான்மையான கவிதை களும் சம்பவங்களை விபரிப்பனவாகக் காணப் படுகின்றன. கவிதைகளுக்கு இடப்பட்டிருக்கும் அடிக் குறிப்புக்களும் திகதிகளும் இதனைச் சுட்டுகின்றன. யுத்தத்தில் இடங்கள் பறிபோவதையும் தன் தாயும் சகோதரியும் இடம் பெயர்வதையும் எனப் பலவற்றை கவிதைகளின் அடிக்குறிப்புக்களாக் காணக்கிடக்கின்றன. இது வரலாற்றுப் பதிவுக்கான அடிப்டையாக இருந்தாலும். கவிதை வாசிப்பில் ஒற்றைப்படையான புரிதலையே நிகழ்த்தும் சாத்தியங்களை ஏற்படுத்துகின்றது. தீபச் செல்வன் கூறக் கருதியிருக்கும் விடயங்களுக்கு அப்பால் வாசகனின் மனம் பயணிப்பதற்கான எந்த விதமான வாசல்களையும் கவிதைகள் கொண்டிருக் கவில்லை என்பது வாசகனுக்கு இடராகவே அமையும் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். "யாருமற்ற தெருவினை மிதிக்கிற கொடு நிழல்,பெருங்கிடங்குகளில் புதைபடுகிற கால்கள்,நெருப்புத் தின்றுவிட்டிருக்கிற சாம்பல்,ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்,நிலம் பெயர்ந்தலைய வந்துவிடு"எனப்பல கவிதைகளும் அடிக்குறிப்பிடப்பட்ட கவிதைகளாகவேயுள்ளன. சம்பவங் களை மையப்படுத்தி கவிதைகள் எழுதும் முறை காணப்படுகின்றதுதான். ஈழத்திலும் அவ்வாற பல கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஒரு தொகுப்பில் அடிக்குறிப்புக்களோடு அநேக கவிதைகள் காணப் படுகின்றமை கவிதைப்புரிதல் மீது நெருடலை ஏற்படுத்து கின்றது. முன்னுரையில் சுகுமாரன் குறிப்பிடுவதைப் போல தீபச்செல்வனின் கவிதைகள் இருண்ட நாட்களின் நாட்குறிப்புக்களாகவுள்ளன எனச்சொல்லலாம்.

பொதுவாக, படைப்புக்கள் என்பவை மொழி யினால் கட்டமைக்கப்படும் ஆக்கச்செயற்பாடுதான். எனினும் தேவையற்ற சொல்லாடல்களும் பொருத்தமற்ற அவற்றின் அமைவிடங்களும் நல்ல பொருளாழமிக்க கவிதைகளையே நீர்த்துப்போகச் செய்யும் சாத்தியங்கள் இருக்கினறன. தீபச்செல்வன் கவிதைகளிலும் இத்தகைய நிலையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பல கவிதைகள் நீண்ட கவிதைகளாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். முழுமையும் உணர்வு களால் கொட்டப்பட்டிருக்கின்ற இந்தக் கவிதைகள் வாசகனோடான நேரடியான அனுபவப்பிணைப்பை ஏற்படுத்துகின்றன. தன் துயரங்களைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த வடிகாலாகவே தீபச்செல்வன் கவிதைகளைக் கருதுகின்றார். இதனால்த்தான் கவிதை அறிவும் உணர்வும் கலந்துருவாகும் வடிவம் என்பதனை விடவும் உணர்வனின் வடிவமாகவே கொள்ளுகின்றார். இதனால் கவிதை மொழியின் முக்கியத்துவம் பற்றியும் இறுக்கம் பற்றியும் அதிகளாவான முக்கியத்துவத்தைக் கொடுக்காதவராகக் காணப்படுகின்றார்.

"தாகம் காய்கிற நதிக்கான கனவு" என்ற கவிதையின் இறுதிவரிகளை இதற்கு உதாரணமாகச் சுட்டலாம்.

தண்ணீருக்கான வழிகள்
அடைபட்டிருக்க
வாழ்வின் கனவின் நதி இனியொரு இரவில்
முற்றுகை அதிகரித்த காட்டினுள்
மீளப் பெயர்ந்து பாய்கிறது."

இவ்வரிகளில் "இனி" என்ற சொல் எதிர் காலத்தை சுட்டிவருகிறது. ஆனால் கவிதை "பாய்கிறது" என நிகழ்காலத்தில் முடிகிறது. இவ் வாறமைவது சொற்களின் அர்த்தத்தைச் சிதைத்து விடுவதாகவுள்ளது. "இனியொரு" என்ற சொல்லை நீக்கிவிட்டு கவிதையை வாசிப்பின் வாசிப்புக்கு எவ்வித இடையூறும் ஏற்பட வில்லை. அல்லது அச்சொல் "இன்னொரு" என அமைந்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

இதனைவிட "பயங்கரவாதிகளும் பதுங்குகுழிகளும்" என்ற கவிதையில்,

"நமது ஓலங்களிற்குள்
பெருகும் குருதி ஆறுகளிற்குள்
சந்தைகள் பரவி நிகழ்ந்தன."

எனவருகின்றது. இந்த வரிகள் பொருட் குழப்பம் தருகின்ற வரிகளாகவுள்ளன. "சந்தைகள் பரவி நிகழ்ந்தன" என அதன் முடிவு முன்னைய வரிகளுடன் எவ்விதத்திலும் ஒட்டாது விலகியே நிற்கின்றது. "நிகழ்ந்தன" என்னும் சொல் "நின்றன" என அமைந் திருப்பின் பொருட் புலப்பாட்டுக்கு ஓரளவாவது இடை யூறாக அமைந்திருக்காது. இத்தகைய சிக்கல்கள் பல கவிதைகளில் காணப்படுவதால் சொற்களை நேர்த்திப் படுத்தி கவிதைகளைச் செம்மைப்படுத்த வேண்டிய தேவை அவருக்கிருக்கின்றது. அவ்வாறு இல்லாதுவிடின் வாசகனே சொற்களை ஒழுங்குபடுத்தி வாசிக்க வேண்டிய தேவையை கவிதைகள் ஏற்படுத்தும் நிலையே இருக்கின்றது.

தீபச்செல்வன் கவிதைகள் பலவற்றில் கவித்துவத் தன்மையில்லாத வரிகள் பலவற்றைக்

காணமுடிகின்றது. சாதராணமாகப் புழக்கத்திலுள்ள சொற்களைக் கவிதைக்காக உடைத்துடைத்துப் போட்டு கவிதையென்னும் புனைவுருவை ஏற்படுத்துகின்றார். இதற்கு உதாரணமாக "கிளிநொச்சி" என்னும் கவிதையினைக் குறிப்பிடலாம். யுத்தத்தால் எப்போதும் தாக்கப்பட்டுக்கொண்டிருந்த நகரம் என்பதால் அந்த நகரத்துக்கு வரலாற்றடிப்படையிலான முக்கியத் துவங்கள் பல காணப்படுகின்றன. தீபச்செல்வனின் கவிதையும் அம்முக்கியத்துவத்திற்கான காரணங்களை கோவைப்படுத்துகின்றன. இவ்வடிப்படையில் இக் கவிதையின் பரிமாணம் முக்கியத்துவமானதுதான். எனினும் கவிதையாக அதனை எழுதும் போது கவித்துவத்தினை எதிர்பார்ப்பது தவிர்க்க முடியாததே. அவரின் நகரங்கள் சார்ந்த அனுபவப்பகிர்வுகள் மிக முக்கியமானவை. முதற்தொகுதியான "பதுங்குகுழியில் பிறந்த குழந்தை" தொகுப்பில் "யாழ் நகரம்" என்னும் சிறந்த கவிதையினை எழுதியிருக்கின்றார். இக்கவிதை யுத்தத்தாலும் மரணங்களாலும் நிறைந்திருந்த யாழ்ப்பாணத்தின் நெருக்கடிமிக்க காலத்தை உணர் வோட்டத்துடன் பிரதிபலிக்கின்றது. யாழ்பாணம் பற்றிய அப்போதைய நிலையை,

"ஒரு கொத்துரொட்டிக்கடை
இனந்தெரியாத பிணம்
நீளும் அமைதி: யாழ். நகரம்"

எனச் செறிவடர்த்தி மிக்க வரிகளால் படிமப் படுத்துகின்றார். மனிதர்கள் இனங்காணப்படாத வர்களால் கொல்லப்படுவதும் சடலங்கள் இனங் காணப் படாமல் தெருக்களில் இருப்பதையும், கொல்லப்பட்ட வனின் சடலம் மீது ஆயிரம் கதைகள் கட்டப் படுவதையும்,

"எனது பிணத்தில்
எத்தனை கேள்வியிருக்கிறது
எப்பொழுது நான்
இனங்காணப்படுவேன்?"




"இவன் ஏன் சுடப்பட்டான்
என்பது பற்றிக்கூட
நீங்கள் சிந்திக்க மாட்டீர்கள்
உங்களால் தொடர்ந்து
சாப்பிட முடியும்
நாளைக்கு வெடிக்கப்போகிற
வன்முறைகளுக்கு
ஊரடங்கு அமுலுக்கு
நீங்கள் தயாராகுவீர்கள்"
(பதுங்குகுழியில் பிறந்த குழந்தை)

எனப் பதிவுசெய்வதோடு மக்கள் உணவுப் பொருட்களுக்காக அல்லாடித்திரிந்த அந்த நாட்களின் அவலங்களையும் ஆயுதங்களால் குரலறுக்கப்பட்ட மக்களின் பெருந்துயரையும் மிக பிரக்ஞை பூர்வமாக எழுதியிருக்கின்றார். ஆனால் "கிளிநொச்சி" நகரம் பற்றிய கவிதையில் உணர்வு பூர்வமான சொல்லாட்சி காணப்படவில்லை. மாறாக வெற்று வரிகளே பெரிதும் நிறைந்திருக்கின்றன,


"இப்பொழுது
சைக்கிளை
மெதுவாக ஓட்டியபடி போகிறோம்
எங்கள் மோட்டார்சைக்கிள்
வீட்டில் நிற்கிறது.
இனி நடந்தும் போகவேண்டி இருக்கும்"
"பிரகாசின் அம்மா
புற்றுநோயில்
இறந்துவிட்டாள்
பாதை பூட்டியிருந்ததால்
அவளுக்கான வைத்தியங்கள்
தவறிவிட்டன.
கடைசி நாட்களில்
நல்ல சாப்பாடுகளைக்கூட
பிரகாசு
வாங்கிக் கொடுக்க முடியவில்லை"

இவ்வரிகள் கவிதைக்கான மொழியாகப் பரிமாணம் பெறாது வெற்றுச் சொற்களாகவே எஞ்சி நிற்கின்றன. வெறும் சம்பவங்களின் கோர்வையாகக் கவிதையாகிவிடுகின்றது.

இத்தெகுப்பில் பல நல்ல கவிதைகளாகவும் கவித்துச்செழுமையை கொண்டுள்ள கவிதைகளாகவும் சிலவற்றைக் குறிப்பிடலாம். "துண்டிக்கப்பட்ட சொற்கள், வற்றாத காலையில் வருகிற அச்சுறுத்தல், அழிப்பதற்குப் பிரகடனம் செய்யப்பட்ட நகரத்தின் கதிரைகள், பாம்புகள் பரிசளித்த சவப்பெட்டிகள், இரவு மரம், நிலம் பெயர்ந் தலைய வந்துவிடு, பயங்கரவாதிகளும் பதுங்கு குழிகளும்" இவ்வாறாகக் கொள்ளலாம்.

ஒரு காலகட்டத்தின் மாபெரும் மனிதத்துயரைப் பதிவு செய்திருக்கின்றன என்ற சிறப்பும் முக்கியத் துவமும் தீபச்செல்வனுக்கும் அவரது கவிதைகளுக்கும் உண்டு. ஆயினும் வெளிவந்திருக்கும் அவரின் இரண்டு கவிதைத்தொகுதிக் கவிதைகளும் வெளிப்பாட்டு முறையில் ஒத்தேயியங்குகின்றன. இத்தகைய முறை யிலான கவிதை கூறல்முறையிலிருந்து மாறவேண்டிய தேவை அவருக்கிருக்கின்றது. அம்மாற்றம் தீபச் செல்வனின் கவிதைகளுக்கு மேலும் செழுமையையும் முக்கியத்துவத்தினையும் ஏற்படுத்தும் என நான் நம்புகின்றேன்.

■



# சீனக் கவிஞர் டு பூஃ கவிதைகள்

ஆங்கிலம் வழி தமிழில்: சஜிதரன்

சீனச் செவ்வியல் கவிஞர்கள் வரிசையில்
முன்னணியில் வைத்துக் கொண்டாடப்படும் கவிஞர் டு பூஃ.
www.sajitharan.wordpress.com

## நிலவொளிர்ந்த இரவு

பூஃசௌவில் இன்று நிலவு ஒளிர்கிறது
அறையில் அவள் தனித்துப் பார்த்தபடியிருக்கிறாள்
தூரத்திலிருக்கும் மகனையும் மகளையும் நினைந்து
மனம் நோகுவேன் நான்..
அவர் அறியார், அவள் ஷாங்கானை
எண்ணியிருப்பது ஏனென்று..
அவள்தன் முகிலனைய பனித்த கூந்தல் இனியது
பளிங்கொத்த அவள் கரங்கள் தெளிந்த நிலவில்
குளிர்ந்துள ..
ஒன்றாய் ஒளிர்வில் நாம் சாய்ந்திருப்பதும்
எப்போதினி–
வெற்றுச் சாளரத்தருகே, விழிநீர் வரண்டு??

## பனிக்கு முகங்கொடுத்தல்

போரின் பின்னர், புத்தம் புதிய
பேய்கள் கதறுகின்றன.
தனியனாகிய கிழவன், அலருகிறான்
துக்கிக்கிறான்.
ஓரங்களில் கிழிந்து போன
முகில்கள்
சூரிய அஸ்தமனத்தில் பணிந்து
காணப்படுகின்றன.
சுழலும் காற்றில் பனித்துளிகள்
நடனமாடுகின்றன.
மூலையில்,
புறக்கணிக்கப்பட்ட அகப்பை,
கோப்பை பச்சை அற்று.
இன்னும்,
எரிந்து கொண்டிருக்கும் அடுப்பு,
சிவப்பாய்.
பல இடங்களுக்கு தொடர்பு முறிந்து.
புத்தகத்தை புரட்டுகிறேன்.
வாசிக்க முடியவில்லை
துயர்.

## இலையுதிர் கால மழையின் பேரு

மூச்சுக்கள் இரண்டு
முடிவறு காற்றும் நெடிய மழையும்
ஒன்றாய்ச் சுழலுமிவ் இலையுதிர் காலம்
நாற்கடலும் எண்பாலையும்
ஒரு முகிலால் அணையும்
போவது பரியோ வருவது ஏறோ அறிவது
கடினம்
சேறாம் மூழ்கும் தெளிந்த மூவேயும்
பிரித்துத் தேர்தல் எவ்வண் இயலும்!
நட்ட தானியம் துளிர்விடல் தொடங்கும்
சோளக் காதுகள் கருநிறங் காணும்
உழவர்க்கும் பெண்டிர்க்கும் நற்செய்தி
கிடையா
பெறுவோர் தருவோர் பேரம் இணங்க
ஒருகூடை அரிசி பெருநிதி போகும்

# அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழு அங்குரார்ப்பண கூட்டமும் படிகள் அறிமுக நிகழ்வும்

**நேகம பஸான்**

புனித நோன்புப் பெருநாள் இலக்கிய ஒன்று கூடலாக அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழு அங்குரார்ப்பணக் கூட்டமும், படிகள் இதழின் 28வது இதழ் வெளியீடும் அநுராதபுரம் ஸாஹிரா மகா வித்தியாலத்தில் கடந்த 2011.09.04 ம் திகதி மாலை 4.30 மணிக்கு கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு நாச்சியாதீவு பர்வீன், எல். வஸீம் அக்ரம், ரிஸ்வி மஹ்ரூப், அநுராதபுரம் ஜமீல், அநுராதபுரம் டில்சான், அநுராதபுரம் ரஹ்மதுல்லாஹ், ஜான்சி கபூர், சப்ராஸ், மாபீர், நஸ்வர், முஹமட் மற்றும் நேகம பஸான் போன்ற இலக்கிய ஆர்வளர்கள் வருகை தந்திருந்தனர்.

விழா தொடர்பான அறிமுகத்தையும், சபை வழிநடத்துதலையும் நாச்சியாதீவு பர்வீன் நிகழ்த்த, படிகள் இதழாசிரியர் எல். வஸீம் அக்ரம் படிகளின் படிகள் உயர்வடைந்துள்ளது என்பதாகவும், அத்தோடு அண்மையில் அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து இலக்கிய இதழ்களில் படிகளுக்கும் ஒரு இடம் கிடைத்தாகவும் அவ்வைந்து இதழ்களில் படிகள் மட்டுமே முஸ்லிம் இலக்கிய ஆர்வளர்களின் படைப்பாகவும் காணப்பட்டது என்றார். மேலும் படிகள் இதழிற்கு அதிகப்படியான கவிதைகளே வந்து குவிவதாகவும் அதனைத் தவிர்த்து தரமான சிறுகதைகளை படிகள் மிகவும் ஆவலாக எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்து தலைமை உரை நிகழ்த்திய கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா அவர்கள் "அநுராதபுர கலை இலக்கிய மேம்பாட்டிற்காக கடந்த 07 வருடங்களாக பணியாற்றிக் கொண்டிருக்கும் படிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, அநுராதபுர கலை இலக்கிய வெளிப்பாட்டு முயற்சிகளின் பாரம்பரிய செல்நெறிகளை நினைவு கூர்ந்தார். தவிர மாவட்டத்தின் கலை, இலக்கிய வெளிப்பாட்டுத்திறனானது பல கைகள் இணையும் போதுதான் வலுப் பெறும் என்றும், மாவட்டத்தின் இலக்கிய மேம்பாட்டிற்காக தாம் தொடர்ந்தும் பணியாற்றத்தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்"

அதன் பின்பு அநுராதபுரதம் நண்பர்கள் இலக்கிய குழு தெரிவு செய்யப்பட்டது. அதன்போது தலை வராக நாச்சியாதீவு பர்வீன், செயலா ளராக ஜான்சி கபூர், பொருளாளராக எல். வஸீம் அக்ரம், உபதலைவராக அநுராத புரம் றஹ்மதுல்லாஹ், உப செயலாளராக நேகம பஸான், போசகராக கலா பூஷணம் அன்பு ஜவஹர்ஷா, இணைப் பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் ரிஸ்வி மஹ்ரூப், அமைப்பாளராக அநுராதபுரம் எம்.ஏ.எம். டில்சான் மற்றும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன் பின்னர் உரை நிகழ்த்திய சிரேஷ்ட ஊடகவியாலாளர் ரிஸ்வி மஹ்ரூப்" கடந்த 32 வருடங்களின் பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் ரஜரட்ட சேவையில் முதல் தடவயைாக நோன்புப்பெருநாள் தினமன்றும், புனித லைத்துல் கத்ர் இரவன்றும் தமிழில் நிகழ்ச்சிகளை நாம் வழங்கினோம். இன்னும் நாம் மேலும் பல முயற்சிகளைச் செய்து இச்சேவையில் முஸ்லிம் சேவை ஒன்றை விரைவில் பெறவேண்டும் என்றும் அச்சேவையில் அநுராதபுரம் தமிழ் இலக்கிய மேம்பாட்டிற்கென நேரம் ஒதுக்கித்தர முடியும் என்றும்" அவர் கூறினார்.

அநுராதபுர மாவட்டத்தில் இலைமறைகாய்களாக இருக்கின்ற பலரை நாம் முன்னுக்கு கொண்டுவர எத்தனிக்க வேண்டும் என்ற கருத்துக் களும் பரவலாக முன்வைக்கப்பட்டன. இதற்காக அநுராதபுர பிராந்திய இலக்கிய மாநாடொன்றை நடாத்த இந்த அமைப்பு முதற் கட்டமாக செயற்படவேண்டும் என்றும் கருத்துக்களை முன்னிலைப்படுத்தினர்.

இறுதியாக படிகள் இதழ்கள் ஆர்வலர்களுக்கு வழங்கப்பட்டதுடன், பிராந்திய ரீதியிலான இலக்கிய கருத் தாடல்களும், மாதாந்த இலக்கிய ஒன்று கூடல்களும் ஏற்பாடு செய்யப் பட ஆவன செய்ய வேண்டும் என்றும் எம்.ஏ.எம். டில்சான், அநுராதபுரம் ரஹ்மதுல்லாஹ் போன்றவர்கள் கருத்துரைத்தனர்.

மொழிபெயர்ப்பு

# இலங்கையின் பின்நவீத்துவ முன்னோடி டெரீடா

சிங்கள மொழியில்:

உதயசிறி விக்ரமரத்ன

தமிழாக்கம்:

இக்கிரிகொள்ளாவ ஸப்ராஸ்

**இங்கு புரிதல் என்ற பெயரில் அவர்கள் வெறும் மாயைகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே புரிந்து கொள்வதை விட புரியாமல் இருப்பது மேன்மையானதாகும்.**

பின்நவீனத்துவ சிந்தனையின் முன்னோடிகளுள் முக்கியமானவராக டெரிடா கருதப்படுகின்றார். இவர் உலகிற்காக எழுதவேண்டிய தேவை ஏற்படாத போதும் இவரது எழுத்துக்ளை உலகமே புரிய வேண்டிய தேவை உருவானது. இவர் பிரபல்யத்தை விரும்பாத போதும் இருபத்தியோராம் நூற்றாண்டின் சிறந்த மெய்யியலாளராக திகழ்ந்தார். இவர் அல்ஜீரியாவில் பிறந்தார். பிரான்சிலே கல்வி கற்றார். இவரது சிந்தனை அமெரிக்காவிலே செல்வாக்கு பெற்றது. அத்துடன் அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்களின் நேசத்திற்குரிய ஆசிரியராக திகழ்ந்தார்.

இவர் தனக்கு தேவை என கருதுகின்றவற்றை எழுதினார். அதே போன்று நமக்கு தேவையானவற்றை ஒரு போதும் எழுதக் கிடைப்பதில்லை என்று கூறினார்.

வலிமையான அரசியல் வாதிகளோ பாதாள உலகத்து உறுப்பினர்களோ அரசர்களோ பலமானவர்கள் அல்ல. அவர்களை விடவும் சொற்களே பலமானவை சொற்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது கடினமாகும். ஆதலால் நாங்கள் சொற்களுக்கு கட்டுப்பட வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இவர் அரசியல்வாதிகளினதும், அரசர்களினதும் ஆதிக்கத்தில் இருந்து விடுபட பிரயத்தனம் மேற்கொள்ளவில்லை மாறாக சொற்களின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடவே வேட்கை கொண்டார். முயற்சி செய்தார். அதற்காக ஒன்றிணையுமாறு உலக மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார். இவர் சொற்களை அடி பணிய வைத்த மனிதர்களைப் பற்றி பேசவில்லை சொற்களுக்கு அடி பணிந்த மனிதர்களையும் சமூகத்தையும் கடுமையாக சாடினார்.

சொற்கள் எனும் சிறை கூடத்தில் கடூர தண்டனை அனுபவிக்கும் நிர்க்கதியற்றவர்கள் பற்றியே விமர்சனம் செய்தார். சொற்கள் தனதாதிக்கத்திற்கு உற்பட மறுக்கும் போது அதற்கு பதிலீடாக புதிய சொற்களை உருவாக்கம் செய்தார். அத்துடன் தனக்கு தேவையான சொற்கள் கிடைக்காத போது புதிய சொற்களை உருவாக்கினார்.

மொழியின் அடிப்படையாக திகழும் சொற்களை தனதாதிக்கத்தின் கீழ் கொண கொள்வதை விட புரிதலை விட்டு தூரமாக இருப்பதே மேன்மையானதாகும். நாம் புரிதல் என்ற போர்வையில் வெறும் மாயைகளை ஏற்படுத்தி கொள்கின்றோமே யன்றி வேறில்லை. உதாரணமாக சில மனிதர்கள் அரசியல் கட்சியெட்டு வரவே இவ்வாறான முயற்சிகளை மேற் கொண்டார். சில சொற்களுக்குள் சுற்றிச் சுழன்று கொண்டு அதற்காக பரிந்து பேசுவதை தடுத்தார்.

நான் மேற்கூறிய விடயங்கள் புரியாத புதிர் என நீங்கள் கருதக்கூடும். நான் உங்களிடம் நாடவருவதும் அதனைத்தான். ஏனெனில் அதுவே அவரைப் பற்றிய மிகச்சிறந்த அறிமுகமாக அமையும் அவரது எழுத்துக்களை புரிய முடியாது. ஆனால் அவரது எழுத்துக்களை புரிவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். நான் இதுவரை முன்வைத்தது. அவரை பற்றியும் அவரது எழுத்துக்கள் பற்றியும் என்னால் புரிந்து கொள்ள முடியுமான அளவை மாத்திரமே ஒரு விடயத்தை புரிந்துான்றின் சித்தாந்தத்தை புரிந்து கொண்டதாக நினைத்து அதற்காக அர்ப்பணத்துடன் உழைப்பார்கள். இங்கு நடை பெற்றிருப்பது கட்சி பற்றியும் அதன் சித்தாந்தம் பற்றியும் வெறும் மாயைகளை ஏற்படுத்தி கொள்வதுதான். ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டதாக நினைத்து தங்களுக்கிடையில் ஆழமான நேசத்தை வளர்த்துக் கொள்வார்கள். இங்கு புரிதல் என்ற பெயரில் அவர்கள் வெறும் மாயைகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே புரிந்து கொள்வதை விட புரியாமல் இருப்பது மேன்மையானதாகும்.

இந்த மாயைகள் அனைத்தையும் வெளிச்சம் போட்டு காட்டுவது தனது பிரதான மெய்யியற் பணியாக டெரிடா கருதினார். ஐரோப்பாவிலும் உலகில் ஏனைய பகுதிகளிலும் விரவியிருந்த மாயைகள் இவர் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டன. இலங்கையைப் பொருத்தவரையில் டெரிடா ஒரு பாரிய சிந்தனையாளராக கருதப்படு கின்றார். டெரிடாவின் அறிவுப் பலத்தின் முன்

பல அறிஞர்கள் தாழ்த்தப் பட்டார்கள். சிலர் சிலரை மட்டந் தட்டுவதற்காக இவரது கருத்துக்களை பயன்படுத்தினர். டெரிடா தத்துவத்தை முன்வைத்ததை விட உண்மைக்கு அருகாமையில் செல்ல முயற்சி செய்தமையே இவரது பிரபலத்திற்கு பிரதான காரணமாகும்.

ஒவ்வொரு மனிதனும் ஒரு தினத்தில் பிறக்கின்றான் ஏதோ ஒரு தினத்தில் மரணிக்கின்றான். பிறப்பும் இறப்பும் மனிதர்களுக்கு பொதுவான நியதியாகும். மனிதர்கள் மாற்ற முறுவது அவர்கள் செய்கின்ற பணியை பொருத்தேயாகும். நான் இயன்றளவு முயற்சி செய்தது, டெரிடாவின் பணி எத்தகையது என்பதை தெளிவு படுத்துவதற்கே ஆகும். அவருடைய பிறப்பையோ இறப்பையோ எழுதுவதற்காக அல்ல அவற்றை எழுதுவதன் மூலம் எப்பயனும் விளையப் போவதில்லை எவ்வாறாயினும் அவரது கருத்துக்கள் அமரத்துவம் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நான் இறுதியாக வேண்டிக் கொள்வது டெரிடாவை புரிந்து கொள்ள வேண்டும் என்பதையல்ல சத்தியத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதையே ஏனெனில் டெரிடா தனது வாழ்வை அர்ப்பணம் செய்தது இதற்காகத்தான்.

■

---

கவிதை

உனக்கான மொழிகளை
ஓரவஞ்சனையின்றி
உரத்துக் கூறும் அதரங்கள்
எதிரொலியாக
என்னில் விழும்
இடிகளையும் அடிகளையும்
திடமாக ஏற்றுக் கொள்ளும்
பொறுப்பில் இதயம்

மனிதத்தை சுமக்கும் பயணத்திலே
நேரிய கம்பளத்தை விரித்து
வனப்பான பூக்கள் மத்தியிலே
வானம் பூவாய் ஒளிபாய்ச்சிடும்
இன்மை தவிர்ந்த பொழுதுகள்
உன்னில் உறைந்திட
ஆராதிக்கின்றேன்

இனியொரு
புன்மை புகுந்திடாத
மனமாளிகைக்குள்
அரிச்சந்திர புராணம் பாடும்
இதய சுவாசத்தை
உதயதரிசனங்களுக்காக
ஓராயிரம் பிரார்த்தனைகளுடன்
நிலை நிறுத்துகிறேன்

நாணயமும் நம்பிக்கையும்
நயனங்களின் ஒளியாகி
கண்ணியப் படுத்தும் பார்வைகளால்
விண்ணொத்த விண்ணப்பங்கள்
விலைமதிப்பாக என் கையிருப்பில்
உன் வெளிச்சங்களை உளியாக்கி
செதுக்கும் வாழ்வியல் சிற்பத்திலே
கீர்த்திகள் என்றும் உதிர்வதில்லை
பாவங்களின் நிழல் படிவதுமில்லை.

பாஹிரா
பதுளை



# உண்மையின் தூது

■

# பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குச் செவிடுத்த கிராமிய மட்ட கலந்துரையாடல்கள்

**பஸ்லான் மொஹமட்**

ஒரு சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளை காத்திரமான முறையில் கண்டறிவதற்கு சிறந்த வழி அந்த சமூகத்தின் பிரச்சினைகளுடன் வாழும் மக்களுடன் நேரடிக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதாகும். சமூகப்பிரச்சினைகளின் உண்மையான தகவல்களை பெற்றுக்கொள்ள இத்தகைய நேரடிக் கலந்துரையாடல்களே உதவுகின்றன. அந்தவகையில், இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியாலாளர்கள் மன்றம் பத்துப் பிராந்தியக் கலந்துரையாடல்களை நடத்தியது. முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவே இக்கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

**திருமணத்தில் பெண்களின் விருப்பத்தை அறிதல்**

முஸ்லிம் பெண்களின் திருமணத் தேர்வும் சம்மதமும் என்ற தலைப்பில் ஹொரவபொத்தானையில் முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றது. திருமணத்தின் போது பெண்ணின் சம்மதத்தை பெறுவது அவசியமென இஸ்லாமிய ஷரிஆ குறிப்பிடுகின்றது. ஆனால் நடைமுறையில் இந்தப் பண்பாடு முஸ்லிம்களிடம் மிகவும் அருகிக்கொண்டு வருகின்றது. குறிப்பாகப் பெண்ணின் மௌனம் சம்மதமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அவளின் தனிப்பட்ட விருப்பு நிலைக்கு அப்பால், பெற்றோர், பாதுகாவலர்கள், மற்றும் உறவினர்களின் விருப்பமே ஒரு பெண்ணின் திருமண விடையத்தில் பங்களிப்புச் செலுத்துகின்றது. கலந்துரையாடலுக்குச் சமூகமளித்திருந்த மௌலவியா ஒருவர் இன்று பெண்களின் மௌனம் சம்மதமாகக் கொள்ளப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பெண்கள் சிலநேரம் மௌனத்தினால் தமது அதிருப்தியையும் வெளிக்காட்ட இடமுண்டு என்றார். அம்மௌலவியா பெண்ணின் மௌனம் ஒரு போதும் சம்மதமாக எடுத்துக்கொள்ள முடியாது. தனது பெற்றோருக்கு பயந்தும், குடும்ப கௌரவத்துக்காகவும், மௌனமாக இருக்க வேண்டிய நிலை இன்று பெண்களுக்கு நிர்ப்பந்தமாக ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும் ஹொரவபொத்தானை பிரதேசத்தில் ஆரம்ப காலங்களில் திருமண பந்தலில் பெண்ணின் விருப்பம் கேட்பது ஒரு மரபாக இருந்து வந்துள்ளது. ஆனால், தற்போது அந்த நடைமுறையும் நடைமுறையில் இதுவும் கூட இல்லை. என ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். உண்மையிலேயே இஸ்லாம் பெண்களுக்கு தனது வாழ்க்கைத் துணைவனைத் தெரிவு செய்வதற்கான உரிமையை வழங்கியிருந்தாலும், சமூகத்தில் அதற்குள்ள வரையறைகள் இதுவரைத் தளர்ந்ததாகத் தெரியவில்லை.

**பெண்கல்வி**

முஸ்லிம் பெண்களின் கல்வி பற்றிய உரையாடல் அநுராதபுரத்திலும், முஸ்லிம் பெண்கள் தொழில் செய்தல் பற்றி உரையாடல் நாச்சியாதீவிலும் நடைபெற்றன. பெண்களுடைய கல்வி மற்றும் தொழில் செய்யும் உரிமைகள் திருமணம் என்ற ஓர் நிகழ்வின் மூலம் பாதிப்புக்குள்ளாகின்றது. திருமணத்தின் பின்பு கணவனால் பெண்ணின் கல்வியும் தொழிலும் பாதிக்கப்படுகின்றது. கல்வியையும் தொழிலையும் குடும்பவாழ்க்கையின் ஒரு பகுதியாக கொண்டுவருவதற்கான பிரக்ஞைகள் மிகவும் குறைவாகவே தென்படுகின்றன. கல்வி, தொழில் மற்றும் குடும்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து நோக்கும் ஒரு பண்பாடு இன்னும் வளரவில்லை. மேலும் சமூகத்தில் நிலவுகின்ற மூட நம்பிக்கைகளும் பெண்களின் கல்வியையும் தொழிலையும் பாதிக்கின்றது. இதனைப் பற்றி நாச்சியாத்தீவு சகோதிரி ஒருவர் குறிப்பிடும் போது, "பெண்கள் வெளியே செல்வதனால் பேய் பிசாசுகளின் பார்வை அவர்களின் மேல் விழுகின்றது. இதனால் வெளியே செல்லும் போது இரும்பு ஆணிகளை எடுத்துச் செல்லுமாறு மூதாதையர்கள் அல்லது பெற்றோர் பணிக்கின்றனர்" என்றார்.

மேற்சொன்ன மூட நம்பிக்கைகள் கிராமப் புறங்களில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்வற்குத் தடையாகவே உள்ளன. இங்கு பெண்கள் வெளியில் செல்வதென்பது ஹலாலான ஒரு தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு என்ற அர்த் தத்திலேயே பயன்படுத்தப்படுகின்றது. அத்தோடு, முஸ்லிம் பெண்களுக்கு ஆசிரியர் தொழில் மாத்திரம் தான் சிறந்தது என்ற உளப்பாங்கு முஸ்லிம் சமூகத்தில் வேரூன்றி காணபப்டுவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆண்களும் பெரும்பாலும் பெண்கள் ஆசிரியத்தொழில் செய்வதையே ஊக்குவிக் கின்றார்கள். இதனால் இதற துறைகளில் முஸ்லிம் பெண்களின் நிபுனத்துவம் மங்கிப் போகும் நிலையும் காணப்படுகின்றது. பெண்கள் குறிப்பிட்ட ஒரு துறைக்குள் மாத்திரம் தமது இயலுமையை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டிய நிலை உருவாகி இருக்கின்றது.

## பெண்கள் மீதான வன்முறைகள்

பெண்கள் மீதான வன்முறைகள் பொதுவாக எல்லா சமூகங்களிலும் நடைபெறுகின்றன. முஸ்லிம் பெண்கள் மீது வரன்முறையான இடம்பெறுகின்றது என்ற உண்மையை எமது சமூகம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. பெண்களுக்கு எதிரான வன் முறைகள் பற்றிய கலந்துரையாடல் பொலன்னறுவை தம்பாளை பிரதேசத்தில் நடைபெற்றது. ஆண்கள் கல்வியறிவில் குறைந்திருப்பது பெண்கள் மீதான வன்முறைக்கு முக்கிய காரணமாகும் என பெண்கள் தெரிவித்தனர். ஆண்கள் குடிபோதையில் தான் பெண்களை வன்முறைக்கு உட்படுத்துகிறார்கள் என வேறும் சிலர் குறிப்பிட்டனர். இஸ்லாம் கல்வி அறிவினை பெற்றுக்கொள்வது ஆண்களுக்கு வலியுறுத்தும் அதேவேளை குடிப்பழக்கத்தையும் இஸ்லாம் தடுக்கின்றது. அண்கள் பெண்களை துன்புறுத்துவதும் பெண்கள் அவற்றை சகித்துக் கொள்வதும் இப்பிரதேசத்தில் ஒரு பிரச்சினையாக உள்ளது. சீதனத்தை கேட்டு பெண்களை வன்முறைக் குள்ளாக்கும் பண்பாட்டுச் சிக்கல் இப்பிரதேசத் ததையும் விட்டுவைத்ததாகத் தென்படவில்லை. கணவன் வெளிநாடு சென்று விட்டால் வீட்டில் தனியாக இருக்கும் அந்தப் பெண்ணை தகாத நடத்தைகளுக்கு ஆளாக்குவதற்கு ஆண்கள் முயற்சிக்கின்றனர். கணவன்மார் எதற்கெடுத்தாலும் மனைவியின் மீது கையை தூக்குகின்றார்கள் என்ற கருத்துக்கள் இருபாலாரினாலும் முன்வைக்கப் பட்டன. இப்பெண்களுக்கு தம்முடைய பிரச்சினை களை வெளியே எடுத்துக் கூறுவதற்கு எந்தவொரு தளமும் வழங்கப்படவில்லை. இக்கலந்துரையாட லானது அவர்களுக்கு தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கான தளமாக இருந்தது.

## இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டம்

இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டம் மற்றும் காதி நீதிமன்ற முறைகளினால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய கலந்துரை யாடல் நிந்தவூரில் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். காதி நீதிபதிகள் ஆண்களுக்கு ஆதரவாகவே செயல்படுவதாகவும், காதி நீதிபதி களின் நியமனம் தகுதியின் அடிப்படைலன்றி அரசியல் நிமனங்களாகவே காணப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஏனைய சிவில் நீதிமன்றங்களில் ஒரு நீதிபதிக்கு இருக்கின்ற மரியாதையும் கௌரவமும் காதியாரின் விடையத்தில் காணப்படுவதில்லை. காதி நீதிமன்றங்கள் சிவில் நீதிமன்றங்களின் அமைப்புடன் ஒப்பிடும் போது மிகவும் சாதாரண நிலையில் இருப்பதே இதற்குக் காரணமாகும். சில காதி நீதி பதிகள் தகுதியற்றவர்களாகவும் லஞ்சம், ஊழல் ஆகியவற்றில் ஈடுபடுவதற்கான சான்றுகளும் சம்பவங்களும் வெளிக்கொணரப்பட்டன. நமது காதி நீதிமன்றத்தினால் பெண்கள் தங்களுக்கேயுரிய விமோசனத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய நம்பிக் கையை பெண்கள் தெரிவிக்கின்றனர். மேலும் ஒரு பெண் காதியாக வந்தால் பெண்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சீதனம் கேட்டு கணவன் தொல்லைப்படுத்தும் சம்வத்தை காதியாரிடம் எடுத்துச் சென்றால் அவரும் எம்மிடம் எவ்வளவு காலத்தில் வீடு கொடுப்பீர்கள்? மீதிப் பணத்தை எப்போது கொடுப்பீர்கள் என்றே கேள்வி கேட்கின்றார் எனக் குறிப்பிட்டார். பொதுவாக காதி நீதிமன்றங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை கலந்துரையாடலில் பங்கு பற்றியோர் ஏற்றுக்கொண்டதுடன். ஒரு பெண் காதியாக வருவதற்கு இஸ்லாத்தில் எந்தத் தடையும் இல்லையென இதில் கலந்து கொண்ட மௌலவி ஒருவர் குறிப்பிட்டார். இது இன்னும் தெளிவாக எடுத்துக்கூறப்பட வேண்டும்.

## சீதனம்

இலங்கை முஸ்லிம்களை பொறுத்தவரையில் சீதனம் மலிந்து காணப்படுகின்ற ஒரு பகுதியாக கிழக்கு மாகாணத்தை குறிப்பிடலாம். இங்கு ஆண்கள் அவர்களுடைய தொழிலுக்கும் அந்தஸ்த்துக்கும் ஏற்றவாறு பல்வேறு விதமான சீதனப் பெக்கேஜுகளை விற்பனை செய்கின்றார்கள். ஒட்டமாவடி ஆசிரியர் ஒருவர் குறிப்பிடுகையில் "ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள மத்திய கல்லூரியில் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவுகளை மிகவும் கஷ்டப்பட்டு கட்டியெழுப்பி டாக்டர்களையும், பொறியியலாளர்களையும் எமது பிரதேசத்தில் உருவாக்கினேன். ஆனால், அவ்விதமாக உருவாகிய டாக்டர்களும், பொறியியளாளர்களும் சீதனத்தை பேரம் பேசுவதை பார்க்கும் பொழுது அவர்களை இதற்காகத்தானா உருவாக்கினேன் என்று நினைத்து கவலைப்படுகிறேன்" என்றார்.

கல்வி கற்பது சீதனத்தை அதிகரித்துக்

கொள்வதற்காகவா என்பதை எடுத்துக்காட்ட இது ஒரு சிறந்த உதாரணமாகும். கல்வி கற்றவர்களே சீதனத்தை ஒழித்துக் கட்ட முன் நின்று செயற்படாமல் அவர்களே அதனை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப் பதானது இப்பிரச்சினை தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தில் பயணிக்கும் என்பதற்கு சான்றாக உள்ளது. சீதனம் வழங்க வசதியில்லாத பல பெண்கள் தமது திருமண வயதை அடைந்தும் திருமணமாகாத வர்களாக இருக்கின்றார்கள். இஸ்லாமிய மார்க்க அறிஞர்களும், இஸ்லாமிய இயக்கங்களும் சீதனத்தை ஒழிப்பதற்கு பெரிதளவு முயற்சியினை மேற்கொள் வதில்லையென அப்பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### சமூக ஈடுபாடு

முஸ்லிம் சமூகத்தில் பெண்களை விட ஆண்களே குழுவாக சேர்ந்து சமூக விடயங்களில் கலந்துரையாடலிலும் ஈடுபடுகின்றார்கள். பெண்கள் பெரும்பாலும் வீட்டு வேலைகளோடு நின்று விடுகின்றார்கள். இதனை எடுத்துக் காட்டும் விதமாகவே புல்மோட்டை கலந்துரையாடல் அமைந்திருந்தது. பெண்களுக்கு அழைப்பு விடுத்திருந்தும் அவர்கள் பங்கு பற்றாமல் அவர்களுடைய பிரதிநிதியாக ஆண்கள் பங்கு பற்றியமை இதனை எடுத்துக் காட்டியது.

இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய ஆண்களும் தமது பிரதேசத்தில் பெண்கள் சங்க மொன்று இருப்பினும் அது செயற்படுவதாக தென்படவில்லையென குறிப்பிட்டனர். இதற்கு பல காரணங்களையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். பெண்களுக்கு கல்வி அறிவு இன்மையும், வீட்டுச் சுமை அதிகரிப்புமே அவர்களை சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தியுள்ளது. புல்மோட்டை பிரதேசத்தை பொறுத்தவரை பெண்கள் ஜனாஸா குளிப்பாட்டு வதற்கும், மணமகளை சோடிப்பதற்கு மாத்திரமே கூட்டாக கலந்து கொள்கின்றனர். இதுதான் அவர்களுடைய உயர்ந்த சமூக பங்குபற்றலாக காணப் படுகின்றது. பெண்களை பெண்களாகவே தங்களை வீட்டுக்குள் மாத்திரமே அடைத்து வைத்துக் கொள்வது அல்லது அவர்களை வீட்டிற்குள் மாத்திரம் அடைந்திருப்பதாக பணிப்பதும் வளர்ச்சியடைய எத்தனிக்கும் எந்தவொரு சமூகத்தினருக்கும் எந்த விதத்திலும் பிரயோசனமாக அவை அமையப் போவதில்லை.

கிண்ணியா பிரதேசத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் ஆண்கள் மாத்திரமே கலந்து கொண்டனர். பெண்கள் குடும்பத்துக்குள் மாத்திரம் தீர்மானம் எடுக்கக்கூடிய சக்தி உடையவர்களாக இருக்கின்றார்களே தவிர சமூகம் என்று வரும் போது பெண்கள் தீர்மானம் எடுப்பதற்கு எவ்விதமான சக்தியோ சந்தர்ப்பமோ இல்லாத நிலைப்பாட்டின் அறிகுறியாகவே இது உள்ளது. பெண்கள் சமூக மேம்பாட்டு விடயங்களில் ஈடுபடல் பற்றிய கலந் துரையாடல் முல்லிப்பொத்தானையிலும் நடை பெற்றது. இதில் சமூகம் பெண்களை கட்டுப் படுத்துகின்றது என்பதை பங்குபற்றிய அனைவரும் ஏற்றுக்கொண்டனர். ஆனால், அதனை தவிர்ப் பதற்கான உரிய வழிமுறைகள் முன் வைக்கப் படவில்லை. பெண்கள் பெண்களுக்குரிய அலுவல் களில் மாத்திரமே ஈடுபட வேண்டுமென் அங்கு கலந்து கொண்ட மார்க்க அறிஞர்கள் கருத்து தெரிவித்தனர். ஏனெனில் பெண்கள் ஆண்களை விட அறிவிலும், உடல் ரீதியிலும் பலவீனமானவர்கள் என்ற கருத்தை அவர்கள் முன் வைத்தனர். முஸ்லிம் சமூகம் இன்னும் பழமைவாத மரபுகளை பின் பற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை மேற் கூறிய கருத்து எடுத்துரைக்கின்றது.

### பெண் புத்திஜீவிகள்

பெண்கள் புத்திஜீவிகளாக வருவதில் உள்ள கதைகள் பற்றிய கலந்துரையாடல் கொழும்பில் இடம் பெற்றது. இதன் போது பெண்கள் புத்திஜீவிகளாக வருவதில் இஸ்லாமிய ரீதியாக எந்தவிதமான தடைகளும் இல்லை. இஸ்லாமிய வரலாற்றில் பல முஸ்லிம் பெண்கள் புத்தி ஜீவிகளாகவும், மார்க்க அறிஞர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பது பற்றிய பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. தற்கால சமூகத்தில் காணப்படுகின்ற ஆண் ஆதிக்கமும், இள வயதுத் திருமணமும் தான் பெண்களின் கல்வியினை பாதிப்பதாக இங்கே கலந்து கொண்ட பெண்கள் தெரிவித்தனர்.

நடைபெற்ற 10 கலந்துரையாடல்களிலும் பெண்கள் தமக்கு கிடைத்த வாய்ப்பாகவே கருதினர். தங்களது மனதுக்குள் இதுவரை காலமும் பதுக்கி வைத்திருந்த மனக் குமுறல்களை வெளிப்படுத்தும் தளமாக இக் கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன. பொதுவாக இஸ்லாம் பெண்களுக்கு கல்வி, தொழில், சமூக விடயங்களில் ஈடுபடல், தீர்மானம் எடுத்தல், புத்திஜீவிகளாக வருதல் தொடர்பாக எந்தவிதமான கட்டுப்பாடுகளையோ, தடைகளையோ விதிக்க வில்லையென மார்க்க அறிஞர்கள் குறிப்பிடு கின்றார்கள். ஆனால், சமூக ரீதியில் அவற்றுக்கு கட்டுப்பாடுகள் இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தாலும். அதனை அதேமார்க்க அறிஞர்கள் அடங்கலாக சமூகத்தில் பலர் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

முஸ்லிம்களின் பிரச்சினைகளை குளிரூட் டப்பட்ட ஹோட்டல்களில் மாத்திரம் கதைத்து விட்டு செல்லுவது என்பது பிரயோசனமற்ற நேரத்தை வீணடிப்பதாகும். அவர்களுடைய பிரச்சினைகளை அவர்களிடமே சென்று அவர்களின் மூலமாகவே வெளிக் கொண்டு வந்து அவர்களை அவர்களாகவே திருத்திக் கொள்வதற்கு வழி காட்டுவதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

■

# பெண்கள் தொழில் ரீதியாக எதிர்நோக்கும் சவால்கள்

அஷ்ரஃப் எம்.மாபீர், நாச்சியாதீவு

எமது பிரதேசங்களில் பெண்கள் இன்று எவ்வாறான கல்வியினைத் தொடர் கின்றார்கள்? எவ்வாறான தொழில் வாய்ப்புகளை விரும்பியோ விரும்பாமலோ நாடுகின்றார்கள் என்ற விடயங்களை நாம் நன்கு அறிவோம். முஸ்லிம் பெண்கள் ஏன் குறிப்பிட்ட உயர்கல்வியை மட்டும் அல்லது தொழிலை நாடுகின்றனர்? இதற்கான சமூக, பொருளாதாரக் காரணிகள் என்ன? முட்டுக்கட்டையாக அமைந்திருப்பது எது? என்ற வினாக்கள் எம் மனங்களை நாளாந்தம் தொட்டுச் செல்கின்றன. சிலரின் பார்வையில் மதம் என்றும் சிலரின் பார்வையில் சமூகமும் சமூகத்தின் நம்பிக்கைகளும், சடங்குகளும் என்றும் மற்றும் திருமணத்தின் பின்னரான வாழ்க்கை என்றும் பல விடயங்கள் கிடைக்கப் பெறுகின்றன. இதுபற்றிய தெளிவான விளக்கமோ, கருத்துக்களோ இன்னும் எமது சமூகத்தில் இல்லை.

இந்நிலையினை ஆய்ந்து அதற்கேற்ற தீர்வுகள் முன்மொழியப்பட வேண்டும். குறிப்பாக மக்கள் கருத்துக்கள் இந்த விடயங்கள் சார்ந்த பிரச்சினைகளைப் பதிய வேண்டும் என்ற எண்ணக்கருவில் இலங்கை அபிவிருத்திக்கான ஊடக மன்றத்தின் அனுசரணையில் படிகள் பதிப்பகத்தின் ஏற்பட்டில் கடந்த மாதம் அநுராதபுரம் நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

இக்கருத்தரங்கின் நெறியாள்கையை நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் பஸ்லான் மொஹமட் அவர்களும், வஸீம் அக்ரம் அவர்களும் மேற்கொண்டனர். இந்நிகழ்வுக்கான ஒலி, ஒளிப்பதிவுகளை பிரபாகன் அவர்களும் ஊடகவியலாளர் எம்.சி. சபூர்தீன் அவர்களும் மேற்கொண்டர். நிகழ்ச்சியில் வளவாளர்களாக சட்டத்தரணி இப்ராஹிம் அவர்களும், அநுராதபுரம் அஹதியா பாடசாலை அமைப்பின் தலைவர் எம்.ஏ.எம். டில்சான் அவர்களும் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழவில் பல கேள்விக்கனைகள் ஊடாக பல கருத்துக்களும் மாற்றுக் கருத்துக்களும் பகிரப்பட்டன. இவ்வாறான பயன்தரும் நிகழ்வுகள் பெண்களது உளவியல் உணர்வுகளை தேற்ற வழிசமைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. தவிரவும் பெண்களது தொழில் சார்க் கனவுகளை நனவாக்குவதுடன், அவர்களது சவால்களை உடைக்கவும் வழிசெய்தது என்பது விதந்துரைக்கத்தக்கது.

இவ்வாறு பொதுமக்களை இணைத்துக்கொண்டு ஏற்படுத்தப்படும் நிகழ்வுகள் பெண்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவல்லது. இவ்வாறான கருத்தியல்கள் கட்டம் கட்டமாக சாதக நிலையை அடைவதன் ஊடாக நமது சமூகத்தின் மருலர்ச்சிக்கான அடையாளங்கள் துல்லியமடையும். இது பிரதேச ரீதியாக மட்டுமன்றி நாடளவிய ரீதியில் செல்ல வெண்டும். இதுவே எமது பிரார்த்தனை.

# கல்வி: பெண்ணை வலுவூட்டுகின்றதா?

ரிஸ்னா ரசீன், இக்கிரிகொள்ளாவ

இலங்கை அபிவிருத்திக்கான ஊடக மன்றத்தின் பணிப்பாளர் எம்.சி. ரஸ்மின் அவர்களது வழிகாட்டலில் கடந்த மாதம் அநுராதபுரம் சீ.ரி.சீ வரவேற்பு மண்டபத்தில் அநுராதபுரப் பிரதேச முஸ்லிம்களின் கல்வி என்ற கருப்பொருளில் பயனுள்ள கலந்துரையாடல் அல்லது கருத்தாடல் நிகழ்வொன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பெண்களது கல்வியல் சார் சமூக, பொருளாதார, அரசியல் சமய நடத்தை ரீதியான தடைகளும் அவை பெண்களது உளவலுவாக்கம், பெண்களது நடத்தை வலுவாக்கம், சமூக வலுவாக்கம் போன்றன பற்றிய கருத்துக் களை கலந்து சிறப்பித்த சகோதர சகோதரிகள் முன்வைத்தனர்.

பிரமாண்டங்கள் நிறைந்த இந்த 21ம் நூற்றாண்டில் பெண் ஒரு சமூகப் பிராணியா? அல்லது ஆண்களது கைப் பிராணியா அவளது இயல்பூக்கம் என்ன? அவளது கல்வியின் அடைவு என்ன? போன்றன பற்றிய கருத்துக்களை சமூக அனுபவங்கள், சம்பவங்கள், மற்றும் சிந்தனைகள் போன்றன வற்றின் மைய நிலையான கருத்துக்களை வந்திருந்தவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வுகளின் அறிமுகவுரையை இலங்கை அபிவிருத்திக்கான ஊடக மன்றத்தின் நிகழ்ச்சி முகாமையாளர் பஸ்லான் மொஹமட் அவர்கள் (விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்) நிகழ்த்தினார். நிகழ்ச்சி ஒழுங்கமைப்பை இம்மன்றத்தின் சிரேஷ்ட வளவாளர் சட்டத்தரணி மர்சூம் மௌலனா மேற்கொண்டார். இந்நிகழ்வில் வளவாளர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் சமத் அவர்களும், கல்விப் போதனாசிரியர் எம்.எஸ். லத்தீப் அவர்களும், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் அவர்களும் கலந்து சிறப்பித்து, நிகழ்வில் கலந்து கொண்ட ஆர்வலர்களுக்கு பெண் கல்வி தொடர்பான அரிய கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். இக்கலந்து ரையாடலில் ஈடுபட்ட பெண்கள் தாம் சமூகத்தில் எதிர்நோக்கு கின்ற சடங்குகள், சமூக நிலைகள், கிராமத்தில் இருக்கின்ற மக்களது கல்வி தொடர்பாக இருக்கின்ற அறியாமைகள், கல்வியில் மட்டுப்படுத்தளவில் வழங்கப்படுகின்ற அந்தஸ்த்து கள், பெண்களது உளவியல் வெளிப்பாடுகள், பெண்களது தன்நம்பிக்கை உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி தமது அபிப் பிராயங்களையும் மாற்றுக்கருத்துக்களையும் முன்வைத்தனர்.

இதுவரையில் பெண்கள் தொடர்பான இவ்வாறான திறந்த கலந்துரையாடல்கள் இடம்பெறாத சூழலில் இது ஒரு முக்கியமான அடைவாக இருந்தமை, பெரும்பாலான பெண்களது அபிப்பாரயமாக இருந்தது. பெண்களது இருப்பை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தவது, பாதிக்கப்பட்ட பெண்களின் உளநிலையை உயர்த்துவது, கல்வியின் பால் அவர்களை தூண்டுவது, பெண்களது சமூக அந்தஸ்த்தை நிர்ணயிப்பது என்ற நிலையை இக்கலந்துரையாடல் அளித்தது என்பது மகிழ்ச்சி. இவ்வாறான பயனுள்ள நிகழ்வுகள் இப்பிராந்திய வலுவாக்கத்தை ஊக்குவிக்கும் என்பது இந்நிகழ்வு தந்த முக்கிய அநுபவமாக இருந்தது.

கட்டுரை

# தமிழில் மலர்ந்த இலக்கியங்களுள் இஸ்லாமிய படைப்புக்களின் சிறப்பு

■ கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி

உலகில் தோன்றிய நாள் தொட்டு தொடர்ந்து வாழ்ந்து வரும் தொன்மை மொழிகளுள் ஒன்றான நம் தேமதுரத் தமிழ் மொழிக்கு உலக மொழிகள் எதற்கும் கிட்டாத ஒரு சிறப்பு என்றும் உண்டு. அதுதான்... உலகின் பிரதான சமயங்களான இந்து, இஸ்லாம், கிருஸ்தவம், பௌத்தம், சமணம் ஆகியவற்றினால் தாலாட்டி சீராட்டி பாராட்டி வளர்க்கப்பட்ட பாக்கியம் இந்த பாருலகில் வேறு எந்த பாசைக்கும் கிட்டாத பேறு எனத் தமிழ் நெஞ்சங்கள் யாவும் பெருமையுரலாம்.

இதனால்: மேற்கண்ட சமயங்களின் சாறுகள் சங்கத் தமிழில் அவ்வச் சமய இலக்கியங்களாக இயங்குகின்றன, விளங்குகின்றன. தொன்மைத் தமிழில் இதுகாலம் வரை தோன்றிய இலக்கியங்கள் யாவற்றிலும் பொதுவான சிந்தனைகளை தாங்கி வந்தவைத் தவிர ஏனைய இலக்கியங்கள் யாவும் மேற்படி பிரதான சமயங்கள் ஐந்தினுள் ஒன்றைத் தொட்டே தொடர்பு படத்தியே அமைந்திருக்கும் என்பதில் துளிகூட சந்தேகத்திற்கு இடமில்லை.

இந்த சமய இலக்கியங்கள் நம் சங்கத் தமிழை இதப்படுத்தியிருக்கின்றன. புதப்படத்தியிருக்கின்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் படைத்தது போலவே இஸ்லாமிய சமய சூபியாக்களும் மஸ்தான்களும் கிருஸ்தவ பௌத்த சமண சமயக் குரவர்களும் படைத்த சமய இலக்கியங்கள் யாவும் தமிழில் பக்தி இலக்கியங்களாக சன்மார்க்க மணம் வீசி வருகின்றன எனலாம். தமிழில் ஐம்பெரும் காப்பியங்கள் எனப் போற்றப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, சீவக சிந்தாமணி, குண்டகேசி யாவும் ஏதோவொரு சமயத்தின் சந்தன மணம் கமழும் இலக்கியங்களாகவே பேசப்படுகின்றன. சிலப்பதிகாரம் என்ற காப்பியம் இந்து சமய விழுமியங்களைத் தழுவி எழுந்த காப்பியமாகும். மணிமேகலை பௌத்த சமய சிந்தனைகளைத் தூவி நிற்கும் காப்பியமாகும். வளையாபதி, சிவக சிந்தாமணி, குண்டகேசி, ஆகிய மூன்றும் சமண சமயத்து இலக்கியங்களாக திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வைந்து காப்பியங்களும் தமிழில் தமிழ் நாட்டில் சுய ஆக்கங்களாக எழுந்தவை. இவ்வைந்தினுள் அடங்காத, இப்போதும் தமிழ் சமூகத்தினால் உச்சிமீது வைத்து மெச்சப்படும் கம்பராமாயணம், தமிழில் – தமிழ் நாட்டில் நாட்டில் தோன்றிய சுய ஆக்கக் காப்பியமல்ல. வட இந்தியாவில் வால்மீகி என்பவரால் ஆக்கப்பட்ட இராமாயணத்தைத் தழுவி கவிச்சக்கரவர்த்தி கம்பனால் தமிழ் நாட்டை நிலை களனாகக் கொண்டு தமிழில் ஆக்கப்பட்ட தமிழக்காப்பியம் என்பதும் இந்த சமயம் சார்புடைய காப்பியம் இது என்பதும் நம் கவனிப்புக்குரியன.

இதுபோன்றே முஸ்லிம் புலவரான உமறுப் புலவர் என்பவரால் எழுதப்பட்ட சீறாப்புரணமும் தமிழில் – தமிழ் நாட்டில் தோன்றிய சுய ஆக்க காப்பியமல்ல. வடஇந்தியாவின் உர்து மொழிக் கவிஞரான அல்லமா ஷிப்லி நுஃமானி என்பவரால் எழுதிய "ஷீரத்துன்னபி" என்னும் காப்பியத்தை அடிப்படையாக கொண்டே தமிழ் நாட்டு தூத்துக்குடி மாவட்டம் நாகலாபுரம் எட்டய புரத்தில் பிறந்த உமறுப் புலவர் தமிழ் நாட்டை நிலைகளாக கொண்டு தமிழில் ஆக்கப்பட்ட முழுக்க முழுக்க தமிழ்க் காப்பியமாகும். அதனால்தான் பாலைவன அரபு மண்ணைப் பாடவந்த பாவலர் உமர் "மருக்கமழ் சோலை சூழ் மக்கமா நகர்" என்று சீறாப்புராணத்தில் பதுறுப் படலத்தில் நகர் வர்ணனை புரிகின்றார். இது இஸ்லாம் மார்க்கம் சார்ந்த இஸ்லாமிய தமிழ்க் காப்பியமாகும்.

இதுபோன்று மதுரை மீசல் வண்ணக் கலஞ்சியப் புலவர் முழுக்க முழுக்க தமிழ்க் காப்பியமாகவே படைத்த "இராஜ நாயகம்" சுலைமான் நபியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட காப்பியம் முதற்கொண்டு நம்காலத்தில் அதாவது 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ்நாடு கூத்து நல்லூரைச் சேர்ந்த கவிஞர் திலகம் சாரணபாஸ்கரனார் தீட்டிய "யூசுப் சுலைகா" காவியம் வரை நம்முஸ்லிம் புலவர்கள் எண்ணிறந்த படையல்களைப் படைத்து தமிழன்னையை மகிழ்வித்துள்ளனர்.

தமிழ் நாடு இருகரம் நீட்டி அழைத்து பல்கலைக்கழக ஆசனத்தில் அமர்த்திய நம்நாட்டுத் தமிழறிஞர்கள் இருவர். ஒருவர் சுவாமி விபுலானந்தர். மற்றவர் அல்லமா ம.மு. உவைஸ். ஆவார். அல்லமா ம.மு. உவைஸ் அவர்களை முதலமைச்சர் எம்.ஜீ. இராமச்சந்திரன் காலத்தில் அழைத்து மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பீடத்தை உருவாக்கி, அதன் அக்கிராசனர் பதவியை உவைஸ் அவர்களுக்கு உவந்தளித்தார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் அரவணைப்பில் தமிழ் நாட்டின் பட்டி தொட்டி எங்கனும் தேடித் துழாவி முஸ்லிம் புலவர்கள் தமிழுக்கு செய்த படையல்களை பணிகளை எல்லாம் தூசு தட்டி "இதவரை முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் 5000க்கு மேற்பட்ட இலக்கியங்களை படைத்துப் போந்தனர்" என்ற தகவல்களை நிறுவி, ஆறு தொகுப்புக்களாக வெளியிட்டு (மேற்படி ஆறு இஸ்லாமிய தமிழ் இலக்கியத் தொகுப்புக்களும் மதுரை காம ராஜர் பல்கலைக்கழக காப்பகத்தில் இருக்கின்றன என்பது கவனிப்புக்குரியன) பெருஞ்சாதனை படைத்தே வபாத்தானர் அல்லமா உவைஸ் அவர்கள்.


அல்லமா உவைசின் மறைவிற்குப் பின் அவரது சீடர்களான தமிழ்நாட்டு முஸ்லிம் அறிஞர்கள் மேற்கொண்ட ஆய்வின் அறுவடையாக முஸ்லிம் புலவர்களின் தமிழ்ப்பணி ஏழாயிரத்தை எட்டியிருக்கின்றது என்ற புதிய தகவலை சமீபத்தில் ஜூலை 8,9,10 ஆகிய முத்தினங்களாக தமிழ்நாடு காயல்பட்டனத்தில் சிறப்புற நடந்தேறிய 15வது இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழக மாநாட்டில் நிறுவியுள்ளனர்.

இப்படி தமிழ் பேசும் முஸ்லிம் புலவர்களும் அறிஞர்களும் எழுத்தாளர்களும் படைத்த இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களில் தமிழில் மலர்ந்த ஏனைய இலக்கியங்கள் எதற்கும் இல்லாத ஒரு சிறப்பு காணப்படுவது நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்று. தமிழில் மலர்ந்த ஏனைய சமய இலக்கியங்களில் சமயச் சண்டைகள் புலவர்களிடையே பரவலாக ஏற்பட்டுள்ளன. ஒரு சமயப் புலவர் இன்னொரு சமயப்புலவருடன் சமயச் சண்டைப் புரிந்து பா இயற்றியுள்ளனர். இந்தச் சமயச் சண்டை வரிகளை தமிழிலக்கியங்களில் பரவலாக காணலாம். ஆனால் இஸ்லாமிய தமிழ்ப் புலவர்கள் எந்த இடத்திலும் சமயச் சண்டையில் ஈடுபட்டதுமில்லை. இஸ்லாம்தான் சிறந்த மார்க்கமென எங்கும் எழுதியதுமில்லை.

சமய நல்லிணக்கமே முஸ்லிம் தமிழ்ப் புலவர்களின் அடிமனத்து ஆசையாக எழுத்தில் ஓசையாக எழுப்பியுள்ளது. இது இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் சிறப்பன்றோ

---


# மீண்டும் மீண்டும் கேள்விகளோடு



பலம் பெற்றும்
பலம் இழக்கும்
வார்த்தைகளில்
மீண்டும் மீண்டும்
ஒரே புள்ளியில்
சந்திக்கும் கோடுகள்
தூரக் களைப்பு
மாறமுன்னரே மீண்டும்
பயணம் பற்றிய
மனப் பயம்
முற்றுப் புள்ளியை
நெருங்கிடும்
ஒவ்வொரு கணங்களிலும்
காற்புள்ளி இட்டுக் கொள்(ல்)கிறது
காலம்

ஏன் இப்படி கேள்விக்குறிகளோடு
அலைகிறது எம்
உயிர் வாசம்

புலோலியூர் வேல் நந்தன்



# தட்டிவீட்டில் ஒரு சாகவாத ஒளிப்பிழம்பு

ஆனந்தி

அந்தத் தட்டி வீடு இன்னும் ஞாபகத்தில் இருந்தது. அழியாத விளக்காய் அதன் பிரகாசம், பூரணி மனசெல்லாம் நிறைந்து கிடந்தது. நிழல் காணாத நிஜ உலகின் ஒரு யதார்த்த வடிவம் அது. அதற்கு உயிர் இருப்பதாக அவளுடைய நம்பிக்கை. இக்கால வாழ்க்கையின் சகல அசைவுகளிடையே, காலச் சிதைவுகளுக்குள் சிக்காமல், மனதின் எங்கோ ஒரு மூலையில் கம்பீரம் கொண்டு அது மிளிர்வதாய் அவள் உணர்வதுண்டு.

அந்தத் தட்டிவீடு காலத்தால் அழியாத நினைவுச் சின்னம் போல, அளுக்கு. மிகச் சின்ன வயதில், பத்துப் பதினாறு வயதாயிருக்கும் போது, அந்தத் தட்டிவீட்டின் சகவாசம், அவளை மனம் குளிர வைத்தது. அவள் வாழ்ந்ததென்னவோ, பெருங்கல் வீட்டில் தான். அங்கு அப்போது ரேடியோ இருக்க வில்லை. வீட்டிற்கு வீடு டி.வி.யென்ன ரேடியோவே வராத காலமது. அபூர்வமாக அந்தக் தட்டி வீட்டிலே தான் ரேடியோ இருந்தது. பூரணியின் வீட்டிற்கு முன்பாகச் சிறிது தூரம் தள்ளி பனந்தோப்பு நடுவே ஏகாந்தமாக, அந்தத் தட்டி வீடு தனிமையில் மோனத் தவமியற்றியவாறிருக்கும். வெறும் ஓலைக் குடிசைதான். முன்னால் சிறு தலைவாசல் மண்ணிலான அரைச்சுவர் இரு புறமும் அதன் மறைப்பு கிடுகிலான தட்டிகள் பூரணி அங்கு அடிக்கடி போய் வருவாள், பாட்டுக் கேட்க அவள் வருவதைக் கண்டதும் சீனியாச்சி, ரேடியோ சகிதம் ஆஜராகி விடுவாள், சீனியாச்சியென்றால், ஊர் முழுக்கத் தெரியும். உறவென்று இல்லாவிட்டாலும், பரிச்சயமானவர்களுக் கெல்லாம் அவள் சீனியாச்சிதான். புருஷனுக்கு டவுனிலே கணக்குப்பிள்ளை வேலை.

அவர் ஒரு மாதிரி பெட்டைச் சகவாசம், சீனியாச்சி தவிர வேறு இடங்களிலுமுண்டு. பாவம் சீனியாச்சி அப்பாவியாக எல்லோரோடும் அன்பு கொண்டு பழகுகிற மென்மையான போக்கு, அவளுடையது. காலை பத்து மணிக்கெல்லாம் பூரணி ரேடியோவில் பாட்டுக் கேட்க, அங்கு பிரசன்னமாகி விடுவாள். இலங்கை வானொலி வர்த்தக சேவையில் காலை பத்து மணிக்குத்தான் பழைய சினிமாப் பாட்டெல்லாம் போடுவார்கள். அவர்கள் வீட்டுச் சிறிய ரேடியோவிலிருந்து கனதியாகச் சத்தம் வரும்.

அவள் பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்கும் போது, சீனியாச்சியின் ஒன்றரை வயதுக் குழந்தை மீன் சதையைச் சாப்பிட்டவாறு, ஓடிவந்து அவள் மடியில் குந்திக் கொள்ளும். அவளுக்கு மீன் வாடை பிடிக்காது. அவர்கள் வீட்டில் சைவச் சாப்பாடு தான். எனினும் பொறுத்துக் கொள்வாள்.

சீனியாச்சி அரையிலே துண்டு கட்டி மேலே சட்டை போடுவது வழக்கம். சிறிய பத்தி இறக்கிச் சமையல் தடபுடலாக நடக்கும். சீனியாச்சிக்குக் கணவன் குறித்து எந்த மனவரத்தமும் இருப்பதகத் தெரியவில்லை. சுாணம்

மெழுகிய வீடு போலவே, அவளது முகத்திலே இயல்பான அமைதியுடன் ஒரு குளிர்ச்சி பரவி நிற்பதை பூரணி தரிசனமாகவே கண்டிருக்கிறாள்.

தொடர்ந்தும் சில நாட்களாகச் சீனியாச்சி வீட்டிற்குப் போய்ப் பாட்டுக் கேட்காமல் விட்டது. என்னவோ போலிருந்தது. மனமே மரத்துப் போனது போல் தோன்றியது. பள்ளிக்கூடம் விட்டுச் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் தான் அங்கு போய் வர ஓய்வு கிடைத்தது.

சனிக்கிழமையென்று ஞாபகம். அவள் காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, பாட்டுக் கேட்கச் சீனியாச்சி வீட்டை போகக் கிளம்பிய போது வாசலில் அம்மா வழி மறித்துக்கொண்டு நின்றாள்.

"நான் பாட்டுக் கேட்க வேணும். வழிவிடுங்கோ. நீ இனி அங்கை யெல்லாம் போகக் கூடாது."

"ஏனம்மா? இவ்வளவு நாளும் போய்வந்த இடம் தானே இப்ப என்ன வந்திட்டுது.?"

"காலையில் நடந்த சங்கதி உனக்குத் தெரியாதே" என்றாள் அம்மா உதடு சுழித்த வண்ணம்.

"என்னம்மா சொல்லுறியள்? எனக்கொன்றுமே தெரியாது."

"பாவம் நீ என்ன செய்வாய்? உனக்குப் பாட்டுக் கேட்குற அவதி. இனி இதுக்காக நீ அங்கையெல்லாம் போறது சரியில்லை. அந்த மனுசன் ஆரோ பெட்டையோடை தொடர்பாம். ராத்திரிக் கள்ளன் பிடிபட்டு ஆள் இப்ப இஞ்சை இல்லையாம். ஊரிலை கதை நாறுது." என்றாள் அம்மா சர்வசாதாரணமாக.

நல்ல வேளை நான் தப்பினேனென்று பூரணிக்கு யோசனை ஓடியது. இந்த நிலைமையில் அங்கு போகாமல் விடுவது உசிதமில்லையென்று பட்டது. இது சீனியாச்சியையே அவமதிப்பது போலிருக்கும்.ப பாட்டுக் கேட்பதற்காக அவ்வளவு நாளும் போய் வந்துவிட்டுத் துன்பப்படுகின்ற இந்த நேரத்தில் முகத்தில் முழிக்க அஞ்சுவது நன்றி கெட்ட தனமாகிவிடாதா?

"அம்மா கணக்குப்பிள்ளை ஒழிஞ்சு போனு இடத்திலை சீனியாச்சி தனிய இருந்து கஷ்டப்படும் தானே. பாட்டுக் கேட்க மட்டும் போறது, இப்ப போகாமல் விடுறது என்ன நியாயம்.?

"நான் தடுக்கேலை, நீ தாராளமாய் போ. ஆனால் அந்த மனுசிக்கு உன்ரை முகத்திலை விழிக்கவே வெட்கமாக இருக்கும்."

"அதுவும் சரிதான். நான் வேடிக்கை பார்க்கவே வந்திருப்பதாக அவ எண்ணவும் கூடும். கொஞ்ச நாள் போகட்டும் பிறகு பார்க்கலாம்."

அவளை அங்கு தங்க வைப்பதற்காக வீட்டிற்கு ஒரு புது ரேடியோவே வந்துவிட்டது. பூரணி தவிர்ந்த ஏனையோருக்குத்தான் அது உபயோகமாக இருந்தது. பூரணி இப்போ தெல்லாம் பாட்டுக் கேட்பதில்லை. அப்படிக் கேட்க நேர்கிற பாட்டும் ஜீரணமாவதில்லை.

அவள் பாட்டுக் கேட்டு மகிழ்ந்த தெல்லாம் அந்தத் தட்டிவீட்டின் மூச்சோடு கலந்த வெறும் கனவாகவே முடிந்து போனது. எத்தனை உயிர் சம்பவங்கள் வந்து பொருந்தினாலும் அவள் அந்தத் தட்டிவீட்டிற்குப் பாட்டுக் கேட்டு மகிழப் போய் வந்த காலமே அவளைப் பொறுத்தவரை பொய்த்துப் போகாத ஒரு ஜீவ காவியமாய் தன்னுள் நிலை கொண்டு ஒளி வீசிக்கொண்டிருப்பதாய் அவள் உணர்ந்தாள். இத்துனைக்கும் காரணம் வெறும் பாட்டு மட்டுமல்ல. அதற்கு உயிர் கொடுத்து ஒளி ஏற்றுகின்ற மையப் பொருளாய், ஜீவ கலையுடன் வலம் வந்த சீனியாச்சியை எப்படி அவளால் மறக்க முடியும்? ஒவ்வொரு தருணமும், பாட்டுக் கேட்க நேர்கையில் அந்தத் தட்டி வீட்டு மறைப்புச் சுவரிடையே ஓர் அணையாத சத்திய ஜோதி போலச் சீனியாச்சியே முகம் மின்னிப் பளிரிட ஒளி வீசிக் கொண்டிருப்பதாய், அவளுக்கு உணர்வு கட்டும்.

எத்தனை யுகம் சென்றாலும் அவள் மனதை விட்டு அழியாத அந்த உயிர்க்கோலம், அவள் கேட்டு மகிழ்ந்த பாட்டை போலவே, சீனியாச்சியின் முகமும் துன்பத்திலும் சுடர்விடும் சாசுவத உயிர்ப் பிழம்பு அந்த முகம்.

யாவும் கற்பனை

புதிய
படைப்புக்களையும்,
விமரிசனங்களையும்
எதிர்பார்க்கிறோம்

# செவ்வி

தமிழ் இலக்கியப் பரப்பில் இடையறாது இயங்கி வருவோருள் அல் அஸூமத் அவர்கள் ஒரு பன்முகப் படைப்பாளி. புலராப் பொழுதுகள், மலைக்குயில், குரல்வழிக் கவிதைகள் ஆகிய கவிதை நூல்களுடன் வானொலியில் நீண்ட காலம் தான் நடத்தி வந்த கவிதைச் சரம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட கவிதைகளைத் தொகுத்தும் தந்தவர். இவரது வெள்ளை மரம் சிறுகதைத் தொகுதி தேசிய சாஹித்திய விருது பெற்றது. பிலால் - என்ற அவர் மொழிபெயர்த்த நூல் இன்று மூன்று பதிப்புக்களைக் கண்டிருக்கிறது. அண்மையில் அவரது "அறுவடைக் கனவுகள்" என்ற நாவல் வெளிவந்துள்ளது.



கவிஞர் அல் அஸூமத்

பூபாளம், பௌர்ணமி, முகில் ஆகிய சிற்றேடுகளை நடத்தியவர். வானொலியில் இளைஞர் இதயம், இலக்கிய மஞ்சரி, கவிதைச் சரம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளதுடன் வானொலி, தொலைக் காட்சிக் கவியரங்குகளுக்கும் தலைமை வகித்து நடத்தியவர்.

நுஜூமுஸ்ஸூஅரா, கலாபூஷணம், இலக்கிய சாகரம் ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவருக்கு இவ்வாண்டு காயல்பட்டணத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் "தமிழ் மாமணி" வருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

கவிஞர் அல் அஸூமத் அவர்களை படிகள் சஞ்சிகைக்காக அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

**சந்திப்பு:- முல்லா**

*இன்றைய தமிழ் இலக்கியச் சூழல் எப்படி இருக்கிறது?*

ஆரோக்கியமாக இருக்கிறது என்று சொல்லவும் முடியாது; ஆரோக்கியமற்றதாக இருக்கிறது என்று சொல்லவும் முடியாது. இந்த நிலை என்றும் தொடர்ந்து வருவதுதான். நல்ல எழுத்துகள் பிறக்கவும் செய்கின்றன; நல்லதல்லாதவை பிறக்கவும் செய்கின்றன. இது இயற்கைதான். என்றாலும், நல்லதல்லாதவை பெறும் இலகுவான இடத்தை நல்லவை பெறக் கடினமாக இருக்கிறது. காரணம், வணிக ஊடகங்களே அதிகமாக இருப்பதால், இடம் நிரப்புவதற்காகவும் அறிந்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் அவை. எது கிடைக்கிறதோ அதைப் பிரசுரிக்கின்றன. அவற்றின் தரம் அறியும் திறமையுள்ளவர்களும் ஊடகங்களில் மிகக் குறைவு. சில பிரசுரக் களங்கள், தங்களின் கொள்கைகளுக்கேற்ப உள்ளவற்றை மட்டுமே பிரசுரிக்கின்றன. இதனால் நல்ல ஆக்கம் மறைக்கப்படுகின்றது. இந்தக் கோஷ்டி மனப்பான்மையாலும் நல்ல படைப்புகள் களம் இழக்கின்றன. மிக நீளமானது, இன்னார் கோபித்துக்கொள்வார், இது அரசுக்கு விரோதமானது, இதை விளங்கமாட்டார்கள், இவருக்கு இடம் கொடுக்கக் கூடாது போன்ற காரணங்களும் அதி ஊமைத்தனமாக ஆட்சி செய்வதால் நல்ல படைப்புகள் வெளிவராமற் போகின்றன. இது ஆரோக்கியமற்ற நிலைமையைச் சுட்டுகிறது. சலித்தெடுத்து நல்ல படைப்புகளை மட்டுமே பிரசுரிக்கும் இலக்கியச் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் மிகக் குறைவாக இருப்பதுவும் ஒரு காரணமாகும்.

*இன்றைய ஈழத்து தமிழ்ச் சஞ்சிகைகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?*

மல்லிகை, ஞானம், தாயகம், ஜீவநதி, கலை முகம், பெருவெளி, படிகள் போன்ற சில சஞ்சிகைகள் வரவேற்போடு உள்ளன. பெருவெளியை இப்போது காணவில்லை. கவிதைச் சஞ்சிகையாக யாத்ரா பிரகாசிக்கிறது. அதுவும் பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிவராமல் இருப்பது கவலைக் குரியதாகும். இன்னும் சில சஞ்சிகைகள் உள. அவற்றின் பெயர்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. அவற்றிற் சில கல்விச் சஞ்சிகைகளாக இருக்கின்றனவே தவிர இலக்கியச் சஞ்சிகைளாக இல்லை. சில ஒரு பத்துப் பதினைந்து பக்கங்களுடன் வெறும் படங்கள், குறிப்புகளோடு வந்து, சோர்வை உண்டாக்குகின்றன. எல்லாவற்றுக்குமே பொருளாதாரம்தான் முதற் காரணியாக இருக்கிறது. தனிமனித முயற்சிகளால்தான் நம் நாட்டில் சஞ்சிகை வெளியிட வேண்டி உள்ளது. இதற்கெனக் காத்திரமான அமைப்புகள் ஏற்பட வேண்டும். நல்ல பொருளாதாரப் பின்னணிகள் உருவாக வேண்டும். அர்ப்பணிப்பு வேண்டும். பொறாமையும் பூசலும் பக்கச் சார்பும் இல்லாதவர்கள் உறுப்பினர்களாக இயங்க வேண்டும். எழுத்தாளர் சங்கங்கள் சில இருக்கின்றன. அவை ஆர்வமுடன் இயங்கினாலே போதும். கூட்டம் போடுவதுடன் நின்று போகாமல், காத்திரமாக அவை இயங்கினாலே இலக்கியம் வளர்ச்சி பெறும். வேலையற்ற ஒருவன் திருமணம் முடிக்கிறான். குடும்பத்தை நடத்த வேண்டி அவன் வேலை தேடியே ஆக வேண்டும். குடும்பம் வளர வளர அவன் அதற்கேற்றவாறு உழைக்க வேண்டும். இந்தச் சஞ்சிகை விஷயமும் அப்படித்தான். சங்கம் தோற்றுவிப்பது பெரிய காரியம் அல்ல. ஒரு சஞ்சிகையைத் தோற்றுவித்து அது சாகாமல் காப்பது தான் இலக்கியம் வளர்ப்பதன் குறிக்கோள் என்ற கொள்கையை வரித்தால், அக்கொள்கையை உயிர்போற் பாதுகாத்தால் அதுவே சிறக்கும். ஆனால் இதெல்லாம் ஊமை கண்ட கனவாகவே இருந்து வருகிறது!

*கணினியின் வருகைக்குப்பின் காத்திரமற்ற பல நூல்கள் வருகின்றன என்று சிலர் குறை படுகின்றார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?*

ஒரு வகையில் இது உண்மையாகத்தான் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இது பயங்கரமாக ஆட்சி செய்கிறது எனலாம். புத்தகக் கண்காட்சிக்கு அங்கே சென்றபோது இதன் உண்மைத் தன்மையை உணர்ந்தேன். வெறும் விற்பனையை மட்டுமே மனத்திற்கொண்டும் தங்கள் பெயர் வெளிவர வேண்டும் என்பதை முன்னிட்டும் இம்முயற்சி பெருகிக் காணப்படுகிறது. ஒழுங்கான விமர்சனம் இல்லாமை முதற் காரணம் எனலாம். முதுகு சொறிதல் எங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கேயெல்லாம் இதுதான் நடக்கும். நம் நாட்டிலும் இதுதான் நிலைமை. ஒருவர் காத்திரமான சிலவற்றை எழுதிவிட்டால் விமர்சகர்கள் அவரை ஓரளவு உயரமாகவே தூக்கியும் வைத்து விட்டால், அவரை நோக்கி எல்லாப் பிரசுர களங்களும் படைப்புகளைக் கேட்டு நெருக்குகின்றன. இதனால் அந்த எழுத்தாளர் தான் எழுதுவதெல்லாம் இலக்கியமே என்று துணிந்து கிறுக்கத் தொடங்கிவிடுகிறார். காத்திரமான படைப்புகள் வெளிவர வேண்டுமென்றால், பிரசுர களங்கள் இலக்கியத்தைப் பேணுதல் வேண்டும் என்பதோடு, விமர்சனமும் நடுநிலையில் இருக்க வேண்டும். Image worship மறையவும் வேண்டும். இதற்காகக் கணினியைக் குறை சொல்ல வேண்டியதில்லை. அதை நல்வழியிற் பயன்படுத்த வேண்டியது எழுத வருகிறவர்களின் முதற் கடமையாக இருக்க வேண்டும்.

இன்னொரு வகையாகவும் நாம் இதனைப் பார்க்கலாம். கணினி வருவதற்கு முன்பு அச்சுக் கோப்புக் கலைதான் இருந்தது. அச்சுக்கோப்பின் மூலம் ஒரு நூலை வெளியிடச் செலவழிக்கும் நேரத்தில் கணினி மூலமாக இரண்டோ மூன்றோ நூல்களை வெளியிடும் விரைவு உண்டு. இதுவும் ஒரு காரணம் அல்ல எனலாம். கணினியை வாங்கக் கூடிய தகுதி ஓரளவு பொருளாதாரம் படைத்தவர்களிடமே இருக்கிறது. அவர் எழுத்தாளராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவருக்கும் எழுதி நூல் வெளியிட வேண்டும் என்ற ஆசை பிறந்துவிடுகிறது. உடனே அவராகவே ஒரு நூலைக் கணினியில் எழுதுகிறார். பிரசுரத்துக்குப் புதிய முறைகளும் அறிமுகமாகியுள்ள நிலையில் அவர் அதனை நூலாக்கிவிடுகிறார். நான்கு முதுகு சொறிபவர்களையும் சேர்த்து வெளியிடுகிறார். தனக்கென ஒரு பட்டத்தையும் அவர்களைக் கொண்டே ஏற்படுத்திக்கொள்கிறார். பிறகென்ன? ஜமாய்த்தல்தான்! புதிதாக வந்த குப்பை ஏற்றும் வண்டியில் அழகான முறையிற் குப்பை செல்லுவதுபோல் இருக்கிறது! எனவே, கணினி வந்ததால்தான் குப்பைகள் பெருகின என்று சொல்லவும் முடியாது; சொல்லவும் முடியும்.

*வாசிப்பு அருகிவிட்டது என்று சொல்லப் படுகிறதே?*

இதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. நம் நாட்டைப் பொறுத்த வரையில், அன்றுள்ள நிலைமை தான் இன்றும் வாசிப்பைப் பொறுத்து இருக்கிறது. புள்ளி விபரம் கூடவில்லையே தவிர அது குறையவில்லை. அது கூட வேண்டும் என்பதுதான் எனது ஆசையும். நல்ல படைப்புகள் பெருகுமானால் வாசிப்பும் கூடும். முதலில் நல்ல படைப்புகள் வெளிவர ஆவன செய்துவிட்டுப்

பாருங்கள்; வாசிப்பு அதிகமாக இருப்பதை உணர்வீர்கள். ஆனாற் கணினி வாசிப்பு பெருகியிருக்கிறது. எல்லாராலும் இது முடிவதில்லை என்பது ஒரு குறைபாடே தவிர இது வரவேற்கத்தக்கதுவே.

*தமிழிற் புதிய இலக்கிய முயற்சிகள், வித்தியா சமான அல்லது வழக்கத்துக்கு மாறான வர வேற்கத் தக்க மாறுதல்கள் நிகழ்கின்றனவா?*

அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழத்தான் செய்கின்றன. ஆனால் வரவேற்பு மிகக் குறைவாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் வாசிப்புப் பழக்கம் குறைவாக இருப்பதுவும் செம்மையான விமர்சனம் இல்லாமையும் வரவேற்கும் மனப்பக்குவம் இல்லா மையுமே. வாசிப்புப் பழக்கம் உள்ளவர்கள் தேடி வாசிப்பதன் மூலம் இதனை அறிகின்றார்கள். செம்மையான விமர்சனம் இல்லாமையும் வரவேற்கும் மனப் பக்குவம் இல்லாமையும், அது பொதுமக்கள் மத்தியில் முன் வைக்கப்படவிடாமல் தடுக்கின்றன. தெளிவத்தை ஜோசப்பின் குடைநிழல், கங்குலனின் (கே.கோவிந்தராஜ்) தோட்டத்து கதாநாயகர்கள், உதயனின் லோமியா, வாசாப்பு, அஷ்ரஃப் சிஹாப்தீனின் தீர்க்க வர்ணம், ஒரு குடம் கண்ணீர், (நூலாகும் பட்சத்தில் எனது நடைப்பா நெடுந்தொடர், சுடுகந்தை நாவல்) மு.பொ.வின் காலிலீலை, ஆர். எம். நௌசாத்தின் நட்டுமை போன்றவை குறிப்பிடத் தக்கவை. இன்னும் இருக்கலாம்.

*ஓசையுடனான வசனங்களுடனும் சாதாரண வசனங்களுடனும் சில கவிதைகள் வெளி வருகின்றனவே, இது ஏற்றுக் கொள்ளத் தக்கதா?*

கவிதைக்குரிய வசனங்கள் சீர்கள் என்று அழைக்கப் பெறும். சீர் என்பது சிறப்பான சொல் என்று பொருள். சீர் என்பது கவிதைக்குரியதென்றும் சொல் என்பது கட்டுரை, சிறுகதை, நாவல் என்பவற்றுக்கு உரியதென்றும் கொள்ளலாம். ஆனால் இன்று சீர் என்ற நிலைமை பெரும்பாலான கவிதைகளுக்கு இருப்ப தில்லை. கவிதை என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளாத நிலையில் ஏற்படுவது இது. மரபுக் கவிதையில் இடம் பெறும் சொற்கள் சீர்கள் எனும் வரையறைக்குள் அடங்குவன. புதுக்கவிதை எனும் ஊடகம், சீர்களாலும் சொற்களாலும் ஆகுவது. எனவே புதுக்கவிதையில் அவ்வாறு வருவதில் தவறில்லை. ஆயினும் அவை காத்திரமான சொற்களாக இருப்பின் சிறப்புக்குரியது. சிலப்பதிகாரம் சீர்களாலும் அதாவது கவிதையாலும் வசனங்களாலும் ஆன காவியமே. ஆனால் அவ்வசனங்கள்கூடக் கவிதைச் சீர்கள் போன்றன என்பது குறிப்பிடத் தக்கது. ஓசையுடன் எழுதிக்கொண்டே வருபவர், சில இடங்களை ஓசைக்குள் அடக்க இயலாமற் போகும்பொழுது வசனத்தில் இறங்கிக் கவிதையை அவசர அவசரமாக முடித்து வைக்கிறார் என்பதுதான் உண்மை! தமிழிற் புலமை குறைந்திருக்கும் போது இந்த நிலைமை ஏற்படுவதைத் தடுக்க முடியாது. ஆயினும் அவர் தனது தமிழை வளர்த்துக்கொள்வதைத் தவிர வேறு வழி கிடையாது.

*காவியங்கள் நமக்கு அவசியம்தானா?*

எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் சோம்பேறிகளாக இருப்பவர்கள் முன் வைத்த வாதம் இது. காவியம் என்பது தமிழ் இலக்கியத்தின் முக்கியமான ஒரு பகுதி. அதற்கு நிறையப் பொறுமையும் தமிழ் வாலாயமும் வேண்டும். இவ்விரண்டும் இல்லாதவர்கள், வாசகர்களிடம் கணக் கெடுத்துவிட்டுச் சொல்வதைப்போல் இவ்வாதத்தை முன் வைத்தார்கள். இது தமிழ்நாட்டில்தான் தொடங்கியது. சுகமும் தமிழ் நாட்டிலிருந்துதான் வருகிறது; நோயும் அங்கிருந்துதான் வருகிறது. இவ்வாதத்தை முன் வைத்தவர்கள் இன்று காவியங்கள் படைத்துத் தங்கள் பெயரை நிலைநாட்டிக் கொண்டுள்ளார்கள். அதை ஏதோ தாரக மந்திரம்போல் பின்பற்றியவர்கள் இங்கே துண்டுப் பிரசுரங்களோடு காணாமற்போய்விட்டார்கள்! பழந்தமிழை இன்றும் நிலைநிறுத்திக்கொண்டிருப்பது காவியங்கள்தாம். இன்றைய தமிழை நாளை நிலை நிறுத்தப் போவதுவும் காவியமாகத்தான் இருக்கும். ஆயினும் அது தாக்கமுள்ளதாக அமைய வேண்டும். அதற்காகச் சிறு கவிதைகள் தேவையில்லை என்று பொருள்கொள்ளக் கூடாது.

*மாநாடுகள் தேவையா? மாநாடுகளில் வாசிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?*

எதை நினைத்து இந்த வினாவை முன் வைக்கிறீர்களோ அதையேதான் நானும் நினைக் கிறேன். மாநாடுகள் தேவையில்லை என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு சமயத்தினருக்கும் அவ்வவர்களின் திருநாள் இருப்பதைப்போல இலக்கியத்துக்கும் ஒரு திருநாள் தேவை தான். ஒன்றுகூடவும் தங்கள் பிரச்சினைகள் குறித்துப் பேசவும் அவ்வக்காலகட்டத்தின் சிறந்த படைப்புகளைச் சமூகத்துக்கு முன் வைக்கவும் சிறந்த எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் மாநாடுகள் தேவையே. அதே நேரம் ஒருதலைச் சார்பாகவும் மாநாட்டை நடத்துபவர்கள் தங்கள் இருப்பை உறுதிப் படுத்திக்கொள்ளவும் நடத்தப்படும் மாநாடுகள் தோல்வி யையே தழுவும். அவை தேவையற்றவை. தமிழ்நாட்டில் நடந்த செம்மொழி மாநாட்டை இதற்கு உதாரணமாகப் பலர் காட்டுகின்றனர்.

ஆய்வுக் கட்டுரைகள் என்ற பெயரில் மாநாடுகளிற்

சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளை நான் பல முறையும் நோட்டமிட்டிருக்கிறேன். பத்திருபது ஆண்டுகளுக்கு முன்னர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளையே சிறிது அங்கும் இங்கும் தட்டிவிட்டு மீண்டும் மீண்டும் அவற்றை அரங்கேற்றுவதைத்தான் பலரும் கைக்கொண்டு வருகிறார்கள். சரக்கில்லாத தன்மையை இது வெளிப்படுத்துகிறது. அண்மையில் ஒரு பத்திரிகையில் தமிழ் பற்றிய ஒரு கட்டுரையை வாசிக்க நேர்ந்தது. அது சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகியது. அதிற் கொடுக்கப் பட்டிருந்த புள்ளிவிபரம் அதனை மெய்ப்பித்தது. ஒன்றில் இதனை அவர் இன்றைய வளர்ச்சியுடன் திருத்தி எழுதியிருக்க வேண்டும். அல்லது "இதனை நான் எனது பட்டத்துக்காக அன்று எழுதியிருந்தேன்" என்றாவது குறிப்பிட்டிருக்க வேண்டும்! மாநாட்டுக் கட்டுரைகளும் இந்த இலட்சணத்தில்தான் இடம் பெறுகின்றன.

அதிலும் இவற்றை ஆய்வுக் கட்டுரைகள் என்று குறிப்பிடுவது மகா பாவமாகும்! ஏனென்றால், யார் யாரோ முன்னர் எழுதியிருந்தவற்றை எடுத்துத்தான் இதனை இவர்கள் எழுதுகின்றார்கள். இது தொகுப்பே தவிர ஆய்வல்ல. அதிகமாவும் பேராசிரியர்கள் இதனைத்தான் செய்கின்றார்கள். அவர்கள் சுயமாக ஒன்றைத் துணிந்து எழுதுவதில்லை. ஏனென்றால் அதற்கு ஆதாரம் இல்லை என்று ஆகிவிடுமாம்! எனவே முன்னரே உள்ள ஆதாரத் தின்படிதான் எழுதுகின்றார்களாம். இவ்வாறு நகல் செய்வது எப்படி ஆய்வாக இருக்க முடியும்? முன்னரே நிறுவப்பட்டுள்ளவற்றை மறுத்து எழுத வேண்டும் என்று நான் கூறவில்லை. அவற்றை ஒதுக்க வேண்டியதுவு மில்லை. என்னுடைய நிலைப்பாடு என்னவென்றால், இவரால் ஏன் ஒரு புதிய பொருளை நமக்குக் கொடுக்க இயலவில்லை என்பதுதான். இதற்கொரு காரணம், கொடுக்கப்படும் தலைப்புமாகும். தலைப்பிடுபவர்களும் பழைய பஞ்சாங்கத்தையே புரட்டிக்கொண்டிருக் கின்றார்களே தவிரப் புதிய கோணத்திற் பார்ப்பதில்லை. இதிலெல்லாம் கடுமையான மாற்றங்கள் ஏற்படும் வரையில் ஆய்வுக் கட்டுரைகள் என்பது பம்மாத் தாகத்தான் இருக்கும்.

*போட்டிகள், பரிசுகள் பற்றிய சர்ச்சை தொடர்ந்து நிலவுகிறதே?*

இப்படிப்பட்ட எழுத்துலகில் அது நிலவத்தான் செய்யும்! போட்டி நடத்துபவர்கள் குழு மனப்பான்மையில் நடத்துவதுவும் ஒரு காரணம் எனலாம். தங்கள் கொள்கைக்கு ஒத்துவராத நல்ல படைப்புகளையும் அவர்கள் ஒதுக்கிவிடுவார்கள். சிலர் ஏற்கெனவே தீர்மானித்துவிட்டுத்தான் போட்டிகளை அறிவிக் கின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ்

**... எங்கே நல்ல எழுத்து இருக்கிறதோ அங்கேதான் பட்டங்களும் விருதுகளும் சென்று வாழ வேண்டும் ...**

**தனி மனித முயற்சிகளால்தான் நம் நாட்டில் சஞ்சிகை வெளியிட வேண்டி உள்ளது. இதற்கெனக் காத்திரமான அமைப்புகள் ஏற்பட வேண்டும்.**

நாட்டில் அண்மையில நடத்தப்பட்ட கு.சின்னப்பாரதி நினைவுப் போட்டியைக் கூறலாம். ஒரு மாதத்தின் முப்பதாம் திகதியைக் குறிப்பிட்டு அன்று போட்டி முடிவுத் திகதி என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த மாதம் முடிய மூன்று வாரங்கள் இருக்கும்போதே போட்டி முடிவு வெளிவந்துவிட்டது! கடந்த ஆண்டும் அதுதான் நடந்தது. ஏன் இந்தப் பித்தலாட்டம் என்று தெரியவில்லை. போட்டிகளிற் பரிசு கொடுப்பதுவும் இப்படித்தான் நடக்கிறது! சாகித்தியம் என்று இலக்கியத்தைச் சொல்வதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இதன் பொருள் வேறொன்றாக எனக்குப் படுகிறது. திறமான படைப்புகள் புறந்தள்ளப்பட்டு, "இவர் சாவைத் தழுவியவர்; இவருக்குப் பரிசு கொடுப்போம்! இவர் சாகக் கிடக்கிறார்; இவருக்குப் பரிசுகொடுப்போம்!" என்று சிலர் பரிசு கொடுப்பதால்தான் இதற்குச் சாகித்தியம் என்று பெயர் வந்ததோ என்று எண்ணத் தோன்று கிறது! அண்மையிற் புதுமையான ஓர் அறிவித்தலைக் கேட்க நேர்ந்தது. உண்மையான காவியம் ஒன்று போட்டிக்கு ஒப்படைக்கப்பட்டிருக்க, ஒரு நெடுங் கவிதைக்குக் காவியப் பரிசை அறிவித்திருக்கின்றார்கள்! இனிமேல் சிறுகதைக்கு நாவல் பரிசும் நாவலுக்குக் கவிதைப் பரிசும் அறிவிக்கப்படலாம்! திறமை மிதிக்கப் படுகிறது; செல்வாக்கு அல்லது சாவு மதிக்கப்படுகிறது! யாரால்? "இலக்கிய" நடுவர்களாலும் பரிசைத் தீர்மானிப்பவர்களாலும்! அண்மையில் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஆண்டுதோறும் பரிசளிக்கும் ஒரு நிறுவனம் வழக்கம் போல் ஒரு நடுவரிடம் பரிசீலனைக்காக நூல்களைக் கொண்டு சென்றிருக்கிறது. அவர் அந்நூல்களைத் திருப்பி அனுப்பிவிட்டார். அதற்கு அவர் சொன்ன காரணம்:- "போன முறை நான் ஏழாம் (?)இடம் கொடுத்த படைப்புக்கு நீங்கள் முதற் பரிசு கொடுத்திருக்கிறீர்கள்! எடுத்துக்கொண்டு போங்கள்!" தகுதியற்றவர்களின் பதவி அதிகாரத்தாலும் தலையீடுகளாலும் போட்டிகளுக்கும் பரிசுகளுக்கும் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. நல்ல காலமாகச் சில நல்ல

குழுக்களும் போட்டி நடத்தி வருகின்றன!

பட்டங்கள், விருதுகள் என்பன வழங்கப் படுவது இலக்கியத்தை வளர்க்கும் என்று நினைக் கிறீர்களா?

நிச்சயமாக! ஆனால் அவர்கள், இனித் தன்னை மிஞ்ச எவரும் இல்லை என்று நினைக்காமலோ இனித் தான் எழுத வேண்டியதில்லை, அல்லது இனித் தான் எதை எழுதினாலும் அது இலக்கியம்தான் என்று முடிவு கட்டாமலோ இருக்க வேண்டும்! பட்டங்கள், விருதுகள் கொடுப்பவர்கள் அவற்றைத் தகுதியானவர் களுக் குத்தான் கொடுக்க வேண்டும் என்றும் அடம் பிடிக்க வேண்டும். "நான்தான் முதலில் எழுதினேன், நான்தான் வயதில் மூத்தவன், அவனுக்குக் கொடுத்தால் எனக்கும் கொடு!" என்றெல்லாம் கொந்தளிப்பவர்கள் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள். எங்கே நல்ல எழுத்து இருக்கிறதோ அங்கேதான் பட்டங்களும் விருதுகளும் சென்று வாழ வேண்டுமே தவிர இம்மாதிரியான குறுக்கத்திகளிடம் அல்ல என்பது முக்கியம்! இவர்களை நினைத்தால் பாவமாக இருக்கிறது.



அண்மையில் காயல்பட்டினத்தில் மூன்று பேருக்குத் தமிழ் மாமணி விருது கொடுக்கப்பட்டது. அவர்களுள் நானும் ஒருவன். அது என்னைத் தேடி வந்ததே தவிர நான் அதைத் தேடிச் செல்லவில்லை. ஆனால் சிலர் அதற்காக அடித்துப் பிடித்துப் பார்த்தார்கள். காரியம் கைகூடவில்லை. என்னோடு மிக நெருக்கமாக இருந்து, எனக்கு விழாக்கள் எடுக்க வேண்டும் என்றெல்லாம் பல ஆண்டுகளாகத் தடுமாறிக் கொண்டிருந்த ஒருவர் (நான் அதற்கு இடம் கொடுத்ததே இல்லை என்பது வேறு விஷயம்.) எனக்குப் பக்கத்தி லேயே காயல்பட்டினத்தில் இருந்தும் "வாழ்த்துக்கள்" என்று ஒரு வெற்று வார்த்தையைக் கூட வெளியிட வில்லை என்பதை நினைக்கிறபோது, அவர்மீது எனக்கு எக்கச்சக்கமான இரக்கம்தான் தோன்றுகிறது! அப்படிக் கொந்தளித்த ஒருவர் இங்கும் தகுதியில்லாதவர் களுக்குத் தமிழ் மாமணி பட்டம் கொடுத்துவிட்டதாக ஒரு வாராந்தரியிற் புலம்பியிருந்தார். அதில் அவர், எனக்குக் கொடுத்தது பொருத்தமென்று எழுதியிருந்தாலும், மற்றவர்களுக்குக் கொடுத்ததில் ஏன் அவ்வளவு காழ்ப்புக் கொள்ள வேண்டும்? தனக்குக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம்தான். அது வெளிப்படையாகத் தெரிகிறது. இன்னொரு வகையினர் இருக்கின் றார்கள். இவர்கள் பார்ப்பார்கள். யாருமே தமது நூல்களைப் பற்றி இரண்டு வார்த்தை சொல்வதாக இல்லாதபோது, தாம் எதையெதைக் கேட்க விரும்புகின்றார்களோ அவற்றையெல்லாம் தம் பிள்ளைகளின் பேரில் எழுதிப் பத்திரிகைக்குக் கொடுத்துத் தோப்புக்கரணம் போட்டு அல்லது பணத்தையாவது செலுத்திப் பிரசுரிக்கச் செய்து குதூகலித்துப் "புகழ்" தேடிக்கொள்கின்றார்கள். வேறும் சிலர் எதையுமே எழுதாமலிருந்துவிட்டு இலக்கியத்தில் தங்கள் பெயர் வரவேண்டும் என்பதற்காக நிகழ்ச்சி களுக்குப் போய்ப் படம் பிடித்துப் போட்டுக்கொள்கின் றார்கள். இதை ஒரு நோய் என்றுதான் நான் சொல்லுவேன்.

தூய்மையான இலக்கியம் படைத்திருந் தாரானால் அது அவருக்குரிய மரியாதையைக் கொடுக்கும். ஆனால் இவர்கள் மனத்தூய்மை இல்லாமற் படைக்கிறார்கள். உண்மையில் இலக்கியம் என்பது எழுதியவுடனே கிடைத்துவிடும் பெயர் அல்ல. அது காலத்தால்தான் கொடுக்கப்பட வேண்டும். அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் காலம் கொடுக்கும். எழுதப்படும்போது அது எழுத்துத்தானே தவிர இலக்கியம் அல்ல. இதைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதவர்கள்தாம் தாங்கள் இலக்கியம் படைப்பதாகக் கூறிக்கொண்டு திரிகிறார்கள்! அவர்களுடைய எழுத்து சமூகத்தால் கவனிக்கப்படாமற் போகும்போது, "என்னுடைய நூல் இன்ன பல்கலைக் கழகத்திற் பாட நூலாக இருக்கிறது!" என்றெல்லாம் பிதற்றித் திரிவதை நாம் பார்க்கக் கூடியதாகவும் உள்ளது. சிலர் புனைபெயர்களால் இந்த நோயை அடக்கப் பார்க்கின்றார்கள். கவிக்குயில் கார்த்திகேசு, அசுரகவி அஸ்மத், மணிக்கவிஞன் மதார்சாகிபு என்றெல்லாம் பெயர் வைத்துக்கொள் கின்றார்கள். இதையெல்லாம் பார்த்து நாம் பாவப் படுவதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. நேர்மையான எழுத்தாளர்களும் கவிஞர்களும் இந்த மாயையில் சிக்கிக்கொள்ளமாட்டார்கள். இலக்கிய முயற்சி செய்பவனுக்கு நேர்மைதான் முதற்சொத்தாக இருக்க வேண்டும். சரி, உங்களிடம் ஒரு பரீட்சை. நம் நாட்டில் நேர்மையான எழுத்தாளர்கள், கவிஞர்கள் எத்தனைப் பேர் இருக்கின்றார்கள் என்று கணக் கெடுத்துப் பாருங்கள்!

**புதிய இலக்கிய முயற்சிகளுக்கு வரவேற்பு மிகக் குறைவாகவே இருக்கிறது. இதற்குக் காரணம் வாசிப்புப் பழக்கம் குறைவாக இருப்பதுவும் செம்மையான விமர்சனம் இல்லாமையும் வரவேற்கும் மனப்பக்குவம் இல்லாமையுமே.**

*நாவலாசிரியர் என்ற வகையில் இலங்கை நாவல்கள் பற்றிய தங்கள் அபிப்பிராயம் என்ன?*

சிறிய அளவில்தான் நாவல்கள் இங்கே வெளிவருகின்றன. என்றாலும் அது நன்முயற்சியாகவே அமைந்து வருகிறது. சினிமாக் கதைகளை நகல் செய்த நாவல்கள் சில வந்திருப்பினும், பெரும்பான்மை யானவை காத்திரமாகவே உள்ளன. இவை போதா என்பதுதான் உண்மை. காவியங்களை வேண்டாம் என்று கூறுபவர்கள் நாவலையும் வெறுப்பதில் புதினமில்லை. முன்னர் அம்முயற்சி துரதிர்ஷ்டவசமாக நின்றுபோனது. மறுபடியும் வீரகேசரியினர் அல்லது இன்னொரு வெளியீட்டாளர் இம்முயற்சியை மேற்கொள்வார் களானால் நல்ல வரவேற்பிருக்கும். இந்த நூல் வெறுமைகளை நோக்கும்போது, ஒரு கூட்டமைப்பு எவ்வளவு முக்கியமானது என்பது புலப்படுகிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஆசிரியர் வெளியீடுகள் தான் கதி. ஆனால் எல்லாக் கதாசிரியர்களும் நூல் போடும் அளவுக்கா பெருமைப்பட்டுக் கிடக்கின்றார்கள்? நான்கூட இரண்டு நூல்களை இரண்டாண்டுளாகப் போட்டு இரண்டு லட்சம் கடனில் தத்தளிக்கிறேன். எல்லாருடைய கதியும் இதுதான்.

*பின்நவீனத்துவத்தைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?*

அறிவு ரீதியில் அதனை நான் ஓரளவு அறிவேன். ஆனால் நான் அதனைப் பின்பற்றி எழுதுவதில்லை. படைப் பாளனுக்கு அவனுடைய எழுத்துத்தான் முக்கியமே தவிர எந்த இஸங்களும் இயங்களுமல்ல. இவை விமர்சகர் களுக்குரியவை. அவர்கள்தான் நாம் எழுதியதை வைத்துக்கொண்டு கதைக்கின்றார்கள். அந்தக் கதைக்கு அவர்கள் தங்கள் எளிமை கருதி கொள்ளும் அடிப் படைகள் இவை. இலக்கியம் பரிணாமம் அடைகிறது. எந்தப் பொருளுக்கும் பரிணாமம் உண்டு. இலக்கியத்தில் நாமறிந்த வரையில் முதலில் வாய்மொழிக் கதைகள் இருந்தன. பிறகு கற்பனை உருவாகியது. சீர்திருத்தப் புனைவுகள் பின்னர் வந்தன. அதன்பிறகு யதார்த்தவியல் வந்தது. அது பின்னர் நவீனம் என்று பரிணமித்தது. இவற்றின் இடையிடையே வேறு சில பிரிவுகள் வந்துள்ளன. அதற்குப் பின்னர் உருவான நிலைக்கு என்ன பெயர் கொடுப்பது என்றுகூட அறியாத நிலையில் நவீனத் துவத்தைப் பிடித்துத் தொங்கிப் பின் நவீனத்துவம் என்றார்கள். அதன் பிறகு? பின் பின் நவீனத்துவமா? சிரிப்பும் வருகிறது. மேல்நாட்டான் கண்டு பிடித்தான்; நடத்துகிறான். நாம் எதைக் கண்டுபிடித்தோம்? நமது தமிழ்க் கவிதைகளையும் அந்த இரவற் கண்ணோட்டத் தில்தான் பார்க்கத் தொடங்கியுள்ளோம்! யாப்பிலக்கணம் படித்துவிட்டுக் கவிதை எழுத முடியாது என்றவர்கள், இந்த இலக்கணத்தைப் படித்துவிட்டு ஏன் எழுதுகின்றார்கள்? சாரு நிவேதிதா போன்றவர்கள் பின் நவீனத்துவத்தைத் தங்களின் வணிகத்துக்காகத் திரித்து அமைத்துக் கொண்டதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. நம் நாட்டிலும் சிலர் அவரைப் பின்பற்றுகின்றார்கள்!

*முற்போக்கு இலக்கியம் என்று ஒன்று இருக்கிறதா?*

எது சமுதாய மேன்மை குறித்துப் பேசுகிறதோ அதுதான் இலக்கியம் எனப்படவேண்டும். அது முற்போக் கானதுதான். அதைவிட்டுவிட்டு, முற்போக்கு எழுத்தாளர்கள் நாங்கள் என்று முத்திரை குத்திக் கொண்டு அலைபவர்கள் எழுதும் எழுத்துகள் அல்ல. அவற்றுள்ளும் நல்லவை இருக்கின்றதுபோலவே தேவையற்றவையும் நிறைய உள்ளன. பெயரில் என்ன இருக்கிறது? அழகான ஒரு குழந்தைக்குக் கருப்பாயி என்றோ கருப்பையா என்றோ பெயர் இருக்கலாம். அவலட்சணமான ஒரு குழந்தைக்கு மோகினி என்றோ மோகன் என்றோ பெயர் இருக்கலாம். பொருளடக்கம் அவலட்சணமாக இருந்தால் எவ்வாறு மோகன், மோகினி எனும் பெயர்கள் பொருத்தமற்றவையாகுமோ அப்படித்தான் அழகான பொருளடக்கம் இருந்தால் கருப்பாயி, கருப்பையா என்ற பெயரும்.

*இஸ்லாமிய இலக்கியம், கிறிஸ்த்தவ இலக்கியம், சைவ இலக்கியம், பௌத்த இலக்கியம் போன்ற சொற்றொடர்களால் எதுவும் பிரயோசனம் உண்டா?*

ஆவணப்படுத்தலுக்காக இப்பெயர்களைக் கையாள்வதில் தவறில்லை. அச்சமய இலக்கியங்களைப் பொது நிலைக்குள் அடக்கப் பிரச்சினைகள் எழும்போது இவ்வாறுதான் அவற்றை அடக்க வேண்டும். சமயத் தினூடாக இலக்கியம் படைத்தல், சமயத்தைத் தவிர்த்து இலக்கியம் படைத்தல், இரண்டையும் இணைத்து இலக்கியம் படைத்தல் எனும் உத்திகள் அன்று தொட்டு வழக்கத்தில் உண்டு. இதை மாற்றுவது இயலாத காரியமாகும். எனவே இலக்கியம் தோன்றியதற்குரிய

இலக்கணமாக நாம் இதனைக் கொள்ளலாம். அதுதான் வழிமுறையும்.

கவிஞர்கள் யாப்பிலக்கணத்தைக் கற்றுத்தான் தீர வேண்டுமா?

புதுக்கவிதைக்காரர்களுக்கு யாப்பிலக்கணம் தேவை யில்லை. அதற்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றனவே தவிர இலக்கணம் எதுவும் இல்லை. வேண்டுமானால் அக்கட்டுப்பாடுகளையே இலக்கணம் என்று சொல்லிக் கொள்ளட்டும். ஆனால் தமிழ்க் கவிதைகளுக்கு இலக்கணம் தேவை என்றுதான் சொல்ல வேண்டும். ஏதாவது ஓர் ஓசையை அடிப்படை யாகக் கொண்டு எழுதப்படும் கவிதைகளுக்கு இலக்கணம் தேவை யில்லை என்றும் சொல்லலாம். ஓசைதான் இலக்கண மாக உருப்பெற்றிருக்கிறது என்ற வகையில் ஓரளவு இலக்கணமும் அதில் அமையும். நாட்டார் பாடல்களை எடுத்துக்காட்டுக்குச் சொல்லலாம். ஆயினும் செம்மை யான ஒரு கவிதைக்கு இலக்கணம் தேவையே. வெண்பா, கட்டளைக்கலித்துறை போன்ற மரபுக் கவிதைகள் இலக்கணத்தின் அடிப்படையில் அமைபவை. சிலர் வெண்பாவை, நாம் வெண்பா எனும் முறையிலல்லாது கலிப்பா எனும் வகையிற் சேர்த்துக் கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் சில வெண்பாக்கள் தளை வழுவியும் உள்ளன. அவற்றையும் புறநடை என்ற பெயரில் முன்னோர்கள் ஏற்றிருக் கின்றார்கள். நாமும் ஏற்றுக்கொள்ளலாம்.

இலக்கியத் துக்குத்தான் இலக்கணமே தவிர இலக்கணத்துக்கு இலக்கியம் இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மரபுக் கவிதை எழுதுபவர்கள் இலக்கணம் படித்திருப்பது அவர்களுக்கு உதவியாக இருக்கும். இவ்விலக்கணம் ஒன்றும் பலரும் நினைப் பதைப்போல் கடினமான ஒன்றல்ல. படித்தீர்களானால் எவ்வளவு எளிதானது என்று புரியும். ஆனால் கடினமாகத் தோற்றம் தருவது அதன் விளக்கங்களே! யாப்பிலக் கணம் முழுக்க முழுக்கப் பா வடிவத்திலேயே உள்ளது. அதற்கு முன்னோர்கள் உரை எழுதியிருக்கின்றார்கள். அவ்வுரைகளோ மிகவும் இறுக்கமானவை. விளங்கிக் கொள்ளுதல் கடினம்தான். நான் இப்போது ஒரு யாப்புரை எழுதிக் கொண்டிருக்கிறேன். புதியவர்களுக்கு ஏற்படக்கூடிய ஐயங்களுக்குரிய விளக்கங்களோடு மிக விரிவாக இதனை எழுதி வருகிறேன். அது வெளி வந்தவுடன் படித்துப் பாருங்கள். யாப்பிலக்கணம் எவ்வளவு அழகானது, எளிதானது என்பது புரியும். நீங்கள் கணினி கற்பதைவிட எளிமையானது. ■

---

# மானிடனே மாறிடாதே ...

பணம் கண்டு குணம் மாறும்
மனமே இல்லா மானிடனே !
பண்பிழந்து பேராசையிலே!
அன்பின்றி அலையாதே!

சொத்து சுகம் கண்ட கணமே
சொந்த பந்தங்களை மறவாதே !
கத்தி கணை என்று நீ
புத்தி பேதலித்து
ஆயுதங்கள் ஏந்திடாதே!

ஜாதிபேதம் பேசி
ஜோதியான வாழ்வினை
காரிருளாய் மாற்றிடாதே!

மோதி மோதியே நீ
ஓதும் வேதம் மறந்திடாதே !
நண்பனாய் வேசம் போட்டு
உண்மை பாசத்தை விஷமாக்கிடாதே !

அன்பென்ற சொல்லுக்கு நீ
அர்த்தத்தை மாற்றிடாதே!
மனித நேயத்தைக் கழற்றி வைத்திட்டு
மனிடனே நீ
மனசில்லா ஜடமாய்
மாறிடாதே !



ஹுத்பியா ஹுக்மான்
கஹடோவிட

## ஃபஹீமா ஜஹான் கவிதைகள்



### உயிர்வேலி

சூரியன் தனது வெக்கை மிகு கதிர்களால்
இலைகளை வீழ்த்திக் கொண்டிருந்த
மரமொன்றில் வந்தமர்ந்தது
பிரளயத்திலிருந்து தப்பித்து வந்த பறவை

கனிகளோ வித்துக்களோ இன்றி
ஒரு சத்திரம் போல
நின்றிருந்த மரத்திடம்
சின்னஞ்சிறு பறவைக்குக் கொடுத்திட
எதுவுமே இருக்கவில்லை

குருவி குந்தியிருந்த மரத்தின் கீழே
வீழ்ந்து கிடந்தது
இற்றுப் போன ஒரு நிழல்
தொலை தூர ஆற்றுப் படுகையில்
மறைந்து கொண்டிருந்தது கடைசிச் சூரியன்

அசைந்து வரும் கரிய யானைகளைப்
பார்த்தவாறு
கைவிடப்பட்ட தனது கூட்டை எண்ணிக்
கண்ணீர் உகுத்திடலாயிற்று

ஆடைகாத்த முட்டைகளைப்
பெருங்காற்றில் போட்டுடைத்த கரங்களில்
எல்லா அதிகாரங்களும் இருந்தது
"ஏன் செய்தாய்" எனக் கேட்க முடியாத
அடக்கு முறையில் காலம் சிக்கியிருந்தது

குருவியை உறங்க வைத்திட முடியாமல்
கிளைகளினூடே
பதுங்கிப் பதுங்கி அசைந்து கொண்டிருந்தது
இருண்ட இரவு

உள்ளேயொரு சூனியத்தை வைத்து
உயிர் வேலியொன்றைச் சுமந்தவாறு
முடிவற்ற இருளொன்றினூடாக
அந்தச் சிறு பறவை
பறந்து போயிற்று

### தீவில் தனித்த மரம்

தூர தேசப் பறவையொன்று
தங்கிச் சென்ற மரம்
மீளவும்
அந்தப் பறவைக்காகக்
காத்துக் கிடக்கிறது

தன் கிளைகள் எறிந்து தேடும்
வான் பரப்பில் பறவை
அதன் பாடலைப்
பதித்துச் செல்லவில்லை.
வேர்கள் ஊர்ந்து பரவும் மண்ணில்
அது
எந்த நிழலையும்
விட்டுச் செல்லவும் இல்லை

மலைகளிடமோ நதிகளிடமோ
பறவை தனது
பயணப்பாதை பற்றிய
செய்தி எதனையும்
பகன்றிடவே இல்லை

சூரிய சந்திரரும்
தாரகைக் கூட்டங்களும்
குருவியின் சேதிகளை
உரைத்திட மொழியின்றி மறையும்

வேர்களும் கிளைகளும்
நீளமுடியாமலொரு பெருங்கடல்
மௌனத்தில் உறைந்த
மரத்தைச் சூழ்ந்திருந்து
ஆர்ப்பரிக்கிறது நிதமும்

ஃபஹீமா ஜஹான்

கவிதை வெளி

## நேர் எதிர் எண்ணங்கள்

படிகள் 28 கிடைக்கப் பெற்றேன். கொழுந்து அநுப்பிவைத்துள்ளேன். சிற்றதழ்களின் உறவு தொடரட்டும்.

மற்றும் படிகளில் குறிஞ்சித் தென்னவன் எனும் மலையகக் கவிஞன் எனும் தலைப்பில் இளைய தலைமுறைப் படைப்பாளி செ.ஜெ. பபியான் எழுதியுள்ளார். பாராட்டுக்குரியது. காரணம், நம்மவர்களை நாமே கண்டுகொள்வதில்லை. கவிஞர் குறிஞ்சித் தென்னவனை தேடிப்பிடித்து அவரை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது மலையக கலை இலக்கியப் பேரவை என்ற அமைப்பு. அதன் 5வது ஆண்டு விழாவில் பண்ணாமத்துக் கவிராயருடன். கண்டி குறிஞ்சித் தென்னவனுக்கு கௌரவம் வழங்கினோம்.

மலையக வெளியீட்டகம் என்ற அமைப்பின் "கவிஞர் குறிஞ்சித் தென்னவன்" என்ற கவிதைத் தொகுப்பைக் கொண்டுவந்தேன். அதன் பிறகே கவிஞரின் கவிதா ஆளுமையையும் ஆற்றலையும் அனைவரும் அறிந்து கொண்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆய்வாளர் சாரல் நாடன் குறிஞ்சித் தென்னவனின் கவிச்சரங்கள் என்ற அவரது அனைத்துக் கவிதைகள் அடங்கிய தொகுதியை கொண்டுவந்தார். இரண்டாண்டுகளுக்கு முன்னர் அவரது மகளின் (திருமதி தாமரை) அனுமதியுடன் குறிஞ்சித் தென்னவனின் குறும்பூக்கள் என்ற சிறு நூலை வெளியிட்டு அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கினோம்.

பின்னர் கவிஞரின் நூற்றுக்கு மேற்பட்ட குறும்பாக்களை சூரிய காந்தி என்ற வார இதழில் ஓவியர் எஸ்.டி. சாமியின் படங்களுடன் வாரா வாரம் 100 மேல் குறும்பாக்களை பிரசுரித்தேன். அதனை ஒரு நூலாக வெளிக் கொண்டுவரவேண்டும் என்ற அவா உண்டு. அது எப்போது நிறைவேறுமோ இன்ஷா அல்லாஹ்... ...

**அந்தனி ஜீவா [கொழுந்து ஆசிரியர்]** — **கொழும்பு - 06**

படிகள் இதழ்கள் கிடைக்கின்றன. கடைசியாக வெளிவந்த இதழ் காத்திரமான இதழாக இருந்தது. பேராசிரியர் கா. சிவத்தம்பியை தமிழகத்து காலச்சுவடு முதல் ஈழத்து படிகள் வரை கணம் பண்ணியது மகிழ்ச்சிகரமானது. இப்போது ஆவரது வகிபங்கு இலக்கிய இமயமாக தெரிகின்றது. கடந்த இதழில் வெளியான மு.பொ. உடனான நேர்காணல் சிறப்பான ஒன்றாக இருக்கின்றது. படிகளில் வெளிவருகின்ற நேர்காணல் ஈழத்தில் வெறெந்த பத்திரிகையிலும் வெளிவராத அளவு தனித்துவமாக தெரகின்றன. இலக்கியச் செயற்பாட்டாளர்களின் திறமை, நிலைமை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அந்நேர்காணல்கள் அமைகின்றன. வாழ்த்துக்கள். முகஸ்துதி பாட முடியாது. படைப்பின் உண்மை நிலையை துல்லியமாக காட்ட வேண்டும். கருத்துக்கள் சிறப்பானதாக இருக்க வேண்டும். குறிப்பாக சொந்த விபரங்களை பட்டியல் படுத்தாது இலக்கியத் தரவுகளை தரவேண்டும். அது நேர்காணலுக்கு இருக்க வேண்டிய பண்பு. கடந்த இதழில் வெளியான மொழிபெயர்ப்பு சிறுகதையும், சோ.பாவின் கவிதையும் நன்று வாழ்த்துக்கள்.

**அஸாரி** — **திருகோணமலை.**

படிகள் கைக்கு அடக்கமான பத்திரிகை. அச்சுத்தாள்களின் தரம் நன்றாக இருக்கின்றது. அழகான முறையில் அச்சிடப்படுகின்றது. ஆயினும் பிழை திருத்துவதில் கவனம் தேவை. படைப்புகள் கவிதைகளாக மட்டுமின்றி, சிறுகதைகள், விமரிசனங்கள், பத்தி, நேர்காணல் வடிவங்களிலும் அமைய வேண்டும் என்பதில் எமக்கு பூரண உடண்பாடு உண்டு.

படிகள் ஒரு இதழ் வந்து அடுத்த இதழ் வருவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது. படிகளைக் காணவில்லையே என்று பார்த்துப் பார்த்து காத்திருப்பதில் பாதியுயிர் போய்விடுகின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஏதாவது வழிபண்ணுங்களேன். படிகள் மென்மேலும் முன்னேறிச் சாதனை படைக்க எனது நல்வாழ்த்துக்கள்.

**கா. தவபாலன்** — **பேராதனை**


**படிகள் இதழில் உங்கள் நிறுவன விளம்பரங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்**

| | | |
|---|---|---|
| விளம்பரக் கட்டணம்: | பின் அட்டை முழுப் பக்கம் (வர்ணம்) | 3500.00 |
| | உள் அட்டை முழுப்பக்கம் (2 வர்ணம்) | 2000.00 |
| | சாதாரண பக்கங்கள் (கறுப்பு வெள்ளை) | 1000.00 |

இசையில் இரு நிலை வகைப்பாடுகள் உண்டு. அவை "புறநிலை இசை, அகநிலை இசை" என்று அழைக்கப்படும். புற நிலை இசை பாடுவோராலும், பிறராலும் அனுபவிக்க முடியும். அக நிலை இசை, பாடுவோரால் மட்டும் அனுபவிக்கத்தக்கது. மேற்கூறிய இரு நிலை இசைகளும் ஆடலிலோ நேரடியான பங்களிப்பைச் செய்கின்றன.

உணர்வுகளை அனுபவித்தலோடும் வெளிப்படுத்தலோடும் ஆடல் தொடர்புடையது. இசையும் அவ்வகை இயல்பைக்கொண்டதால் இல்பாக அவை இணைந்து கொள்கின்றன. புவியீர்ப்பும் அதற்கியைந்தவாறு உடலைச் சமநிலைப்படுத்தலும் ஆடல் அசைவுகளைக் கட்டுப்படுத்துகின்றன. ஆடலின் அசைவுகள் அழகுபடுத்தப்படுகின்ற. வரன்முறையாக ஒழுங்கமைக்கப்படுகின்றன. இசையிலும் இதே செயற்பாடு இடம்பெறுகின்றது. ஒலிப்பு ஒழுங்கு படுத்தப்படுகின்றது. கட்டுப்படுத்தப்படுகின்றது. பொருத்தமான அசைவு ஒலிப்புக்களால் வளமூட்டப்படுகின்றது. ஆடல் என்ற கலையாக்கம் செய்யும் நடவடிக்கை "ஆடலியல்" (Choreography) எனப்படும், அனைத்து அசைவுகளும் ஆடல் அன்று. அழகியல் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அசைவுகளே ஆடலாகின்றது. சில சமயங்களில் குறிப்பிட்ட உடலசைவு நிலையில் அசையாது உறைந்து நிற்றலும் அழகைத் தூண்டும் ஆடலாகின்றது. ஆடலியலாளர் "போல் ரெயில்" இந்தப் பரிசோதனையைத் திறம்பட செய்து காட்டினார்.

தீவிரமான பரிசோதனைகளும் புத்தாக்கங்களும் மேலைப்புல ஆடற்கலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான பரிசோதனைகளுக்கு இசையும் ஒன்றிணைந்து ஈடுகொடுக்கத் தொடங்கியுள்ளது. ஆடல் என்பது இசை, கதை, எடுத்துரைத்தல், பாத்திர வளர்ச்சி என்ற நாடகப் பாங்கானதாக மாறும் பொழுது தான் அழகும் அர்த்தமும் பெறும் என ஆடலியலாளர் ஜீன் ஜோர்யெஸ் நொவீரோ மற்றும் மைகல் பொகினி ஆகியோர் வலியுறுத்தலாயினர்.

# ஆடலும் இசையும்

தம்பு சிவா

உடலை கருவியாக்கி கலையாக்கம் செய்தல் ஆடலாகின்றது. உடலியக்கப் பாரத்தை கட்டுப்படுத்தலும் முக்கியத்துவம் பெறுகின்றது. வெளிபற்றிய பிரக்ஞை முக்கியத்துவம் பெறுகின்றது. இவை அனைத்தையும் ஒன்றிணைப்பதற்கும் மீளவலியுறுத்தும் விளைவைக் கொடுப்பதற்கும் இசையானது விசையூட்டியாக விளங்குகின்றது. ஆடலும், இசையும் அரங்கும் ஒன்றையொன்று தழுவியே வளர்ந்து வந்துள்ளன.

ஆடல், இசை, நாடகம் என்பவற்றுடன் பார்வையாளரும் பிரிக்கப்படாதிருக்கும் இணைப்புத் தொகுதி காணப்பட்டது. தமிழ் மரபில் ஆடல் என்பது இசையுடன் கூடிய ஒன்றிணைப்பை பலப்படுத்தியது. ஆடலின் சிறப்பார்ந்த கூறாக இசை அமைகின்றது. ஆடல் உடலின் ஒத்திசை வையும் இசை ஒலியின் ஒத்திசைவதையும் தாங்கி நிற்றலால் உராய்வற்ற இணக்கப்பாடு இரண்டுக்குமிடையே காணப்படுகின்றது. இசையின் சீர்த்தொடர்ச்சியை பின்பற்றி இசையும் இணக்கப்பாடு கொள்ளல் உண்டு. பரதநாட்டியத்தில் இந்தத் தொடர்புகள் தாளத்தினால் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. ஆடல் வளர்ச்சியை உன்னதங்களை நோக்கி முன்னெடுத்துச் செல்வதற்கு இசை தவிர்க்க முடியாது வேண்டப் படுகின்றது. ஒழுங்கமைந்த நேரக்கோலமும் ஆடற்கோலமும் நெறிப்பாடு கொண்ட இசையுடன் இணைந்தவை. இசையின் கால அளவும் ஆடலின் கால அளவும் ஒன்றிணையும் போது சுவைமேம்பாடு அல்லது அழகியல் மேம்பாடு அதிகரிக்கின்றது.

அதேவேளை ஆடுபவரின் மனக்கோலங்களை வளர்ப்பதற்கும் மீளவலியுறுத்துவதற்கும் இசை பெருமளவிலே துணைசெய்த வண்ணமுள்ளது. பரத நாட்டியத்தின் நிருத்தியத்தின் அதாவது மனவெழுச்சி வெளிப்பாட்டு ஆடல் களில் இசையின் பங்களிப்பு சிறப்புமிக்க பரி மாணமாக அமைகின்றது. மேலைப்புலத்துப் பலே நடனங்களில் கள நிலவரத்தை வலுவூட்டுவதற்கும் பாத்திரப்படைப்பை வளமாக்கி மெருகூட்டுவதற்கும் இசையின் பங்களிப்பு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஆனால் இசை வேறு ஆடல் வேறு என்ற எண்ணங்களும் தொடர்ந்த வண்ணமுள்ளன. இசையை முற்றாக புறக் கணித்துவிட்டு ஆடலாக்கம் செய்யும் ஆடலிய லாளரும் மேலை நாடுகளில்

காணப்படுகின்றன. இசையையும் ஆடலையும் இணைத்து ஆடலாக்கம் செய்யும் பொழுது, யாதாயினும் ஒன்று சுவைப்போரால் தவறி விட்டு விடப்படுகின்றது என்று கனிங்காம் கருதினார். அதாவது இசையிற் கவனக் குவிப்பை ஏற்படுத்தும் பொழுது ஆடல் தவறவிடப் படுகின்றது. ஆடலிலே கவனக்குவிப்பை ஏற்படுத்தும் பொழுது இசை தவறவிடப்படுகின்றது என்று அவர் விதைந்துரைத்தார்.

தெய்வீக நடனங்களில் மனோவசியக் கருத் தோற்றங்களை உருவாக்குவதற்கும் கைதட்டல் உள்ளிட்ட இயற்கை ஒலிகளும் செயற்கை ஒலிகளும் பயன்படுத்தப் படுதல் உண்டு. உள நிலைக்கும், உடல் நிலை எழுச்சி யூட்டலுக்கும் தெய்வீக நடனங்கள் ஆடலுடன் இசையின் சேர்வையையும் நாடி நின்றன. தமிழர் ஆடல்களிலும் இந்திய ஆடல்களிலும் காற்சதங்கை அசைவோடு இணைந்த இசை ஒலி எழுப்பலை அடிப்படையாகக் கொண்டு ஆடல் நயம் மேலெழுந்தது.

நவீன உலக ஆடல் வளர்ச்சியிலே பெரும் பங்களிப்பைச் செய்த வல்லுநராக fokine விளங்கு கிறார். அவர் தயாரித்த "அக்கினிப் பறவை" (The fir bird) என்ற ஆடல் ஆக்கம் பல்வேறு பரிசோதனைகளை உள்ளடக்கிய கலை விசையாக அமைந்தது. "ஆக்கினிப் பறவை" ஆற்றுகையில் பொருத்தமான, இசைத் துண்டங்களையும் ஒன்றிணைத்தார். அவரது புத்தாக்கங்களில் அலங்கார மற்ற அசைவுகளும் ஒன்றிணைக்கப்பட்டன. ருசிய கிராமிய நடனங்களிலே காணப்பட்ட மெய் வல்லுனர் அசைவுகளையும் அவர் ஆடல் வீச்சுக்குள் கொண்டு வந்தார். நவீன உலக ஆடற் கலையில் உளவெளிப் பாட்டியலுக்கு முக்கியத் துவம் தந்தவர்களுள் இச தோராடங்கன் அவர்கள் சிறப்புப் பெறுகின்றார். "உடலின் இயற்கையான அசைவுகள் முதன்மைப் படுத்தப்பட வேண்டுமேயன்றி இசை முக்கியமானதன்று" என்பது அவரின் கருத்தாக அமைந்தது. அதேவேளை ஆடலின் தெய்வீக வெளிப்பாட்டுக்கும் அவர் முக்கியத்துவம் வழங்கினார். சிற்பங்களிலே காணப்படும் ஆடல் அசைவு களைத் தமது ஆற்றுகையிலும் பயன் படுத்தலானார்.

1960ஆம், 1970ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் உலக ஆடல் அரங்கில் பின் நவீனத்துவத்தின் செல்வாக்கு பரவலாக இடம் பெறலாயிற்று. சாதாரண அசைவு களையும், ஆடலாக்குதல் பின் நவீனத்துவ ஆடலின் வலியுறுத்தலாக அமைந்தது. சிக்கலான மற்றும் அலங்காரமான அசைவுகள் நடப்பியலை திரிவுபடுத்தி விடுமென அவர்கள் கருதினர். மரபுவழியாக பின்பற்றப் பட்டு வந்த ஆடை அசைவுகளினை அவர்கள் நிராகரித்து எளிமையான அசைவுகளை முன்னெடுத்தனர். சிக்கலான மேலாதிக்கம் கொண்ட இசையையும் நிராகரிப்புக்கு உள்ளாக்கினர்.

இடைவெளி, நேரம், ஆடுபவரது உடல்நிறை மற்றும் வலிமை என்பவற்றை ஆடலில் முக்கியப் படுத்தல் வேண்டுமேயன்றி பாரம் பரியங்களையும், மரபுகளையும் அல்ல என்பதைப் பின் நவீனத்துவ ஆடல் வல்லுனர்கள் தீவிரமாக வலியுறுத்தினர். சாதாரண உடையுடன் ஆடல் மேற்கொள்ளலும், மாமூலான அரங்குகள் இன்றி ஆடல் புரிதலும் அவர்களால் முன்னெடுக்கப்பட்டன. பேருங் கதையாடல்கள் அல்லது பெரும் உரையாடல்கள் ஆடலின் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டன. நவீன உலகின் ஆடற் கோப்புக்கள் புதிய இசை வகைகளை உள்ளீர்க்கத் தொடங்கியுள்ளன. ஜாஸ் இசை, டிஸ்கோ இசை, முதலியவை இலாவகமாக ஆடலில் ஒன்றிணைக் கப்பட்டு வருகின்றன.

**■■ தீவிரமான பரிசோதனைகளும் புத்தாக்கங்களும் மேலைப்புல ஆடற்கலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ■■**


இசையைப் பொருட்படுத்தல், இசையை பொருட்படுத்தாது ஆடலைத்தனித்து தூயவடிவமாக முன்னெடுத்தல் என்ற இருவிதமான கண்ணோட்டங்கள் அல்லது முரண்பாடுகள் நடனவுலகிலே தொடர்ந்த வண்ணமுள்ளன. அவ்வாறே கதை தழுவிய ஆடற் கலை, தழுவாத ஆடல் அல்லது கதையைப் பொருட் படுத்தாத ஆடல் என்ற அணுகுமுறைகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன. மேலும் அலங்கார ஆடை அணி களுடன் ஆடுதலும், எளிமையான ஆடைகளுடன் ஆடுதலும் என்ற இருமைப் பாங்குகளும் வளர்ந்த வண்ணம் உள்ளன.

சமூகத் தோற்றம் பெற்ற தனிச் சொத் துரிமையும் தனியுரிமைச் சிந்தனைகளும் கலை பற்றிய நோக்கிலும் செல்வாக்கை ஏற்படுத்தலாயின. அதனடிப் படையிற் கூட்டு வடிவங்களைத் தனிமைப் படுத்தல் மேலெழலாயிற்று. பாரம்பரியமாக இருந்து வருகின்ற பரத நாட்டியக் கலையில் இசையும் முக்கியத் துவம் பெற்றுள்ளது. பரத நாட்டியத்தில் நட்டுவாங்கம் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருப்பதுடன், நடனத்துக்கும் பக்க வாத்தியங்கள் மெருகூட்டுவனவாக இருப்பதைக் காணலாம். நடனம் ஆடுபவர், நட்டு வாங்கம் செய்பவர், மற்றும் பக்க வாத்தியக் கலைஞர்கள் ஒன்று சேரும் போது தான் நடனக்கலைக்குச் சிறப்பு, இசையுடன் கூடிய நடனம் தான் புத்துணர்ச்சி ஊட்டவல்லது.

அதேபோன்று நாட்டுப்புறக் கலைகளுக்கும் இசை இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. கரகம், காவடி, கோலாட்டம், கும்மி, கூத்து போன்ற கலைகள் இசையுடன் ஒன்றிணைந் திருப்பதைப் பார்க்கும் போது ஒன்றுக் கொன்று முக்கியமானதாக இருக்கின்றது. நவீன சிந்தனை மரபுகள் எப்படி இருந்த போதிலும், எமது பரம்பரியக் கலைகள் மறைந்து போகாமல் இருப்பதற்கு ஆடலும் இசையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வையாக இருக்கின்றன. ■

# நாளைய சுதந்திரப் பறவை

கன்னிமுத்து வெல்லபதியான்



என்னைக் கைப்பிடித்ததிலிருந்து
ஒரு கூண்டுப் பறவையாகவே
கணக்கெடுக்கின்றாய் நீ...

நேற்றைய அர்த்தராத்திரிப் பொழுதுகளில்
என் கண்ணங்களில் நீ
அறைந்த ஒவ்வொன்றின்போதும்
தெரித்த உணர்வுத் துளிகள்
ஒவ்வொன்றும் – இன்றும்
என் வீட்டு அடுக்களைச் சுவர்களில்
கறைபடிந்த சித்திரங்களாய்
உன் அடாவடித் தனங்களின்
பிரதி விம்பங்களை
பதிவாகிக் காட்சி தருகின்றன.

நீ நினைத்திருக்கலாம் என்னை
ஊமை வித்தென்று
நீ நினைத்திருக்கலாம் என்னை
ஆசைக்கும் மோகத்துக்கும் மடடுமான
இன்பக் கட்டிலென்று
நீ நினைக்கலாம்
எப்படியும் இவளை
கட்டி ஆளலாமென்று
ஒரு மிருகத்தைப் போல ...

உனது அடியும் உதையும்
ஆக்கினைகளும் தினமும் தொடர்ந்த
கொடுமைகளும்
கடந்த மூன்று தசாப்தகால
உள்நாட்டுப் போரைவிடவும்
உக்கிரமானது...

ஆனாலும் இன்று
நான் உனது
அடக்கு முறைகளையும்
ஒடுக்கு முறைகளையும்
உடைத்தெறியும்
மனவலிமையோடும்
உள்ளக் கொதிப்போடும்
ஆழ்கடல் குமுறலையும்
சீறும் புயலாயும்
பாரதியின் அக்கினிக் குஞ்சாயும்
இன்னும் அந்த
பீனிக்ஸ் பறவையாயும்
புரட்சிப் பெண்ணாக
உயர்ச்சி பெறுவேன்

ஓ இனி நான்
கூண்டுப் பறவை அல்ல
கூட்டினை உடைத்தெறியப் போகும்
சுதந்திரப் பறவை

**உங்கள் கருத்துக்களை, படைப்புகளை, விமர்சனங்களை ஆலோசனைகளை கணனியில் தட்டச்சு செய்து எமது படிகள் பதிப்பக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்தால் இதழின் தயாரிப்பு தாமதத்தை தவிர்க்க முடியும்.**

**படிகள் சஞ்சிகையை உங்கள் சகோதர எழுத்தாளர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்துவைங்கள். படிகள் இதழுக்கான சந்தாவை பதிவு செய்து இதழை வளமூட்டுங்கள்.**

**ஈழத்து இலக்கியத்தின் பரிசோதனைக்கு ஏற்ற விதத்திலான ஆக்கங்களுக்கூடாக புதிய பரிமாணம் தர படிகள் காத்திருக்கின்றது.**


ஓரான் பாமுக்

# தாய் நாட்டை இழிவுபடுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டவருக்கு நோபால் பரிசு

எல். வஸீம் அக்ரம்

இலக்கியத்திற்கான நோபல் பரிசை கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில் பெற்றவர்களில் கே.எம்.கூட்சியைத் தவிர ஏனைய அனைவரையைக் காட்டிலும் மகத்தான எழுத்தாளர் ஓரான் பாமுக். தன் நாடான துருக்கியையே இழிவுபடுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைகளைக் கண்டிருந்த ஓரான் பாமுகிற்கு கடந்த 2007ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபால்பரிசு கிடைத்துள்ளது.

பொதுவாவே, சர்ச்சைகளுக்கு உள்ளாகதவர்களையே தனசு பரிசுக்கு உரியவர்களாகத் தேர்ந்தெடுக்கும் நோபல் பரிசுத்தேர்வுக்குழு, பாமுக்கை தேர்ந்தெடுத்துள்ளது என்பது வியப்பின் சரித்திரமாகவே இருக்கின்றது. அப்படியாயின் பாமுகின் எழுத்தின் மகத்துவம் எவ்வாறானதாக இருக்கும் ? இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கு கடந்த ஆறு அல்லது ஏழு ஆண்டுகளாக எதிர்பார்க்கப்பட்ட போதும், அது பிந்தியே சாத்தியமானதாக இருக்கின்றது. இவர், துருக்கியின் இஸ்தான்புல்லில் நிஸ்டான்சி மாவட்டத்தில் பிறந்தார்.

துருக்கியின் நவீனமான நிஸ்டான்சி மாவட்டத்தில் தனது நாவல்களான Cevdet bey and his sons, The black book போன்றவற்றில் குறிப்பிடப்படும்: பெரிய குடும்ப அமைப்பில் வளர்ந்தவர். சிறு வயது முதல் வாலிபராகும் வரை ஓவியங்கள் வரைவதிலேயே ஆர்வம் கொண்டிருந்தார். ஓவியராக வரவேண்டும் என்ற கனவும் இருந்தது. இஸ்தான்புல்லின் அமேரிக்க ரொபர்ட் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்த அவர், ஓவியத்துறையில் இருந்த ஆர்வம் காரணமாக கட்டடக் கலையில் மேற்படிப்பை மேற்கொண்டார். ஆனால் திடீரென ஓவியத் தின் மீதான காதல் அற்றுப்போக கற்கை நெறியை பாதியில் நிறுத்திவிட்டு பத்திரிகைத் துறையில் மேற்படிப்பை மேற்கொண்டார். ஆனால் என்றுமே பத்திரிகையாளனாக அவர் பணியாற்றவில்லை.

தனது 23வது வயதில் தான் ஒரு நாவலாசிரியராக வரவேண்டும் என்று எண்ணினார். எழுத ஆரம்பித்தார். அதுவரை எழுதுவதைத் தவிர வேறெதையும் அவர் செய்யவில்லை. அவரது முதலாவது நாவலாக Cevdet bey and his son வெளியானது. பாமுக்கின் சொந்த ஊரான நிஸ்டான்சியில் வசித்த ஒரு குடும்பத்தின் மூன்று தலைமுறை பற்றிய கதை அது. ஓர்சன் கெமல் விருது மற்றும் மிலியட் இலக்கியப் பரிசுகளை இந்நாவல் வெற்றி பெற்றிருக்கின்றது. அதற்குப் பிந்தி வெளிவந்த The silent House இன் பிரஞ்சு மொழிபெயர்ப்பு Prix De la Decourerte enropeena விருதினைப் பெற்றது.

ஒட்டமான் கல்வியலாருக்கும் அடிமை யொருவருக்குமிடையிலான உறவு களை விபரிக்கும் White Cecity முதல் தடவையாக பாமுக்கிற்கு சர்வதேச புகழை ஈட்டித் தந்தது. அவரது The black book இன் பிரஞ்சு மொழிபெயர்ப்புக்கும் சர்வதேச விருது கிடைத்தது. முக்காலங்களை ஒரே வேகத்துடன் விபரிக்கும் எழுத்தாளர் என்ற பெயர் பாமுக்கிற்கு இந்நாவல் மூலம் கிடைத்தது. துருக்கிய இலக்கியத்தில் அதிகளவில் வாசிப்புக்கு உள்ளாகும் The New life எனும் நாவலுக்கு சொந்தக் காரானகவும் திகழ்கின்றார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் சுவிஸ் பத்திரிகையொன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் முதலாம் உலகப் போரின் போதும் அதன் பின்னரும் ஓட்டமான் சாம்பிராஜ்ஜியத்துக்கு எதிராக கூட்டுச் சேர்ந்ததாக குற்றம் சாட்டப்பட்ட சுமார் பத்து இலட்ச ஆர்மேனியர்கள் கொல்லப்பட்டதாக கூறினார். தன்னைத் தவிர வேறெந்த துருக்கியரும் இதுபற்றிக் கருத்துக் கூற துணியவில்லை என்றும் அவர் கூறினார். துருக்கியத் தன்மையை இழிவு படுத்தியதற்காக பாமுக் மீது துருக்கி வழக்குத் தொடர்ந்திருந்தது. உலகம் முழுவதிலுமுள்ள அறிவுஜீவிகள், கலைஞர்கள், மதச்சார் பற்றவர்கள் போன்றவர்களுடன் ஐக்கிய நாடுகள் சபை கூட பாமுக்கிற்கு எதிரான வழக்கை கண்டித்தனர்.

உலகளாவிய எதிர்ப்பைச் சமாளிக்க முடியாமல் பாமுக் அவ்வழக்கில் இருந்து விடுபட்டார். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எழுதிவரும் பாமுக்கின் படைப்புகள் சுமார் 40 மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளன. இப் படைப்பாளி சர்ச்சைகளுக்குள் இருந்த காலப் பகுதிகளிலே இவருக்கு நோபால் பரிசு கிடைத்துள்ளது. இது வரலாற்றில் முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்க செய்தி.





Gift Items, Fancy goods,
Stationary Items, Sports Items
Try Cycles & Electrical Items etc...

# GIFT CHOICE

Market Site, Anuradhapura








**General Merchants, Balding Materiels &**

**Agency of Holcim Sansta Cement**

# North Agency

169, Market Site,
Anuradhapura
Tel: 025 2236254, 025 3852906

PRIVATE CIRCULATION ONLY

அநுராதபுர மாவட்டத்தின் சமூக அபிவிருத்திக்கான செயற்றிட்டங்களில் ஈடுபாடுகளை காட்டியமைக்காக தேசமான்ய விருதை பெற்ற அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். தாரிக் அவர்களுக்கு அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழவின் படிகள் பதிப்பகம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்கின்றோம்.




L.L.No: 2158

ARM

Travels & Tours

Haj Umra Operator

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்

அநுராதபுரம் ஹஜ் உம்ரா ஏற்பாட்டாளர்

114/1A, Market Side, Anuradhapura, Sri Lanka

Tel: 025 2237933, 077 3041689, 071 6868770

New Wimali - 025-2234692